பக்கங்கள் : 32

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 13 ஞாயிற்றுக்கிழமை (30.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 338

## புதுடில்லியில் தொடர் குண்டுவெடிப்புகள்!

புதுடில்லி,ஒக்.30

குறித்த நேர இடைவெளியில் அடுத்தடுத்து தொடர்ச்சியாக இடம்பெற்ற பெரும் குண்டுவெடிப்புகளால் இந்தியத் தலைநகரில் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தீபாவளிப் பண்டிகை வியாபாரம் களைகட்டியிருந்த வர்த்தக மையங்களில் நடத்தப்பட்ட இந்தக் குண்டுத் தாக்குதல்களில் ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கின்றனர்.

சுமார் பத்து பதினைந்து நிமிட நேர இடைவெளியில் மூன்று குண்டுகள் வெடித்ததால் நகரம் அல்லோலகல்லோலப்பட்டது. குண்டுகள் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

பகர்காஞ்ச், சறோஜினிநகர், கோந்தபூரி ஆகிய இடங்களில் கடைத்தொகுதிகள் நிறைந்த இடத்தில் நேற்று மாலை தீபாவளிக்காகப் பொருள்களைக் கொள்வனவு செய்யப் பெரும் தொகையான மக்கள் கூடியிருந்த வேளையிலேயே குண்டுகள் வெடித்தன..

குண்டுகள் வெடித்ததும் மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர். நகரப் பகுதிகள் எங்கும் பெரும் நெரிசல் ஏற்பட்டது. அடுத்த குண்டு எங்கே வெடிக்கும் என்பது தெரியா





மல் பாதுகாப்புப் பிரிவினர் திணறினர்.

உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் ஆங்காங்கே வீழ்ந்துகிடந்தனர். ஆஸ்பத்திரிகள் காயமடைந்தவர்களால் நிரம்பின. பெரும் எண்ணிக்கையானோர் காணாமற்போயிருக்கின்றனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பெருந்தொகையானோரைக் கொல்லும் நோக்குடன் தீவிரவாதிகள் மேற்கொண்ட நாசகாரச் செயல் இது என்று டில்லியில் உள்ள உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தூர் சூட்டு சம்பவத்துக்காக

# இன்று துக்கம் அனுஷ்டிப்பு!

## கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு சோக கீதம் இசைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர் 30

**புத்தூர் கிழக்கில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது படையினரும் பொலீஸாரும் கூட்டாக நடத்திய கொடூரமான தாக்குதலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்திருக்கும் பொது அமைப்புகள், படையினரின் சூட்டுக்குப் பலியான இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்றைய நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.**

யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள்,பொது இடங்களில் கறுப்புக்கொடிகளைப் பறக்க விடுமாறும் சோககீதம் இசைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

புத்தூர் கிழக்கில் அப்பாவிப் பொது மக்கள் மீது படையினரும், பொலீஸாரும் கூட்டாக நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் பலியான இளைஞனுக்கும் காயமடைந்தோருக்கும் அனுதாபம் தெரிவிக்கு முகமாக இன்று சகல வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அறிவித்திருக்கின்றது.

புத்தூர் சம்பவம் குறித்து வர்த்தக சமூகத்தின் அதிர்ச்சியையும் கடும் கண்டனத்தையும் வெளிப்படுத்தி அறிக்கை ஒன்றை சம்மேளனம் நேற்று விடுத்திருந்தது.

புத்தூர் சம்பவம் தொடர்பாக அரசு விசாரணைக் குழு ஒன்றை அமைத்து தகுந்த

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஆந்திரா ரயில் விபத்தில் 250 பயணிகள் பலி!



திருவனந்தபுரம்,ஒக்.30

ஆந்திரா மாநிலத்தில் நேற்று அதிகாலை ரயில் ஒன்று தடம்புரண்டு ஆற்றில் வீழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் 250 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. 50 இற்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆந்திராவின் நலபொண்டா மாவட்டத்தில் இந்த ரயில் விபத்து இடம்பெற்றது. அங்கு தொடரும் கனமழை காரணமாக தண்டவாளத்தில் வெள்ளம் கரைபுரண்டோடியதே இந்த விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் ஏழு ரயில் பெட்டிகள்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் நேற்று அசம்பாவித சம்பவங்கள் இல்லை

அச்சுவேலி,ஒக்.30

நேற்றுமுன்தினம் பெரும் மோதல் களமாக மாறியிருந்த புத்தூர் கிழக்கு அண்ணமார் கோயில் பகுதியில் நேற்று அமைதி நிலவியது. எனினும் அப்பகுதியில் இருந்து பீதியால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் இருப்பிடங்களுக்குத் திரும்பவில்லை.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் குண்டுவெடிப்புச் சத்தம் ஒன்று பெரிய அளவில் கேட்டது. இதனால் மக்கள் மத்தியில்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணைப் பாலம் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்30

புனரமைக்கப்பட்ட பண்ணைப் பாலத்தினூடான போக்குவரத்து நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

திருத்த வேலைக்காக கடந்த 15ஆம் திகதி பாலம் மூடப்பட்டு விசேட படகுச் சேவைகள் மூலம் மக்களுக்கான மாற்றுப் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாலம் திறக்கப்பட்டதை அடுத்துப் பயணிகள் நேற்று முதல் தமது பயணத்தை இலகுவாக மேற்கொண்டதைக் காணமுடிந்தது.

(ஐ-12-7-ரி)

## றக்கா வீதியில் படை நிலை மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.நகரில் றக்கா வீதியில் அமைந்திருக்கும் இராணுவத்தினரின் காவலரண் நேற்று நண்பகல் கிரனேட் தாக்குதலுக்கு இலக்காகியது.

றக்காவீதியில், புனித ஜோண் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள காவலரண் மீதே மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் கிரனேட் ஒன்றை வீசினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிரனேட் பலத்த சத்தத்துடன் வெடித்தது. எனினும் படையினருக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

றக்காவீதி வழியாக மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணிந்து வந்த இருவர் அருகே மருதடிலேன் வளைவில் திரும்பியபோது காவலரணை நோக்கி கிரனேட்டை வீசினர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தை அடுத்து யாழ்.பொலீஸ்

(22ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி வாசி உட்பட இருவர் வவுணதீவில் படையினரால் கைது!

மட்டக்களப்பு,ஒக்30

வவுணதீவு இராணுவ முகாம் சோதனை நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட இருவரைப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இயங்கும் தொண்டு நிறுவனம் ஒன்றில் முகாமையாளராகப் பணியாற்றும் யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த சண்முகலிங்கம் சுதந்திரன் மற்றும் அவரது உதவியாளரான கந்தலிங்கம் யுதா என்பவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு நகருக்கு வரும் வழியில் வவுணதீவு சோதனை நிலையத்தில் இருவரையும் படையினர் சோதனை செய்தனர். அவர்கள் வசம் 24 லட்சம் ரூபா பணம் இருந்துள்ளது.

சோதனையின் போது இருவரும் முரண்பாடான தகவல்களைத் தெரிவித்ததாகக் கூறி இருவரையும் படையினர் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் நாளை வருகை

கொழும்பு,ஒக்.30


ஜனாதிபதி தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் இரு பிரதிநிதிகள் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

தேர்தலுக்கு முன்பாக நடைபெறும் பிரசாரம் மற்றும் தேர்தல் பணிகளைக் கண்காணிக்கும் கடமையில் அவர்கள் செயற்படுவர். தேர்தல் முடியும் வரைஅவர்கள் இங்கு தங்கியிருப்பர் என்று கூறப்பட்டது.

தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 9பேர் நேற்றுமுன்தினமும் 24 பேர் நேற்றும் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

மேலும் 44 பேர் எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பு வரவிருக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் 11இடங்களில் அலுவலகங்களைத் திறந்து செயற்படவிருக்கின்றனர்.

(ஐ-3)




றக்கா வீதியில் நேற்று கிரனேட் வீச்சுக்கு இலக்கான இராணுவத்தின் காவலரணை முதல் படத்திலும் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் கலகம் அடக்கும் பொலீஸார் தீவிர காவலில் ஈடுபட்டிருந்ததை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் :பிரபா)

# அம்பாறையில் சிங்கள வாலிபர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,ஒக்.30

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் சிங்கள இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் கண்ணகிபுர முகாமில் வசித்து வந்தவரான என்.எஸ்.அபயரத்தின (வயது 38) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சைக்கிளில் சென்றகொண்டிருந்த இவரை மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் கோணாவில் சந்தியில் வைத்து வழிமறித்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-3)

# புத்தூரில் படையினரின் சூட்டுக்குப் பலியான இளைஞனின் மரண விசாரணை புதனன்று

## படை அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

புத்தூரில் நேற்றுமுன்தினம் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தர்மராசா நிரோஜன் என்பவரின் மரண விசாரணை எதிர்வரும் புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த இளைஞனின் சடலத்தைப் பார்வையிட்ட மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேதபரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பிரஸ்தாப நபரின் சடலத்தில் நான்கு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

புத்தூர் கிழக்கில் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட நீதிவான், அங்கு நடந்த குண்டுவெடிப்பில் காயமடைந்த இரு சிப்பாய்களையும் பார்வையிட்டார்.

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் மரண விசாணைக்கு சமுகம் அளிக்கும் படி அங்குள்ள படை முகாம் அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக உதவிப் பொலீஸ் அதிபர் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதற்குப் புறம்பாக இராணுவப் பொலீஸாரும் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை -

புத்தூர் பகுதியில் நேற்று அமைதி நிலவியது. (ஐ-3)

# நீதிபதிகளுக்கு மனித உரிமைகள் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.30

மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு ஒன்று யாழ்.நீதிமன்றத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

சிறுவர் உரிமைகள், வீடுகளில் இடம்பெறும் வன்செயல்கள் ஆகியன தொடர்பாகவே இச் செயலமர்வு நீதிபதிகளுக்கு நடத்தப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் எஸ்.செல்வகுமாரால் நடத்தப்பட்ட இச்செயலமர்வில் யாழ்.நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், பருத்தித்துறை நீதிபதி ஏ.அரியநாயகம் ஆகியோர் பங்குபற்றினர். (ஐ-3)

# கோழிகள், கோழி உணவு வகைகள் இறக்குமதி செய்ய தற்காலிகத் தடை!

## பறவைக் காய்ச்சல் முன்னேற்பாட்டு நடவடிக்கை

கொழும்பு,ஒக்.30

மனிதர்களுக்கான கோழி உணவுகள் மற்றும் கோழி வகைகளை இறக்குமதி செய்வதை அரசு நேற்றுமுன்தினம் முதல் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

ஐரோப்பா, ஆசியா பகுதிகளில் தீவிரமாகப் பரவிவரும் பறவைக் காய்ச்சல் நோய் தொடர்பாக ஒரு முன்னேற்பாடாகவே இந்தத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக மிருக வளர்ப்பு அபிவிருத்திப் பிரிவின் இயக்குநர் நாயகம் கே.ஆர்.அமரசேகர கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

பறவைக் காய்ச்சல் நோய் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்வதாலும் பறவைகள் வலசைபோகும் காலமாகையாலும் எந்த நாட்டில் இதன் தொற்று உள்ளது, இல்லை என்பதைத் திட்டவட்டமாக அறியமுடியாத நிலையிலும் மனிதர்களுக்கான கோழி உணவுகளையும் கோழிகளையும் இறக்குமதி செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அவற்றின் இறக்குமதிக்கான அனுமதி வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் ஒருபோதும் பறவைக் காயச்சல் இருந்ததில்லை இருப்பினும் நிலைமையை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

பெரிய பண்ணைகளில் வளர்க்கப்படும் பறவைகளில் நோய்த் தொற்று ஏதாவது உள்ளதா எனப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இலங்கையில் வருடாந்தம் 5 லட்சம் கோழிக் குஞ்சுகள் இறக்குமதி செய்யப்பட்டு கோழிகள் பெருக்கப்படுகின்றமை வழமை. வருடாந்தம் 80 மில்லியன் கோழிகள் உணவுத் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றை விட 3 ஆயிரம் தொன் முதல் 4 ஆயிரம் தொன் வரையில் மனித உணவுக்காகப் பயப்படுத்தப்படும் கோழி வகைகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன. - என்றார். (ஐ-12)

# நகரில் இன்று முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம்

## சோஷலிஸ சமத்துவக் கட்சி நடத்துகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.30

ஜனாதிபதித் தேர்தலில் சோஷலிஸ சமத்துவக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் கட்சியின் பொதுச் செயலாளரான விஜேடயஸூக்கு ஆதரவு கோரிப் பிரசாரக் கூட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசியல் நெருக்கடியும் சோஷலிஷத் தீர்வும்' என்னும் தலைப்பில் இந்தப் பிரசாரக் கூட்டம் நடைபெறுகின்றது.

கட்சியின் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் உரையாற்றவிருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்தபின் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற முதலாவது பிரசாரக் கூட்டம் இதுவாகும். (ஐ-3-8)

# கத்திவெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

மீசாலைப் பகுதியில் கத்திவெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த 41 வயதுடைய பாலசுந்தரம் இராசகுலசிங்கம் என்பரே காயமடைந்தவராவார்.

நேற்றுக் காலை தொழிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இவர் கத்திவெட்டுக்கு இலக்கானார் என்று கூறப்பட்டது. கழுத்து மற்றும் உடலின் பகுதிகளில் ஆழமான கத்திவெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இவருக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7-78)





சங்கானைக் கல்விக் கோட்டம் நேற்று நடத்திய சைவ கலாசார மேம்பாட்டு விழா மற்றும் பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விசவத்தனை முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலத்தை முதலாவது படத்திலும் மலர் வெளியிடப்படுவதை இரண்டாவது படத்திலும் விழாவுக்கு வருகைதந்த பிரமுகர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் :தொல்புரம் செய்தியாளர்)




# ரணிலின் உயிருக்கு அச்சுறுத்தல் கூட்டங்களைக் குறைக்க சிபாரிசு

கொழும்பு,ஒக்.30

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்குக் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதால் எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்களை வரையறுக்குமாறு பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்புப் பிரிவிற்கு அறிவித்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் அதன் தலைவருக்கு பல்வேறு தரப்புகளில் இருந்தும் அச்சுறுத்தல் இருப்பது பற்றி தேசிய புலனாய்வு சேவையினருக்கு தகவல் கிடைத்திருக்கிறதாம்.

இதுவரை கிடைத்திருக்கும் தகவல்களின்படி ஐ.தே.க. தலைவரின் உயிருக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவரின் பொதுக்கூட்டங்களை வரையறுக்குமாறு பொலீஸ்மா அதிபர், எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்புப் பிரிவினரைக் கேட்டுள்ளார். ஐ.தே.க. தலைவருக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து கட்சியின் மூத்த தலைவர்கள் கூடி ஆராய்ந்திருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தமிழர் தாயகம் நன்கு சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய விடயம்

சிங்கள தேசத்தின் அடுத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி யார் என்பதைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்னும் 18 நாள்களில் நடைபெறப் போகின்றது.

சிங்களத் தேசம் ஆக்கிரமித்து நிற்கும் தமிழர் தாயகத்திலும் கூட இந்தத் தேர்தல் தொடர்பான வாக்களிப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதியின் மக்களும் தென்னிலங்கை அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வந்து தமது வாக்குகளை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் எனக் கூறப்படுகின்றது.

தென்னிலங்கையில் இத் தேர்தல் தொடர்பாக இடம்பெறும் பரபரப்பு, ஆரவாரம், முக்கியத்துவம் ஏதும் தமிழர் தாயகத்தில் இல்லை. தெளிவாகச் சொல்வதானால் இந்தத் தேர்தல் குறித்துத் தமிழர் தாயகப் பிரதேச மக்கள் கிஞ்சித்தும் அலட்டிக்கொள்ளவில்லை என்பதுதான் நிலைமை.

தென்னிலங்கையில் ஆட்சி மாற்றமோ அல்லது ஆட்சி நீடிப்போ தங்களுக்கு இங்கு மாற்றம் எதனையும் - விடிவு எதையும் - தராது என்பதுதான் தமிழர்களின் மனக் கருத்து.

தங்களுக்கு நியாயமான தீர்வு எதையும் தராத - அடக்கு முறையைத் தொடர்ந்து திணிப்பதற்குப் போட்டி போடுகின்ற - தென்னிலங்கையின் இரு பிரதான அணிகளின் வேட்பாளர்களையும், அவர்களுக்கு வாக்களிக்காமல் பகிஷ்கரிப்பதன் மூலம் தகுந்த பதிலடி கொடுக்கவும், சிங்களத் தலைமைகள் மீதுள்ள தமது வெறுப்பை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்தவும் இந்தத் தேர்தலைப் பயன்படுத்துவதே மிகச் சிறந்தது என்ற எண்ணம் தமிழர் தாயகத்தில் மேலோங்கி வருவதை அறியமுடிகின்றது.

இலங்கைத் தீவின் மிக முக்கிய பிரச்சினையாக விளங்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தரும் திட்டவட்டமான - தெளிவான - யோசனைகள் எவற்றையுமே முன்வைக்காமல், இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் சொல் ஜாலத்தினால் கொள்கைக் கோட்டைகளை, மணல் வீடுகள் போல கட்டி தமிழர் தாயக மக்களினது மட்டுமன்றி, இந்தத் தீவின் முழு மக்களினதும், சர்வதேசத்தினதும் காதில் பூச்சுற்றும் வேலையை மிக நாசூக்காக - நுட்பமாக - நகர்த்திக் கொண்டு செல்லுகின்றார்கள். அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள், தேர்தல் பிரசாரப் பேச்சுக்களைக் கூர்ந்து நோக்குவோருக்கு இந்த வேலை எவ்வளவு பூடகமாக முன்னெடுக்கப்படுகின்றது என்பது தெளிவாகப் புரியும்.

தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக - அதற்கான தீர்வு சம்பந்தமாக - தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவம் எப்படி செயற்படுகின்றது என்பது பரகசியம்தான்.

*"தமிழர்களின் இனப்பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கத்தினர் காலம் காலமாக தமக்கிடையே அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கின்றார்கள். இப்போர்கள் மூலமே தமது அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைப்படுத்தி,பலப்படுத்தி, பயனடைந்து வந்திருக்கின்றார்கள். இந்த அதிகாரப் போர்களும் அதன் விளைவாக தமிழரின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாது, மேலும் மேலும் சிக்கலடைந்த காரணத்தினாலேயே சமாதான முயற்சிகள் காலம் காலமாகத் தோல்வியில் முடிவடைந்தன. இனநெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. போன்ற பிரதான சிங்களக் கட்சிகளிடம் தெளிவானதும், உருப்படியானதும், ஆழமான தரிசனத்துடன் நெறிக்கப்பட்டதுமான ஒரு தீர்வுத் திட்டம் அன்றும் சரி, இன்றும் சரி, என்றும் சரி இருக்கவில்லை. தமிழ்த் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் என்ன என்பதையும் அதன் மூலகாரணங்கள் எவை என்பதையும் சிங்கள அரசியல் உலகம் அறியாததல்ல. தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணயம் என்ற அடிப்படைகளை திம்புக் கோட்பாடுகளாக - இருபது ஆண்டுகளுக்கு முன்னரே - தமிழர் தரப்பு தெளிவாகப் பிரகடனப்படுத்தி அறிவித்துவிட்டது. எந்தவொரு சிங்களக் கட்சியும் இதுவரை காலமும் இந்த அடிப்படைகளை - இந்த மூலக்கோட்பாடுகளை - நியாயமான முறையில், புறநிலை நோக்குடன், ஆழமாக அலசிப் பார்க்க முன்வரவில்லை. இனநெருக்கடி சம்பந்தமாக ஒரு தெளிவான, முற்போக்கான கொள்கை இல்லாமை, ஒரு தீர்வுத்திட்டம் குறித்து சிங்கள அரசியல் உலகத்தில் ஒத்திசைவும் ஒருமைப்பாடும் இல்லாமை, சிங்கள அரசியல் தலைவர்களிடையே தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவேண்டும் என்ற திடமான உறுதிப்பாடு இல்லாமை - இவையே அமைதி வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் போனதற்கும் எதிர்காலத்தில் அவ்வழியில் தீர்வு எட்டப்பட முடியாமல் போவதற்கும் அடிப்படைகளாகும்."*

- இப்படி விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து நீண்ட காலத்திற்கு முன்னர், தெளிவுபடுத்தப்பட்ட யதார்த்தப் புறநிலை இன்றும் - இப்போதும் - அப்படியே நீடிப்பது தமிழ் மக்களுக்குத் தெளிவாகப் புரிகிறது.

தமிழருக்கு நியாயமான தீர்வு ஒன்றை வழங்கவேண்டும் என்பதில் தெளிவான, உறுதியான, ஒத்திசைவான, ஒழுங்கமைப்பான எண்ணம் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இல்லை என்பதையும் -

தமிழரின் இனப்பிரச்சினையை வைத்தே தமது அரசியல் அதிகாரப் போர்களை நடத்தும் போக்கிலிருந்து தாங்கள் மாறவே இல்லை, மாறப்போவதே இல்லை என்பதையும் -

இந்தத் தேர்தலிலே போட்டியிடும் இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களும் தமது சொல்லிலும் செயலிலும் ஊடாக அட்சரம் பிசகாமல் நிரூபித்து வருகின்றார்கள்.

இத்தகைய தெளிவில்லாதவர்களுக்கு - நமது இனப்பிரச்சினையை வைத்தே அரசியல் நாடகம் நடத்தி, அதிகாரப் போரை முன்னெடுப்பவர்களுக்கு - நாங்கள் வாக்களிப்பதன் மூலம், எமது இனத்தை ஏமாளியாக்கும் அந்தத் தெற்குத் தலைவர்களின் கூத்துக்கு நாம் அங்கீகாரம் வழங்குவதா?

தமிழர் தாயகம் தெளிவாகச் சிந்தித்து முடிவுசெய்ய வேண்டிய விடயம் இது.

---

யாழ். குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும்

# ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளை கண்காணிக்க சுதந்திரமான கட்டமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ். குடாநாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மானப் பணிகளைக் கண்காணிப்பதற்கென சுதந்திரமான கண்காணிப்புக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்டுள்ளது.

ஆழிப்பேரலை புனர்நிர்மானப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று கடந்த 24ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்றது. 'ரவ்ரன்' (TAFFRAN) அமைப்பின் பிரதிநிதிகள் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதில் ஆழிப்பேரலை புனர்நிர்மான நடவடிக்கைகள் தொடர்பான களநிலைமை பற்றி 'ரவ்ரன்' அமைப்பினர் கேட்டறிந்தனர். இதன்போது பல்வேறு நிறுவனங்களினால் இங்கு மேற்கொள்ளப்படும் நிவாரணப்பணிகளில் உள்ள குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

நிவாரணப் பணிகள் உரிய முறையில் நடைபெறுவதைக் கண்காணிப்பதற்கு ஒரு சுதந்திரமான கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை யாழ். மாவட்டஅரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் 'ரவ்ரன்' அமைப்பிடம் முன்வைத்தது.

இதனை ஏற்றுக்கொண்ட அவர்கள் அதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் கோரியுள்ளனர்.

இதனையடுத்து மாவட்ட மட்டத்தில் உள்ள வள அறிஞர்கள், கிராமிய மட்டத்தில் உள்ள அடிமட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்புக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளில் இணையம் ஈடுபட்டுள்ளது.

இக்கட்டமைப்பு ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளைக் கண்காணித்து அது தொடர்பான அறிக்கைகளை 'ரவ்ரன்' அமைப்புக்குக் கையளிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-8)

# மாவட்ட கலை, கலாசாரப் பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவை'அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்த அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் உட்பட கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

முதலில் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையுரை நிகழ்த்தினார். பின்னர் மேற்படி பேரவைக்கென தயாரிக்கப்பட்ட யாப்பு, பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர் கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயினால் வாசித்து சபையில் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்களுடன் சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் நிறைவேற்றுக் குழுத் தெரிவு இடம்பெற்றது. நிறைவேற்றுக் குழுவின் தலைவராக யாழ். அரச அதிபர் கே.கணேஸும் துணைத் தலைவராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், செயலாளராக கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயிலும், உப செயலாளராக நடேசு செல்வச்சந்திரனும், பொருளாளராகத் திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரனும், கணக்காய்வாளராக இலங்கை வங்கி முகாமையாளர் இ.விஜயரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் செயற்குழு உறுப்பினர்களாக, எஸ்.தார்சீயஸ், ச.புவனேஸ்வரன், திருமதி சி.ஞானமலர், கலாபூஷணம் ந.சிவசண்முகமூர்த்தி, சு.இராமலிங்கம், சி.பொன்னம்பலம், க.இராசரத்தினம், வை.இராசரட்ணம், மா.அனந்தராசன், ப.பரராஜசிங்கம் பப்பா, ந.நடராஜா, செல்வி அ.மிலாசினி, ச.சிவகுமாரன், இ.நித்தியானந்தன், செல்வி சே.செல்வசுகுணா, திருமதி கே.மாலினி, திருமதி எம்.ஜே.எலிசன், திருமதி சி.பத்மராணி, ஏ.ஆர்.விஜயகுமார், சி.சண்முகராஜா, வ.தயாநிதி, கலாபூசணம் க.நா.கணபதிப்பிள்ளை ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தை அலுவலகமாகக் கொண்டு மேற்படி கலை, கலாசாரப் பேரவைச் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-7)



யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த ஞாயிறன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி வரவேற்புரை நிகழ்த்துவதையும் அரச அதிபர் கே.கணேஸ், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளர் கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். கூட்டத்தில் கலந்துகொண்ட கலைஞர்களில் ஒருபகுதியினரையும் கலாபூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி கருத்துரை வழங்குவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# பண்டத்தரிப்பு, இளவாலைப் பகுதிகளில் இரவில் தொடர்ச்சியான மின்தடை

யாழ்ப்பாணம்,ஒக்.30

இளவாலை, விளான், பண்டத்தரிப்புப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக இரவு வேளைகளில் மின்சாரம் தடைப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதிகளில் கடந்த சில தினங்கள் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் மின்சாரம் தடைப்படுகின்றது. சில வேளைகளில் வலுக்குறைந்த மின்சாரம் கிடைக்கின்றது. இரவு வேளைகளில் ஏற்படும் இந்தத் தொடர்ச்சியான மின்தடை காரணமாக மக்கள் பல்வேறு சிரமத்துக்கு உள்ளாகின்றார்கள். மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றனர். இது தொடர்பாக பல்வேறு தடவைகள் மின்சார சபையினருக்கு முறையிடப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னிரவு வேளைகளில் தடைப்படும் மின்சாரம் மீண்டும் மறுநாள் அதிகாலையிலேயே கிடைக்கின்றது. இதனால் மாணவர்களும், அரச ஊழியர்களும் தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் இந்த மின்தடையை உரிய அதிகாரிகள் உடனடியாகக் கவனத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(8)

### நாளை

ஐப்பசி 14
திங்கட்கிழமை
31.10.2005
திதி: சதுர்த்தசி
காலை 06.24 வரை
நட்சத்திரம் : அத்தம்
பிற்பகல் 01.43
சுபநேரம்: 12.03 - 01.33
ராகுகாலம்: 07.33 - 09.03
(யாவும் பழைய நேரப்படி.)

### உதயவாக்கு

ஆற்றல் மிகுந்தவர்கள் அதிகமாக மன்னிக்கும் போது இன்னும் ஏராளமான ஆற்றலைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

*- ஓர் அறிஞர்.*

# உடுவில் கோட்ட திருமுறைவிழா ஒத்திவைப்பு

வலி.தெற்கு,ஒக்.30

நாளை திங்கட்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட உடுவில் கோட்ட சைவத்திருமுறை விழா அடுத்த மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, சைவத்திருமுறை விழாவை முன்னிட்டு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போட்டிகள், ஜி.சீ.ஈ. சாதாரணதர சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களின் செயன்முறைப் பரீட்சை காரணமாகவும் -

ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு வலயக் கல்விச் செயற்பாடுகள் காரணமாகவும் நடைபெறவில்லை என்றும் -

இதனால் சைவத்திருமுறை விழாவை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்திருப்பதாகவும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(எ-152)

# அழைப்புக் கட்டளை

[இல.16 - பிரிவு 55 (1)]

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட / நீதிமன்றத்தில்
உமாசுதன் பெண் அகல்யா
கட்டப்பிராய், கல்வியங்காடு.
வழக்கு இல.மணநீக்கம் / 520 எதிர் வழக்காளி.
சிதம்பர நடேசன் உமாசுதன்
17, MC GEHAN CLOSE,
MT ALBERT,
AUCKLAND, NEWZALAND

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள் எதிராளிக்கு
மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி

தனக்கும் உமக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தை இரத்துச்செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2005ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 09ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளக்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

| | |
|---|---|
| வரைந்தது | நீதிமன்றக் கட்டளைப்படி |
| **லிங்காதுரைராஜா** | **து.சிறீமோகன்** |
| வழக்காளியின் சட்டத்தரணி | பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம். |

குறிப்பு: விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து.சிறீமோகன்**
*கையொப்பம்:* பதிவாளர்
(42094) (24-19-13)

**2005ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ஆம் நாளாகிய இன்று.**

# நெஞ்சகலா நினைவலைகள்

13ஆம் வருடம் | 1ஆம் வருடம்




அமரர் **நமசிவாயகம் நடராஜா** | அமரர் **நடராஜா பொன்னம்மா**

15.04.1922 ← தோற்றம் → 30.12.1922
11.11.1992 ← மறைவு → 10.11.2004

*ஆண்டுகள் அகன்றன அகலாது நினைவலைகளே...*
*நீண்ட நாள் போயினும் நீங்கிடாது நினைவுகளே...*
*மாண்டவர் மீண்டதில்லை மானிடர் வாழ்வினிலே...*
*ஆண்டவன் அழைத்துவிட்டான் அமரர் ஆயிடவே...*
*வேண்டிடுவோம் அரனையே... நல்லகதி சேர்ந்திடவே...*
*தூண்டாமணி விளக்காய்... எமக்கு ஒளியேற்றிடுவீரே...*

20 A, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(42088) (54-19-13-24)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஒளிபொங்க 11 - 10 - 1935



ஒளிமங்க 03 - 11 - 2004

## திருமதி செல்லம்மா இராசரத்தினம்

*மண்ணுலகிலே மற்றவர்க்கோர் தாயே உள்ளார்*
*எடுத்தணைக்கும் தந்தையே இளவயதில் வீட்டே*
*எமலுகம் சேர்ந்து விடத் துடித்து நின்றோம் - தாயே!*
*நீர் எம் மன்னையோடு சேர்ந்து நின்று*
*பேருதவிகள் பல செய்து பேணி வாழ்வு காத்தீர் !*
*வாழ்க்கை பரிமளிக்கத் திருமணமும் செய்துவைத்தீர்!*
*விண்ணுலகம் நின்னுயிர் சென்றுவிட உறைந்து நின்றோம்*
*செயலிழந்து*
*ஆரினிமேல் தரணியிலே பெரியம்மா என்றழைக்க*
*பலநூறாண்டு காலம் சென்றாலும் மறக்கமுடியுமா?*
*பாசம் வீசுகின்ற கருணையுள்ள உன்முகத்தை மீண்டும் வந்து*
*வாசம் செய்துவிடுவீர் நம்முடனே...*

தகவல்:
**க. மணிவண்ணன்**
கரவெட்டி.
(சி-45984) (54-19-13-24)

பெறாமக்கள்
**லக்ஷ்மன், ரமணி, சங்கர்.**

# BRIDEGROOM WANTED

For my niece, Hindu, Age 33, English Trained Teacher, Fair, Presentable looks. A state Service, Local Government, Bank, Corporation, Graduate teacher, within 39 years age. Dowry available. (41994) (19-13-24)

**Sanmugaraiah, Valuer,**
387, Temple Road, Nallur, Jaffna.

# தீபாவளி மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் மற்றீரியல்கள், சுடிதார், சாறிவகைகள், ஸ்கேட் & பிளவுஸ், T சேட் வகைகள் அனைத்திற்கும் தரச்சிறப்பில் முன்னணி பெற்ற ஒரே நிறுவனம்

**பபு கொமினிக்கேசன்**

இல.30, வளாகவீதி,
திருநெல்வேலி
(மக்கள் வங்கி அருகில்).
(41890) (84/19/13)

# இன்ரநெற் மூலம் வெளிநாட்டு அழைப்புக்கள்

**1.75 சதம் மட்டுமே.**

**Arulcom, No.1, Brown Rd., Jaffna.**
**T.P.; 021 222 3536**
(41982) (39/19/13/24)

வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசனத் அபிவிருத்தி அமைச்சு

## கட்டடத் திணைக்களம்

### கேள்வி கோரல்

**திருத்தம்**

28.10.2005 பக்கம் 10இல் பிரசுரமாகிய கேள்வி கோரலில் 2ஆம் பந்தியில் 27ஆம் திகதி நவம்பர் 2005 ஆம் திகதி என்று இருப்பது 11ஆம் திகதி நவம்பர் 2005ஆம் திகதி எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

W.S. மொல்லிகொட
**கட்டடங்கள் பணிப்பாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**'செத்சிரிபாய' பத்தரமுல்ல.**
www.buildings.gov.lk
(சி/45990) (84/19/13)

## மிதிவெடிகள் மீட்பு

ஊர்காவற்றுறையில் மிதிவெடி அபாயமுள்ள பகுதிகளில் மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வரும் டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினரால் இதுவரை பெருந்தொகையான மிதி வெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

தற்போது மிதிவெடி அபாயம் உள்ள பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ள கரைச்சி, கல் ஒழுங்கை, பழைய தபாற் கற்தோரடி, ஊருண்டி கோட்டையடி பிரதேசம் ஆகிய பகுதிகளில் எச்சரிக்கை குறியீடுகள் இடப்பட்டுள்ளதுடன் அப்பகுதிகளில் பொதுமக்கள் நடமாடுவதைத் தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி பகுதிகளில் இராணுவக் காவலரண்களும், மினிமுகாம்களும் அமைக்கப்பட்டிருந்தன. எனவே இந்த முகாம்களின் பாதுகாப்புக்கருதி ஏராளமான மிதிவெடிகள் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (எ-16)

# அறிவித்தல்

எனது கட்சிக்காரர்கள் "இலக்சுமி வாசா", கே.கே.எஸ். வீதி, வல்வெட்டித்துறை நல்லதம்பி செந்திவடிவேலுவும் பெண் சிவரூபராணிக்கும் சொந்தமானதும் 2002.12.01ஆம் திகதி நொத்தாரிசு சபா.ரவீந்திரன் முகதாவில் 2432ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதியில் விவரிக்கப்பட்டுள்ளதுமான "நாதவளி" நிபர 04 குளி 05 3/4, முற்பதிவு பரு 273 / 224 என்ற காணியினுள் உள்ள கிணற்றைத் திருத்தப்படவேண்டியிருப்பதானால் குறித்த கிணற்றில் பங்குடைய எவரும் இருப்பின் தங்களுடைய கோரிக்கைகளை இன்றிலிருந்து ஒரு மாத தவணைக்குள் எழுத்து மூலம் எனக்கு அனுப்பிவைக்குமாறு இத்தால்அறிவித்தல் தரப்படுகின்றது.

SABA RAVEENDRAN J.P.U.M.
Attorney at Law notary Public & Commissioner for Oaths Thumpalai, Point Pedro.
(சி/45997) (19-13-24)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

## திருமதி றெஜினா இருதயநாதன்

அவர்கள் இன்று (30.10.2005) அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்வதில் பெருமகிழ்வடைகின்றோம். மேலும் இவர் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக குறுகிய காலம் பதவி வகித்தாலும் தன்னுடைய ஆளுமை ஆற்றலால் கல்வித் தேவைகளை இனங்கண்டு தம்மாலான சிறந்த சேவையை வழங்கியுள்ளார் என்பதை நாம் மறந்து விட முடியாது.

இத்தகைய ஆளுமை கொண்ட கல்விப் பணிப்பாளர் அவர்கள் தொடர்ந்தும் கல்விப் பணி புரியவேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்துவதுடன் அவர் தனது குடும்பத்துடன் பல்லாண்டு காலம் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.


**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை,
சாவகச்சேரி.
(42067) (19-13-24)

# பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

**ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி**
**ஓர் அடியாள்.**
(45115) (19-13-24)

# மரண அறிவித்தல்



## கைலாசபிள்ளை தியாகராஜா (தியாகு)

யாழ்.கிடாய்விழுந்தானைப் பிறப்பிடமாகவும் காளி கோயிலடி, வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை தியாகராஜா (தியாகு) கடந்த வியாழனிரவு (27.10.2005) இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - பகவதி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் லட்சுமிபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் ராகுலனின் அன்புத் தந்தையும் குணரட்ணம் (இந்தியா), நகுலேஸ்வரி (கனடா), கோணேஸ்வரி (கனடா), சறோஜினிதேவி (சறோஜினி களஞ்சியம் - யாழ்ப்பாணம்), ஜீவராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அழகம்மா, பரமநாதன்(மெக்கானிக் - கனடா), கதிர்காமநாதன் (நாதன்), சண்முகலிங்கம், நடராஜா, பரமேஸ்வரி, கந்தசாமி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் Dr.கவிதா, வனிதா, குமுதினி, மிதிலா, திலீபன், சுகிந்தன் (அனைவரும் கனடா), சாதனா, சாயிந்தன், பகவத்தன், சாயித்திரி (அனைவரும் பிரான்ஸ்), கௌசிகன், யாழினி (இருவரும் கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் Dr.கோபாலனின் சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் ஒரு மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை. (சி/45997) (19-13-24)

தகவல்:
*மனைவி, மகன், மாமி, சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்.*

# தமிழும், சைவமும் ஆட்கொண்ட திருமலை தீபாவளிப் பண்டிகையுடன் வளம் பெறுமா?

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை புரட்டாதி, ஐப்பசி மாதம் என்றாலே பக்தி நிறைந்த மாதம் என்று தான் பொருள்படும்.

மற்றைய எந்த மாவட்டத்திலும் எல்லாத வகையில் இங்கு நடைபெறும் கும்ப விழாவின்போது இந்த மாவட்டம் பக்திமயமானதாகக் காணப்படும். ஆலயங்களில் எல்லா அடியார்களும் கும்பங்கள் எடுத்து வீதிகளில் வலம் வரும் காட்சி பக்தி மயமானதாகவே காட்சி தரும்.

உள்ளூர் வாசிகள் மட்டுமன்றி வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் இந்தக் கும்ப ஆட்டங்களில் தங்கள் மனங்களைப் பறிகொடுத்து அவற்றில் லயித்து நிற்பது அருமையான காட்சியாகவே அமைந்து விடும். இது கண்கொள்ளாக் காட்சியும்கூட. நேரில் பார்த்தவர்களுக்கு இதன் பக்தி மயமான சூழலும் அதன் அழகுக் கோலங்களும் வியத்தகு காட்சிகளாகவே அமைநது விடும்.

கும்ப விழாவினைத் தொடர்ந்து தீபாவளி தினத்தன்று இடம்பெறும் கௌரிகாப்பு விழாவும் இங்கு தொடர்ந்தும் பக்திமயமானதொரு சூழலை உருவாக்கும் விழாவாகவே அமைந்துவிடும்.

வீதிக்கு வீதி ஆலயங்கள் கொண்ட இந்த மண்ணில் இந்தக் காலகட்டம் திருகோணமலை மாவட்டத்தை சைவமும் தமிழும் ஆட்கொண்ட நிலையினை தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டி விடும்

இதேவேளை, தீபாவளித் திருநாளைக் கொண்டாடிடும் வகையிலும் இந்த மாவட்ட மக்கள் தங்களை தயார்படுத்தி வருகின்றனர். ஆழிப்பேரலைகளின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்த மாவட்ட மக்கள் தற்போது படிப்படியாக மீண்டும் தங்கள் இயல்பு வாழ்வினை மீளச்செய்யும் நிலையிலேயே இந்தத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடவுள்ளனர்.

### திருமலை மடல்

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டிய இந்த விழாவும் திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை என்றும் பெருவிழாவாகவே அமைந்து விடுவது வழக்கம். தற்போது கடைத்தெருக்கள் களை கட்டத் தொடங்கியுள்ளன. இடைக்கிடையே வருண பகவான் தனது திறனைக் காட்டிக்கொண்டிருக்கின்ற போதும்கூட மக்கள் இதனை எல்லாம் கவனத்தில் கொள்ளாது தங்களுக்கான பண்டிகைப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் பெரிதும் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

நடைபாதைக் கடைகளும் மலிவு விற்பனைக் கடைகளுமாக நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது. ஆழிப்பேரலைகளின் தாக்கத்தினை இந்த மாவட்ட மக்கள் படிப்படியாக மறந்து மீண்டும் தங்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப ஆரம்பித்திருக்கின்றனர் என்பதனையே இந்த நிகழ்வுகள் எடுத்துக்காட்டுவதாக தன்னார்வத்தொண்டு நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

ஆமாம்! பருவகால மழை ஆரம்பித்து விட்டதனால் இந்த மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியிலும் சுறுசுறுப்பான நிலை உருவாக ஆரம்பித்துள்ளது தங்கள் விளைநிலங்களை உழுது மீண்டும் விவசாய செய்கையினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த விவசாயிகள் ஆரம்பித்து விட்டார்கள் ஒரு காலத்தில் கிழக்கிலங்கையின் நெற்களஞ்சியம் என இந்த மாவட்டம் போற்றப்பட்டது. ஆழிப்பேரலையும் போக்கால சூழலும் இதனை மறக்கடிக்கச் செய்தபோதும் இந்த மாவட்டத்தின் நெல் விளைச்சல் மீண்டும் படிப்படியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

நாட்டுக்கும் வீட்டுக்கும் தேவையான உணவினை வழங்கிவந்த இந்த மாவட்ட மக்கள் இடைக்காலததில் அகதி முகாம்களில் கையேந்தி வாழ்ந்த வாழ்வுக்குப் படிப்படியாக முடிவுகட்டி மீண்டும் தங்கள் சொந்தக் கால்களில் வாழும் நிலை உருவாகி வருவது பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமான விடயமாகும்.

**சங்கீத்**

பற்றைக்காடான விளைநிலங்களை மீண்டும் விவசாய விளை நிலங்களாக மாற்றியமைக்கு தங்கள் உதிரத்தையே வியர்வையாக்கி சிறு துண்டுக் காணியையும் விவசாய விளைநிலமாக மாற்ற முயலும் நம்மவர்களின் செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டியதுதான்.

# தலைவர் பிரபாவின் படத்தை வைத்திருப்பது சட்டவிரோதமா?

## விசனிக்கிறது திருமலை தமிழ் மக்கள் பேரவை

திருகோணமலை,ஒக்.30

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் படத்தைத் தமிழ் மக்கள் வைத்திருப்பது சட்டவிரோதமானதா? அதனை ஸ்ரீலங்கா அரசு உடன் வெளிப்படுத்த வேண்டும்.

-இவ்வாறு கோரியிருக்கிறது திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை.

இது தொடர்பாக பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் ஒப்பமிட்டு நேற்றுமுன் தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை வைத்திருக்கும் தமிழ் மக்களைத் தாக்குவதும் நையாண்டி செய்வதும் ஸ்ரீலங்கா படைத்தரப்பின் கடமைகளில் ஒன்றாகிவிட்டது. திருகோணமலை நகரத்தின் அலஸ் தோட்டம் பகுதியில் இரண்டு தமிழ் இளைஞர்களின் கைப்பையினுள் தேசியத் தலைவரின் சிறிய அளவிலான படம் இருந்ததனால் அவ்விருவரும் கடுமையாகத் தாக்கப்பட்டு அந்தப் படங்களை வாய்க்குள் திணித்து சப்பிச்சாப்பிடுமாறு வற்புறுத்தி சாப்பிட வைத்த சம்பவம் 12.09.2005இல் நடைபெற்றது.

மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்காப் படைகள் இன்று தேசியத் தலைவரின் படங்களை வைத்திருப்போரைக் கடுமையாகத் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

ஸ்ரீலங்கா தேசத்திற்கும் அந்த மக்களுக்கும் மஹிந்த ராஜபக்ஷ, ரணில்விக்கிரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் தலைவர்கள் என்றால் தமிழ் மக்களின் ஏக தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆவார். ஸ்ரீலங்காவின் மக்கள் ஜனாதிபதியின் படத்தையும் எதிர்க்கட்சித் தலைவரின் படத்தையும் வைத்திருப்பது சட்டவிரோதம் என்று கருதி நடவடிக்கை எடுக்க முடியுமா? அவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாத போது எமது தலைவரின் படத்தை வைத்திருப்பது சட்டரீதியற்றதாகக் கருதி நடவடிக்கை எடுப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. போக்குவரத்து வாகனங்களில் ஸ்ரீலங்கா தலைவர்களின் படம் ஒட்டப்பட முடியுமானால் எமது தலைவரின் படத்தைத் தமிழ் மக்களாகிய நாங்கள் வைத்திருப்பது சட்ட விரோதமல்ல.

எனவே, ஸ்ரீலங்கா அரசும் அரச படைகளும் மேற்கொள்ளும் அடாவடித்தனத்தை நிறுத்தி எமது தேசிய தலைவரின் படத்தைத் தமிழ் மக்களாகிய நாம் சுதந்திரமாக வைத்திருக்க அனுமதிக்க வேண்டும். அன்றேல், அத்தகைய போக்கு மிகமோசமான விளைவுகளைக் கொண்டுவந்து சமாதானத்தை இல்லாதொழிக்குமென எச்சரிக்கிறோம்.

கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியாவில் நடந்த தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்குபற்றுவதற்கு யாழ்.வடமராட்சியிலிருந்து வந்த 40 இளைஞர்கள் தேசியத் தலைவரின் படத்தை வைத்திருந்தார்கள் என்ற ஒரேயொரு காரணத்திற்காக ஓமந்தை சாவடியில் தடுத்து நிறுத்தியமை திட்டமிட்ட விசமத்தனமான செயலாகும். இவர்கள் வருவதை முகமாலையிலுள்ள இராணுவத்தினர் அனுமதித்திருக்கும் போது ஓமந்தைச் சாவடியில் மட்டும் தடுக்கப்பட்டது ஏன்? எங்கள் மண்ணில் எங்கள் தலைவரின் படத்தைச் சுதந்திரமாகச் சுமந்து செல்வதற்கு எமக்கு உரிமையில்லையா? ஸ்ரீலங்கா அரச படைகளின் இவ்வாறான செயற்பாடுகள் தொடருமாயின் சமாதானம் மிகவிரைவில் இல்லாது போகுமென்பதை ஸ்ரீலங்கா அரசிற்குத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம் - என்று உள்ளது. (எ-க)

# பாக். பூகம்பப் பாதிப்பு: இலங்கையிலிருந்து உதவி

பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தில் பாதிப்புற்றோருக்கு இலங்கை அரசு மனிதநேய உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த உதவியின் தொடக்கமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஏழாயிரத்து ஐந்நூறு சிறிய, பெரிய கூடாரங்களையும், இரண்டு மெட்ரிக்தொன் தேயிலை, ஆறு மெட்ரிக் தொன் அரிசி, இரண்டு மெட்ரிக் தொன் பருப்பு என்பனவற்றையும் பாகிஸ்தானுக்கு அனுப்பிவைத்தார்.

• இந்த நிவாரண உதவியை கொழும்பில், உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் சார்பில் அமைச்சர் பௌஸி கையளித்தார். அவை விமானப்படையின் விசேட விமானத்தில் பாகிஸ்தானுக்குக் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டன என ஜனாதிபதி செயலகம் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிக்காக பாகிஸ்தான் பிரதமருக்கு அமைச்சர் பௌஸி ஒரு லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான காசோலையும் வழங்கினார் எனவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தலைமையிலான கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம் இது.

# இந்துமா கடல் பகுதியில் சுனாமி எச்சரிக்கை மையம் அமைக்க பிரான்ஸ் உதவி

பாரீஸ்,ஒக்.30

இந்துமா கடலில் ஆழிப்பேரலை எச்சரிக்கை அமைப்பு ஒன்றை நிறுவுவ்தற்கு 10 இலட்சத்து 50 ஆயிரம் யூரோவை பிரான்ஸ் வழங்குகின்றது.

யுனெஸ்கோவின் 23ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் அரசுகளுக்கிடையிலான பெருங்கடல்கள் தொடர்பான ஆணைக்குழுவில் பிரான்ஸ் இதுபற்றிய அறிவித்தலை விடுத்தது.

இந்துமாக்கடலில் ஓர் இடத்தில் ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து இராட்சத அலைகள் ஒருமணி அல்லது இரு மணித்தியாலங்களுக்குள் பல்வேறு நாடுகளின் கரையோரங்களைத் தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்தியிருந்தது.

முறையான எச்சரிக்கை அமைப்பு ஒன்று இருந்திருக்குமானால் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கமுடியும்.

நீயுனியன் தீவுகளில் அமைந்திருக்கும் தேசிய நிலையத்தில் இயங்கவிருக்கும் எச்சரிக்கை மையத்திற்கு பிரென்சு அரசு நிதி உதவி வழங்கவிருக்கிறது.

தகவல்களைப் பெற்று, பகுப்பாய்வு செய்து, எச்சரிக்கைகளை விடுப்பதாக இந்த அமைப்பு இருக்கும். மடகஸ்கார், தன்சானியா, கென்யா ஆகிய இடங்களிலும் எச்சரிக்கை மையங்களை பிரான்ஸ் அமைக்கவிருக்கிறது. கரையோரப் பகுதியினருக்கு இயற்கை அனர்த்தகாலத்தில் செயற்படும் விதம் குறித்த பயிற்சிகளையும் பிரான்ஸ் வழங்கவிருக்கிறது.

ஆழிப்பேரலை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குறிப்பாக இலங்கை, இந்தோனேஷியா போன்ற நாடுகள் தமது சொந்த எச்சரிக்கை மையங்களைப் பலப்படுத்திகொள்ளவும், அனர்த்த நிர்வாகம், அனர்த்தத் தவிர்ப்பு மற்றும் அனர்த்தம் வருமுன் ஆயத்தமாக இருத்தல் போன்றவற்றுக்கு பிரான்ஸ் உதவி புரியவிருக்கின்றது. (ப)

# வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் புத்தளம் பகுதியில் வதியும் முஸ்லிம்கள் தம்மை மீண்டும் தாயக மண்ணுக்கு அனுப்புமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை மதியம் ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் நடத்தினார்கள்.

ஹிஸாத் நகர் என்னும் மீள்குடியேற்றக் கிராமத்தில் ஜும்ஆத் தொழுகையின் பின்னர் இப்பேரணி ஆரம்பமானது.புனர்வாழ்வு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுத்தீன் தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்பேரணியில் கலந்துகொண்டனர்.

'கண்ணீர் கலந்த கறுப்பு ஜூலை', 'மண்ணை இழந்து வாழ்வதைவிட உன்னை இழந்து மண்ணை மீள்', 'மீண்டும் மீள் குடியேறிய முஸ்லிம்களை நசுக்காதே', 'உரம் விட்ட மண்ணில் உயிர் விடத் தயார்'- என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கிச் சென்றனர். சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாலாவியைப் பேரணி அடைந்த பின்னர், ஏற்கனவே சேகரிக்கப்பட்ட ஒரு லட்சம் கையெழுத்துக்களைக் கொண்ட மீள்குடியேற்றக் கோரிக்கை மனுவின் பிரதிகளை அங்குவைத்து அமைச்சர் பதியுத்தீன், புத்தளம் மாவட்டச் செயலாளர் எச்.எம். ஹேரத்திடம் கையளித்தார்.

இம்மனுவின் பிரதிகள் ஜனாதிபதிக்கும், ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும், உலக இஸ்லாமிய அமைப்புக்கும் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-க)

# தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்

# திருமதி றெஜினா இருதயநாதன் (B.A., PGDE, M.Phil., SLEAS II) அவர்களின்

# பணிநயப்பு மலர்



## கிறிஸ்துவின் சாட்சியாக...

கல்வியுலகிற்கு அளப்பரிய அர்ப்பணிப்புமிகு பணியாற்றும் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அவர்களை வாழ்த்தி இச்செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் திளைத்த நவாலி புனித பேதுருஆலயச் சூழலில் தெய்வபக்தியும் கல்விப் புலமையும் மிக்க குடும்பத்தில் பிறந்த இவர் தன் ஆளுமையாலும் பன்முகஆற்றல்களாலும் கல்லூரி அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக, கல்விப்பணிப்பாளராக நற்பணியாற்றியதுடன் எம் திருச்சபைக்கும் பெருமைசேர்த்துள்ளார். இவரது வாழ்வும் பணியும் நமக்கு முன்னுதாரணமாகும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக விளங்கி, இத்தினத்தில் சேவையிலிருந்து ஓய்வு பெறும் இவரையும் இவர் குடும்பத்தையும் இறைவன் பாதுகாத்து வழிநடத்த இறையாசி வேண்டுகின்றேன். சாதனைகள் பல படைத்த தமிழ் கத்தோலிக்க பெண்ணாக வரலாற்றில் இடம்பிடிக்கும் இவருக்கு என்பிறந்தநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். கிறிஸ்துவின் சாட்சியாகத் தங்கள் பணி தொடரட்டும்.

**அருட்பணி ஜேக்கப் நீக்கிலஸ்,**
குருமுதல்வர், யாழ்.மறைமாவட்டம்.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## பாராட்டுக்குரியவர்

ஆசிரியராய், அதிபராய், கோட்டக்கல்வி அதிகாரியாய், பிரதிக் கல்விப் பணிப்பாளராய், வலயக் கல்விப் பணிப்பாளராய் 29 வருடங்கள் கல்விப் பணிபுரிந்து பலரது உள்ளங்களில் பதிவுகளை ஏற்படுத்தி ஓய்வுபெறும் திருமதி றெஜினா இருதயநாதன் அவர்களது சேவை பாராட்டுக்குரியது.

இரு அழிந்த பிரதேசங்களில் கடமைபுரிந்து அவற்றின் இயல்பு நிலைக்காக உழைத்த கல்விப் பணிப்பாளர்களுள் ஒருவராகத் திகழ்கின்றார். ஆவணங்களும் சொத்துக்களும் அழிக்கப்பட்ட போது எதிர்காலத்தை நினைத்துக் கவலைப்பட்ட, கண்ணீர் விட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் பலர். ஆனால், அவர்கள் அனைவரும் ஓய்வுபெறும் போது எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் ஆரோக்கியமாகச்செல்ல வைத்த பெருமையைச் சார்ந்தவர்களில் இப்பணியாளரும் ஒருவராவார்.

கண்டிப்பும், கருணையும், அன்பும் திருமதி றெ.இருதயநாதனுக்கு உரித்தானவை. கோபப்படும் அதேநேரம் உண்மை நிலை அறிந்து கருணையுடன் அன்புகாட்டி முன்னின்று உதவிசெய்வதில் வலிமையுள்ளவர். துன்பப்படுபவரைக் கண்டு துயரமடைவார். அதனால், அவர் சேவையை விட்டுச்சென்றாலும் பழகிய அனைவரது உள்ளங்களிலும் நிறைந்து நிற்பார் என நினைக்கின்றேன்.

முயற்சியால் உயர்ச்சிபெற்ற அவர் ஓய்வுபெற்றாலும் நீண்டகாலச் சேவை அனுபவத்தின்பால் எழும் சிந்தனைகள் கல்விப் புலத்தில் இடர்படும் மாணவச் செல்வங்களைத் தொட்டுச் செல்லும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இருக்கமுடியாது.

அவரது எதிர்கால வாழ்வு ஆரோக்கியமாக அமையவேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

**வீ.இராசையா,**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை.

## புதுவேகத்துடன் செயற்படவைத்த பணிப்பாளர் இவர்

திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள் இன்று தனது அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்கிறார். அவர் இந்த வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக மிகக்குறுகிய காலமே சேவையாற்றியிருப்பினும் அவரது சேவையின் அளவோமகத்தானது. களைப்புற்றிருந்த கல்விச் செயற்பாடுகளுக்கு புத்துணர்ச்சியூட்டிப் புதுவேகத்துடன் ஓடவைத்த அவர்தம் பணி மறக்கப்படமுடியாது. அவர் தனது ஓய்வுக் காலத்தைப் பயன்தரு முறையில் மகிழ்வுடன் கழிக்க அருள்புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**- கு.பிரேமகாந்தன்,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), தென்மராட்சி.

## பணியாளர் மனதை வென்ற பணிப்பாளர்

திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றதன் பின்னர் ஊழியர்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார். வலய அலுவலகத்திற்கு பல்வேறு வளங்கள் மிகக் குறுகிய காலத்தில் இவரால் பெறப்பட்டன. வலயத்திற்கு வாகனம் பெற்றுக்கொடுத்து மேற்பார்வையை இலகுவாக்கினார். வலயக் கல்வி அலுவலகம் தனக்குரிய சொந்தக் காணியில் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டும் என்பதில் பேரவாக்கொண்டவர். அவரது அவாவை நிறைவுசெய்ய முயற்சிப்போம்.

அவர் தனது ஓய்வுக்காலத்தை தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகக் கழிக்கவும் கல்வித்துறைக்குத் தொடர்ந்தும் தனது சேவையினை வழங்கவும் இறைவனை வேண்டுகிறோம்.

**உதவிக் கல்விப் பணிப்பாளர்களும்,**
**முதன்மை ஆசிரியர்களும்,**
**தென்மராட்சிக் கல்வி வலயம்.**

## முகாமைக்கோர் முன்னுதாரணமாக...

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றித் தனது அறுபதாவது அகவையில் பணியிலிருந்து ஓய்வுபெறும் எங்கள் மதிப்பிற்குரிய கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அவர்களுக்கு தென்மராட்சி அதிபர்கள் சார்பில் எம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

அன்பிற்கு இலக்கணமாக அறிவின் இருப்பிடமாக முகாமைக்கோர் முன்னுதாரணமாகத் தென்மராட்சிப் பிரதேசத் தின் கல்விச் செயற் பாடுகளை முன்னெடுத்து, குறுகிய காலத் தில் எல்லோர் மனங் களிலும் நீங்கா இடம்பிடித்திருக்கும் எமது வலயக் கல்விப் பணிப் பாளரின் ஆளுமைமிக்க தீர்க்க தரிசனமான செயற்பாடுகள் எம் பிரதேசக் கல்வி விருத்தி வரலாற்றில் ஆழப்பதிந்துள்ளன.

அவரின் பன்முக ஆற்றல்கள் கல்விச் சமூகத்திற்கு என்றும் பயன்தரவும் அவரும் அவர் குடும்பத்தவர்களும் என்றென்றும் பார் போற்ற வாழ்ந்திடவும் இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

**அதிபர்கள்,**
**தென்மராட்சிக் கல்விவலயம்.**

## கற்றற் பாதையில்....

| | |
|---|---|
| ஆரம்பக் கல்வி: | யா/நவாலி சென்.பீற்றஸ். றோ.க.த.க.பாடசாலை, |
| இடைநிலைக் கல்வி: | யா/மானிப்பாய் சென்ற். ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை. |
| சிரேஷ்ட இடைநிலைக் கல்வி: | யா/நவாலி மகாவித்தியாலயம். |
| பட்டப்படிப்பு: | 1966-67 கொழும்புப் பல்கலைக்கழகம், 1967-69 பேராதனைப் பல்கலைக்கழகம். |
| பட்டப்பின் படிப்பு: | Dip.in.Ed., 1986/87 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| கல்வி முதுகத்துவமாணி: | M.Phil 2000 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

## கல்விப் பணியில்..

| | |
|---|---|
| 1976-1989 - | ஆசிரியப் பணி |
| 1989-1993- | அதிபர், யா/மானிப்பாய் சென்ற். ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை. |
| 1993 - | உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.பிரதேசக் கல்வி அலுவலகம். |
| 1993-1995 | உதவிக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய். கோட்டக் கல்விப் பணிமனை. |
| 1995-1998 - | கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய் கோட்டம். |
| 1998-2003 | பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம். |
| 2003-2005 | வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம். |
| 2005 | வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம். |

## மணிவிழா நாயகியை மனங்கனிந்து வாழ்த்துகின்றோம்

இன்று எமது தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள் மணிவிழாக் காணுகின்றார். நல்லாசிரியராக, அதிபராக,பணிப்பாளராகக் கடமையாற்றிய இவர் தனது பணிக்காலத்தின் இறுதிப் பகுதியில் தென்மராட்சியில் கல்விப்பணி செய்துள்ளார்.

அகவை அறுபதிலும் ஓய்வுஒழிச்சலின்றிக் கல்விச் சமூகத்தின் நலனே தன் சொந்த நலனாகக் கொண்டு கண்டிக்கவேண்டிய இடத்தில் கண்டித்தும் தட்டிக்கொடுத்து உற்சாகப் படுத்தவேண்டிய இடத்து மனதாரப் புகழ்ந்து பாராட்டியும் அவர் கல்விச் சமூகத்தவரின் மனதைக் கவர்ந்துள்ளார்.

அவரது ஓய்வுக்காலம் சகலவளங்களுடனும் நிறைவாக அமைய மனதார வாழ்த்துகின்றோம்.

**தென்மராட்சி வலய ஆசிரியர்கள்.**

**வாழ்த்துவோர்:**
**தென்மராட்சி வலயக்கல்வி**
**அலுவலக நலன்புரிக்கழகம்,**
**தென்மராட்சிக் கல்விவலய அதிபர்கள்.**

## ஓய்வு பெறும் கல்விச் சேவகி திருமதி றெஜினா இருதயநாதன்

கல்விச்சேவையில் கண்ணியமாகவும் கடமை உணர்வோடும் பணி செய்த் ஒரு கல்விப்பணிப்பாளராக என் உள்ளத்தில் இடம் பெறுபவர் திருமதி றெ. இருதயநாதன் அவர்கள். பல ஆண்டுகள் இவருடைய பணியை அவதானிக்கக் கூடிய வாய்ப்பு இந்த மண்ணில் எனக்கு கிடைத்தது. பொறுமையும் சகிப்புத்தன்மையும் உடையவர் இவர். கல்விக் கூடங்களில் சீரிய கல்விச்சேவை இடம் பெற வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு கருமம் ஆற்றியவர் இவர். அத்துடன் மாணவர்கள் மத்தி யிலும், ஆசிரியர்கள் மத்தியிலும், அதிபர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் இறைநம்பிக்கை ஆழமாகப் பதிந்து இருப்பது அவசியம் என்பது பெருமாட்டியின் ஆழ்ந்த விருப்பமாகும். இதனை வளர்த்துக் கொள்வதில் நாளும் பொழுதும் அயராது உழைத்து வந்தவர் இவர். இன்று ஓய்வு பெறுகின்றார் என்பது யாழ். குடா நாட்டு கல்விச் சேவைக்கு ஒரு தொய்வை ஏற்படுத்துகிறது என்பது வெளிப்படை. என்றாலும் காலம் உருண்டோடுகிறது. அந்த அந்தக் காலத்தில் நடைபெறும் நல்ல வற்றை நாம் வரவேற்கத்தான் வேண்டும். இந்தச் சமயத்தில் திருமதி றெஜினாஇருதயநாதன் அவர்களை வணங்கி, வாழ்த்தி, ஆசி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச் சியடைகிறேன். அன்னாரின் ஓய்வுக் காலமும் எமது சமூகத்துக்கு ஒளி ஊட்ட வேண்டும் என்று அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

கலாநிதி செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி,**
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்தெல்லிப்பழை,
ஸ்ரீலங்கா.

## கல்விப் பணிக்குப் பெருமை சேர்த்தவர்

திருமதி றெஜினா இருதயநாதன் நீண்டகாலமாக கல்விச்சேவையில் பணியாற்றிய ஒருவராவார். ஆசிரியத் தொழிலில் அமர்ந்து இத்துறைக்கு பெருமை சேர்த்த திருமதி றெஜினா இருதயநாதன் பின்னர் அதிபராகவும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு தமது தொழிலின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர். தொழிலாகக் கருதுவது வேறு தூய தொண்டாகக் கருதுவது வேறு. தொழிலிலே தொண்டராக மாறிப்பணி செய்தமையால் தமது தொழிலில் மேம்பாடு எய்த இவரால் முடிந்தது. அதன் பெறுபேறாக இவர் உதவிக்கல்விப்பணிப்பாளராக உயர்ந்து பின்னர் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

"ஓய்வு என்பது கல்வியாளர்களுக்கு ஒருபோதும் இருக்காது; இருத்தலும் கூடாது. ஓய்வுக் காலம் கல்வித்துறை சார்ந்த, சிந்தனைக்குரிய காலமாக்கப்படவேண்டும். ஒரு வலயத்திற்குப் பொறுப்பாகவிருந்த கல்வி நிர்வாக அனுபவம், தமது பிரதேசம் முழுவதற்குமான அனுபவம் சார் அறிவைத் தளமாகக் கொண்டு வெளியில் இருந்துகொண்டும் பணியாற்றுபவராக மாறும் போதே கல்வியாளர்களின் பெறுமானத்தை உணரவைக்கும். கல்வித்துறையில் பின்னடைவு எய்தாமல் ஒரு பிரதேசத்தை காத்தல் செய்யும்.

இந்தக் கருமம் கைகூட தமது ஓய்வுக்காலத்தையும் பயனுடையதாக கோருவதுடன் அவருக்கான எனது வாழ்த்துகளையும் தெரிவித்து வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகின்றேன்.

**ஆர். தியாகலிங்கம்**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

## முகாமைக்கு இலக்கணமானவர்

திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள் 29 வருடக் கல்விப் பணியில் பல்வேறு பதவி நிலைகளில் பணிபுரிந்து.வலிகாமம் மற்றும் தென்மராட்சியில் கல்விப்பணியாற்றி இன்று ஓய்வு பெறுகின்றார். இக்குறுகிய காலத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வித்தரம், ஆசிரியப்பணி, கட்டமைப்பு போன்ற யாவற்றினதும் விருத்தியை உயர் வேகம் கொள்ளச்செய்து 2000 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த நிலையை அடைவதற்கு வழிவகுத்துள்ளார். இவர் இன்னும் ஒரு வருடத்திற்கு இங்கு சேவையாற்றினால் தென்மராட்சியின் கல்வித்தரம் உயர் நிலைக்கு வந்து விடும் என்பதே இப்பிரதேச மக்களின் உள்ளக்கிடக்கை. அவ்வளவில் குறுகிய காலத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு சாதனை புரிந்துள்ளார்.

இவரது அளப்பரிய பணியைப் போற்றுவதுடன் அன்பும், பண்பும், மதப்பற்றும் கொண்ட அந்த அன்னையின் ஓய்வுக்காலம் அமைதியும் , வளமும், நிறைய வேண்டும் என தென்மராட்சி மக்களின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

என்றும் மக்கள் சேவையில்,
**நடராஜா இரவிராஜ்,**
**நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.**

## பல்லருளும் பெற்று வாழ்க!

அரச சேவையில் இருப்பவர்கள் உரிய வயது வந்ததும் சேவையில் இருந்து இளைப்பாறுவது நியதியே. ஆனால் அவர்கள் தம் சேவைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற போது எல்லோராலும் மதிக்கப்படுகிறார்கள். இவ்வகையில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடந்த ஏழு மாதங்களாகத் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராகவும் சேவைபுரிந்து 30.10.2005அன்று இளைப்பாறிச் செல்லும் திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள் தம் சேவையின் சிறப்பால் எல்லோர் மனத்திலும் இடம் பிடித்துள்ளார். அவர் தென்மராட்சியிற் சேவை புரிந்த காலம் மிகச் சொற்பமேயெனினும் கல்விச் சமூகம் பெருமையடையக் கூடிய காலம் இக்காலமாகும். அன்னார் தம்ஓய்வுக்காலத்தில் பல்லருளும் பெற்று வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.எஸ். ஸ்ரீநிவாசன்,**
பிரதேச செயலர்,
தென்மராட்சி.

## ஆளுமை மிக்க நிர்வாகி

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து எமது அலுவலகத்தின் ஒருபிரிவு வலிகாமத்தில் இயங்கியகாலத்தில் எமக்குத் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வழிகாட்டியவர் எமது கல்விப் பணிப்பாளர். குறுகிய காலம் எமது பிரதேசத்தில் பணியாற்றிய போதும் எமது பாடசாலைகளினதும் மாணவர்களினதும் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர். தான் ஓய்வுபெறுவதற்கு முன்னர் வலயத்திற்கென ஒரு காணியைப் பெற்றுவிட வேண்டுமென அல்லும் பகலும் பாடுபட்டவர்.

எல்லோர் மனங்களிலும் நினைவில் நிற்கக்கூடிய ஆளுமைமிக்க ஒரு கல்விப் பணிப்பாளராகச் செயற்பட்டார். இறைநம்பிக்கை மிக்க அவருக்கு ஓய்வுக்காலம் சிறக்கவும் தனது குடும்பத்தாருடன் எல்லா நலனும் பெற்றுச் சிறப்புடன் வாழவும் எல்லாம்வல்ல இறைவன் துணையிருப்பார்.

**நா.சத்தியநாதன்**
*கோட்டக்கல்வி அலுவலகம்,*
*சாவகச்சேரி.*

# தேர்தலைக் கண்டும் காணாமலே தமது வழி போகின்றது தமிழினம்

ஸ்ரீலங்காவின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்னும் 18 நாள்களில் நடக்கப்போகின்றது. நாட்டின் தலைவர் ரணிலா? மஹிந்தவா என்பது அன்று தெரிந்துவிடும்.

எப்படியாவது நாட்டின் தலைவராக - ஐந்தாவது ஜனாதிபதியாக - பதவி ஏற்றுவிடவேண்டும் என்ற பேரவாவுடன் வாக்குறுதிகளை அள்ளிவீசி வருகின்றனர் இரு பிரதான வேட்பாளர்களும்.

இலங்கை ஒரு பௌத்த நாடு. இந்த நாடு பௌத்த சிங்கள மக்களுக்கே சொந்தமானது என்ற கோஷம் இரு வேட்பாளர்களிடம் இருந்தும் வெளிப்பட்டபோதும் தமிழர் விவகாரம். தான் தேர்தலில் உச்சம் பெற்றுநிற்கின்றது.

ஆட்சிக்கு வந்ததும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகளுடன் உடனடியாகவே பேச்சை ஆரம்பிப்போம். ஏன் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் கூடப் பேசுவோம். யுத்தம் அற்றவகையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்போம் என்றவாறாக வாய்கிழியக் கத்திவருகின்றனர் இரு வேட்பாளர்களும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவோம் என்று முணுமுணுத்துக் கொண்டு, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தை முன்னிலைப்படுத்திப் பிரசாரக் கூட்டங்களில் முழக்கமிட்டு வருகின்றனர் அவர்கள்.

கடந்த 50 வருடகால வரலாற்றில் சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்பட்டுவரும் தமிழ் மக்கள் இனியும் அந்தத் தலைமையை நம்பத் தயாரில்லை என்றவகையில் செயற்படத் தயாராகிவிட்டனர்.

### கண்டும் காணாத போக்கு...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கண்டும்காணாத போக்கை விடுதலைப் புலிகள் கைக்கொண்டு வருவதை அவர்களின் அண்மைய காலச் செயற்பாடுகள் உணர்த்துகின்றன.

தெற்கில் சிங்களத் தலைமைகள் பதவிக்காக அடிபடும் நிலையில் விடுதலைப் புலிகள் தேர்தலைக் கவனத்தில் எடுக்காமல் - அதுபற்றி அலட்டிக்கொள்ளாமல் - தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு - கிழக்கில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி வேட்பாளர்களில் பிரதான வேட்பாளர்கள் இருவரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டார்கள். ஆனால், அது தொடர்பாகக் கருத்து எதையும் வெளிப்படுத்தாமல் தம்பாட்டில் - தமது கட்டுமானங்களை விஸ்தரிப்பதில் - விடுதலைப் புலிகள் தீவிரம் காட்டிவருகின்றனர்.



தமிழர் தாயகத்தில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மட்டுமே இரு பிரதான வேட்பாளர்களும் பிரசாரக் கூட்டங்களை வைத்து ஆதரவு தேடும் செயற்பாட்டை மேற்கொண்டுவருகின்றனர். அதைக் கண்டும் காணாத நிலையில் புலிகள் இருக்கின்றனர். இதுவிடயமாக அவர்கள் அலட்டிக் கொள்ளமாட்டார்கள் என அவர்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

எந்த ஒரு வேட்பாளருக்கும் ஆதரவுப் போக்கை விடுதலைப் புலிகள் காட்டப்போவதும் இல்லை; தேர்தல் தொடர்பான விடயங்களில் அவர்கள் தலையிடப்போவதுமில்லை. அவர்களின் சமிக்ஞைகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் இதுவரை பிரதான வேட்பாளர்களில் எவரினதும் பிரசாரங்கள் இடம்பெறவில்லை. அவர்களின் சுவரொட்டிகள் சில நகரப் பகுதிகளில் காணப்பட்டபோதும், பின்னர் அவை பொலீஸாரால் அகற்றப்பட்டுவிட்டன.

ஜனாதிபதி வேட்பாளர்களில் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வரும் சில கட்சிகளின் வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து ஆதரவு தேடும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர். ஆனால், பிரதான வேட்பாளர்கள் இங்கு எட்டிப்பார்க்கக்கூட இல்லை.

இந்நிலையில், தேர்தலைப் பகிஷ்கரித்து, சிங்களத் தலைமைகளைத் தமிழ் மக்கள் நம்பத் தயாரில்லை என்ற செய்தியை சர்வதேசத்துக்கு விடுக்கும் செயற்பாடுகள் தீவிரமாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு மக்களுக்குப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மூலம் தெரிவிக்கப்பட்டுவந்தது. இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தி உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் கடந்த வியாழக்கிழமை பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் ஏகோபித்து பங்கு அளித்த தமிழ்மக்கள் ஏன் ஜனாதிபதித் தேர்தலை நிராகரிக்கிறார்கள் என்பதற்குரிய காரணங்களை அந்த அமைப்பு விளக்கியுள்ளது.



* சிங்கள தேசம் தமிழர்களுக்கு நீதியான அரசியல் தீர்வினை ஒரு போதும் வழங்காது என்ற 57 ஆண்டுகால வரலாற்று உண்மையை சர்வதேசத்தின் முன் இடம்பெறும் பேச்சுக் களத்தில் நிருபிக்க வேண்டி யிருந்தது.
* 1977இல் தமிழ்த் தேசமக்கள் வழங்கிய விடுதலை ஆணையை சர்வதேச கண்காணிப்பாளர்கள் முன் இடம்பெற்ற - அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட - ஜனநாயகத் தேர்தல் களத்தில் நிரூபிக்க வேண்டியிருந்தது.
* தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதையும் அவர்களால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைவுக்கு ஏகோபித்த ஆதரவை வழங்குகிறோம் என்பதையும் அதே களத்தில் நிரூபிக்கவேண்டியிருந்தது.

இந்த மூன்று காரணங்களுக்காகப் பொதுத் தேர்தலைத் தமிழ் மக்கள் பயன்படுத்தினார்கள். இதை அத்தேர்தலில் அவர்கள் சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டிவிட்டனர். இனி ஏன் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவேண்டும் என்ற நிலைக்கு மக்கள் வந்துவிட்டனர் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாராந்த அரசியல் அலசல்
குகா

இதே கருத்தை வலியுறுத்தி பல்வேறு பொது அமைப்புகளும் மக்கள் முன் தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை முன்வைக்கத் தொடங்கிவிட்டன.

### தெற்கில் பாதிப்பு

தமிழர் தரப்பு எடுத்துள்ள முடிவு தெற்குத் தேர்தல் களத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தத்தான் போகின்றது.

தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் வெளிப்படுத்த முனைந்து நிற்கும் இந்தவேளையில், சர்வதேச சமூகமும் கரிசனையுடன் அவர்களது முடிவை நோக்குவதாக ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

தமிழர் தரப்பு முடிவு வெளிவந்த கையோடு சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் இதுதொடர்பாக ஆராய்ந்துள்ளதுடன், வடக்கில் உள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிலைமைகளை அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

தமிழ்மக்கள் எடுத்துள்ள முடிவு எதிர்வரும் காலத்தில் பேச்சு மூலம் தீர்வுகாணும் நிலைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என்ற கேள்வி சர்வதேச பிரதிநிதிகளிடம் எழுந்துள்ளதாக ராஜதந்திர வட்டாரங்களுடன் தொடர்புடையவர்கள் தெரிவித்தனர்.

தமிழர் எடுத்த முடிவு சமாதானத்தை நேசிப்பவர்களுக்கு எதிராக அமைந்து. அது யுத்தத்தை நாடுபவருக்கு வாய்ப்பாக அமையுமோ என அஞ்சவேண்டியுள்ளது என்று சமாதானத்தில் நாட்டம் கொண்ட புத்திஜீவி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் சிங்களத் தலைமைகளை நம்பி எதுவும் நடக்காத நிலையில், ஏமாற்றம், விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் நோக்கில் தேர்தலைப் பயன்படுத்தப் போகின்றார்கள். அவர்கள் எடுத்துள்ள முடிவு, தெற்கில் எத்தகைய மாற்றத்தைக் கொண்டு வரப்போகின்றது என்ற சிந்தனை தமிழர்களிடம் எழப்போவதில்லை.

தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்ற சிந்தனையே தமிழர்களிடம் விஞ்சி நிற்கின்றது. தெற்கில் இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? எந்த தலைமையாலும் பயன் கிட்டப்போவதில்லை என்ற நிலைக்கு அவர்கள் வந்துவிட்டனர்.

சிங்கத் தலைமைகளை நம்பி ஏமாந்துவிட்டோம். தாயகப் பிரதேசத்தில் எமது அபிலாசைகளுடன் சுயநிர்ணய உரிமையுடன் வாழ நாங்கள் விரும்புகின்றோம் என்ற செய்தியைச் சர்வதேச சமூகத்துக்கு இந்தத் தேர்தல் மூலம் விடுக்கத் தயாராகிவிட்டோம் என்கின்றனர் மக்கள்.

மக்கள் எடுத்துள்ள முடிவால் தெற்கில் ஆட்சி மாற்றம் எந்தவகையில் அமையப் போகின்றது? போரா? சமாதானமா? என்று குரல் எழுப்பும் ரணிலுக்காக ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு எனக் குரல் எழுப்பும் மஹிந்தவுக்கா சாதகமாக அமையப்போகின்றது? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தேர்தல் சலசலப்புகள் தெற்கில் தீவிரமாகியுள்ள நிலையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஒரு நடைமுறை அரசுக்கான கட்டுமானங்களை அமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஓர் அரசுக்கான படைபலத்தைப் பொறுத்த வரையில் தரைப்படை - கடற்படை - விமானப்படை என முப்படைகளும் அமைக்கப்பட்டு பலமான நிலையில் அவை வளர்ச்சி கண்டு வருகின்றன.

சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்காகக் காவல்துறை, நீதி, நிர்வாகத்துறையும் ஆரம்பிக்கப்பட்டு சீராகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன.

## தேசக்கட்டுமானங்களின் உச்சமாய் ஒலிக்கப்போகிறது தேசிய கீதம்

தனியான நிதித்துறை, தனியான நீதித்துறை தனியான நிர்வாகத்துறை, தனியான திட்டமிடல் துறை, தெளிவான பொருண்மிய மேம்பாட்டுத்துறை, தனியான வைத்தியத்துறை, தனியான ஒளி, ஒலிபரப்புச் சேவை என பல்துறைகளையும் கொண்டு தமிழர் தரப்பு தலைநிமிர்ந்து நிற்கின்றது.

### தேசிய கீதம்

ஓர் அரசுக்கான கட்டுமானங்களைக் கொண்டு விளங்கும் தமிழர் தரப்பின் தனித்துவத்தை வெளிப்படுத்தத் தேசியக் கொடி பிரகடனம் செய்யப்பட்டுவிட்டது. தற்சமயம் தமிழீழ தேசியக் கீதத்தை உருவாக்கப் புலிகள் முற்பட்டுள்ளனர்.



ஓர் அரசின் - இனத்தின் தனித்துவத்தை, பண்பாட்டு விழுமியத்தை வெளிப்படுத்தத் தேசியக் கொடி, தேசிய கீதம் அடிப்படையானவை.

தமிழீழ அரசுக்கான கொடியைப் பிரகடனம் செய்தது போன்று, தமிழீழ அரசுக்கான கீதம் (பண்) ஒன்றை உருவாக்க விடுதலைப் புலிகள் தற்சமயம் அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழீழத் தேசியப் பண்ணினை ஆக்கும் அருமுயற்சியில் பங்கேற்குமாறு தாயகத்திலும் உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழுறவுகளை விடுதலைப் புலிகள் அழைத்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரு நடைமுறை அரசின் படை பல, நிர்வாக அமைப்புகளுடன் தனியான பண் அவசியம் என உணர்ந்த தமிழர் தரப்பு, உருவாக்கவிருக்கும் பண்,-தமிழீழ அரசில் ஒலிக்கப்போகின்றது.

அந்தப் பண் தாயகத்தில் மட்டும் இன்றி தமிழர் வாழும் மூலைமுடுக்கெல்லாம், பட்டிதொட்டி எல்லாம் ஒலிக்கப் போகின்றது. அதன்மூலம் எழுச்சிபெறப் போகின்றது தமிழர் தாயகம். எழுச்சிபெற்று தமக்கென அரசை அமைக்கும் தமிழ் மக்களின் கனவு நனவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்று கருதலாம். *

ஒக்டோபர் - வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
ஆசிரிய இடமாற்றங்களும் அரசியல் தலையீடும்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு..
வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272



# விழிப்பின் பதிவுகள்

உதயன் TV

## வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்கள் அரசியல் அனாதைகளா?



இவ்வருடம் ஒக்டோபர் மாதத்துடன் வடமாகாண முஸ்லிம்களின் அகதி வாழ்வுக்கு வயது 15 ஆகின்றது. காலம் காலமாக தமது பூர்வீக பூமியில் கௌரவத்துடன் வாழ்ந்த இந்த சமூகம் எவ்வித கால அவகாசமுமின்றி 1990ம் ஆண்டு ஒக்டோபர் இறுதி வாரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் முற்று முழுதாக இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் மிகப்பாரிய வடுவாக விளங்குகின்ற இந்த பலவந்த வெளியேற்றத்தின் பின்னால் அகதிகள் என்ற பெயர்தாங்கிகளாக இந்த சமூகம் ஏனைய மாவட்டங்களில் பல சவால்களுடன் வாழ்ந்து வருகின்றது.

வடமாகாண முஸ்லிம்களின் பூர்வீக கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளமை, முறையான நஷ்டஈடுகள் வழங்கப்படாமை, தொழில்வாய்ப்பு பிரச்சினைகள் போன்ற வாழ்வியல் நெருக்கடிகளுடன் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் காணப்படுகிறது. இவற்றை விட முக்கியமாக அவர்களின் பாதுகாப்பு பிரச்சினை குறித்த சர்ச்சை நோக்கப்பட வேண்டியுள்ளது. வடமாகாணத்தில் கணிசமான பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் அல்லது அவர்களால் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வகையில் காணப்படுகின்றன. எனவே இப்பிரதேசங்களில் மீள்குடியேறுவதற்கு இதுவரையில் முறையான பாதுகாப்பு உத்தரவாதத்தினை வழங்குவதிலோ அல்லது திட்டமிட்ட மீள்குடியேற்றங்களுக்கு உதவும் வகையிலோ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அமையவில்லை என்ற சிந்தனை வடக்கு முஸ்லிம்களிடம் வலுவாக உள்ளது. அரச கட்டுப்பாட்டு பகுதிகளிலே அமைந்திருக்கின்ற கிராமங்களில்கூட இயல்பு நிலை தோன்றாத நிலையில் மீள்குடியேற்றம் தாமதித்துள்ளது.


குறிப்பாக மன்னார் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கு முசலி - போன்ற பகுதிகளிலே குடியேறுவதில் சிக்கல்கள் தோன்றுகின்றன. இடைக்கிடையே வெளியிடப்படும் பயமுறுத்தல் துண்டுப்பிரசுரங்கள் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை நிறுத்துமாறு அச்சுறுத்துகின்றன என மீளக்குடியேறச்சென்ற மக்கள் தெரிவிக்கின்றனர். அதேபோன்று விடுதலைப்புலிகளின் மிக இறுக்கமான பாதுகாப்பு வலயமாக காணப்படும் முல்லைத்தீவிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் மீள்குடியேறுவதற்கு அங்கு காணப்படும் பாஸ் நடைமுறைகள், போக்குவரத்தில் காணப்படும் இடைஞ்சல்கள், தமது கமஞ்செய்யும் நிலங்களை பெற்றுக்கொள்வதிலுள்ள பிரச்சினைகள் போன்றன தடைகளாக உள்ளன. யாழ் சோனக தெருப்பகுதியை எடுத்துக் கொண்டால் அது முழுமையாக அரசின் கட்டுப்பாட்டினுள் காணப்படுவதால் தொழில் செய்யும் நோக்குடன நூற்றுக்கும் குறைவான குடும்பங்கள் அங்கு சென்று குடியேறியிருக்கின்றன. வவுனியா மாவட்டத்தில் மாத்திரம்தான் இதுவரையில் 80 சதவீதத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் மீளக்குடியேறியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அகதிகளாக வாழ்ந்துவரும் பிரதேசங்களிலும் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. அகதி முகாம் வாழ்க்கை, அதில் காணப்படும் துயரங்கள் ஒரு புறம் இருக்க வளப்பங்கீடு தொடர்பான பிரச்சினை அண்மைக்காலங்களாக அதிகரித்து வருகின்றது. வெளியேற்றப்பட்டு வரும்போது ஒரு இலட்சத்திற்கும் குறைவாக இருந்த வடக்கு முஸ்லிம்களின் சனத்தொகை தற்போது 180,000 தாண்டியுள்ளது. அதே வேகத்தில் உள்ளூர் மக்களின் சனத்தொகையும் அதிகரித்திருக்கின்றது.

- இக்பால் அஜீட்

எனவே வளங்களை பெரியதொரு சனத்தொகை பகிரவேண்டிய நிலை காணப்படுகிறது. குறிப்பாக தொழில்வாய்ப்பு, அரசாங்க நியமனங்கள், கல்விசார் வள ஒதுக்கல்கள், காணி உரிமை என்பவற்றில் இப்பிரச்சினை தோன்றியுள்ளமைக்கு பல உதாரணங்களை சுட்டிக்காட்டலாம். உதாரணமாக ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாரிய ஆசிரியர் பற்றாக்குறையை காரணங்காட்டி கடந்த செப்டெம்பர் 21ம் திகதியிலிருந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது பகிஷ்கரித்து வருகிறார்கள். உள்ளூர் மாணவர்களை மட்டும் கருத்திற்கொண்டால் இந்த பாடசாலையில் ஆசிரியர்கள் போதுமானதாக காணப்பட்டபோதிலும் இப்பாடசாலையின் மாணவர் தொகையின் 90 சதவீதமாக காணப்படும் வடமாகாண முஸ்லிம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இன்னும் பல ஆசிரியர் நியமனங்கள் தேவைப்படுகின்றன.

அதேபோன்று பல்கலைக்கழக தேர்வு, அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற புதிய நியமனங்கள் என்பவற்றில் உள்ளூர் மக்களுக்கும் வெளியேற்றப்பட்ட மக்களுக்கும் இடையே பலத்த போட்டி நிலவுகிறது. மேலும் வெளியேற்றப்பட்ட மக்களின் வாக்குரிமையை அவர்களின் சொந்த இடங்களில் வழங்குவதா, அல்லது தற்போது வசிக்கின்ற மாவட்டங்களில் வழங்குவதா என்ற சர்ச்சையும் இந்த மக்களின் அரசியல் எதிர்காலத்தை பாதித்துள்ளது. இந்த விவகாரத்தை பொருத்தவரையில் பெருமளவிலான வடமாகாண முஸ்லிம்களின் வாக்குரிமை அவர்களின் சொந்த இடங்களிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் இடம்பெயர்ந்து வாழும் பிரதேசங்களில் பெறக்கூடிய அபிவிருத்திகளை பெறமுடியாதுள்ளது எனினும் இவ்வாறு இன்று வாக்குப்பதிவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் வளங்களை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூர் மக்களுடன் போட்டிபோட வேண்டிய சூழல்கள் என்பன அவர்கள் அரசியல் அனாதைகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எமக்கு உணர்த்துகிறது.




## ஜனாதிபதி எதிர்கட்சி தலைவர் சந்திப்பு இனப்பிரச்சனை தீர்வில் பங்களிக்குமா ?

- என். ஜீவேந்திரன்

இலங்கையின் நீண்ட கால இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் விடயத்தில் அரசியல்வாதிகளின் சுயநலமே தடையாக இருந்தது என்பதை சகலரும் அறிவர். குறிப்பாக சுதந்திரத்திற்கு பின்னர் ஆட்சியில் இருப்பவர்கள் தமிழ் தரப்புடன் ஏதாவது ஒரு இணக்கத்திற்கு வரும்போது அதற்கு எதிராக கடுமையான எதிர்ப்பு போராட்டங்கள் வெடித்து கிளம்பியிருக்கின்றன. இந்த செயற்கையான எதிர்ப்பு போராட்டங்களுக்கு பின்னால் நிச்சயமாக அந்த காலகட்டத்தின் எதிர்கட்சியும், இனவாத குழுக்களுமே இருந்திருப்பதை காணமுடியும்

எனினும், அண்மைக் காலங்களில் இந்நிலை மாற்றம் பெற்றுள்ளது. ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களின் ஆட்சியின் போதும் 2001ல் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின் போதும் எதிர்கட்சிகள் சமாதானத்தினூடாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உடன்படுகின்றன. இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலின் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க தான் ஆட்சிக்கு வந்ததும் தீர்வு விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியுடன் இணைந்து செயற்பட போவதாகவும், அவர்களை இணைத்துக் கொண்டே தீர்வு முயற்சிகளில் ஈடுபடப்போவதாகவும் அறிவித்திருந்தார். மேலும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி இது தொடர்பாக கலந்துரையாட முன் வருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த சந்திப்பு கடந்த 24ஆம் திகதி திங்களன்று இடம்பெற்றுள்ளது

இந்த சந்திப்பானது சமஷ்டி மூலமான தீர்வுக்கு இரு கட்சிகளும் கொண்டுள்ள இணக்கப்பாட்டினை மேலும் வலுப்படுத்துவதாக அமையக்கூடும். குறிப்பாக தற்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான



மஹிந்த ராஜபக்ஷ ஜேவிபியுடனும், சிஹல உறுமயவுடனும் கூட்டு சேர்ந்தததுடன் அக்கட்சிகளின் கொள்கைகளான ஒற்றையாட்சிக்குள்ளான தீர்வு, மற்றும் புலிகளுடனான கடும்போக்கு போன்றவற்றை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இச்சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் கால நாட்கள் எண்ணப்படுகின்ற சூழலில் மஹிந்த ராஜபக்ஷவிடமே சுதந்திர கட்சியின் பெரும்பாலான அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் குவிந்துள்ள நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பு பலனுள்ளதாக அமையுமா? என்ற கேள்வி எழுவது இயற்கையானதே. அதே வேளை சுதந்திர கட்சியின் தலைமையானது தொடர்ந்தும் சந்திரிகா அம்மையாரிடமே உள்ளது. யதார்த்தத்தின்படி மஹிந்த தேர்தலில் வெற்றி பெறுவாரானால் நிச்சயமாக சுதந்திர கட்சியின் மிகப்பெரும்பாலான உறுப்பினர்கள் அவரையே ஆதரிப்பர் என்பதும், சந்திரிகா அம்மையாரின் கட்டளைகளை உதாசீனம் செய்வர் என்பதும் வெளிப்படையானதே. அதே வேளை மஹிந்த தேர்தலில் தோற்பாராக இருந்தால் சந்திரிகா அம்மையாரின் கரம் பலமடையும் என்பதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

எவ்வாறெனினும் கட்சி தலைமை சந்திரிகா அம்மையாரிடம் இருக்கும்போது பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பாக போட்டியாளர்களுக்கான அனுமதியை அவரே வழங்க வேண்டியிருக்கும். அப்போது அவர் தனது ஆதரவாளர்களையே முன்னிறுத்த கூடும். எனினும் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரான பிறகு தொடர்ந்தும் அம்மையாருக்கே ஆதரவாக இருப்பார்கள் என்பதையும் உறுதியாக கூற முடியாது.

எனவே எப்படி பார்த்தாலும் ஜனாதிபதி எதிர்கட்சி தலைவர் சந்திப்பானது ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இனப்பிரச்சனை தொடர்பில் தீர்வுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. அத்துடன் இனவாதிகளுக்கு இந்த சந்திப்பானது மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கும் என்பதும் இயல்பானதே.



## அரசியலில் பெண்கள்

பெண்கள் இலங்கையின் சனத்தொகையில் 52வீதமானோர் பெண்கள் பல்வேறு பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர் கொண்டாலும் அண்மைக்காலங்களில் தாம் எதிர்நோக்கும் இப்பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் நல்ல முறையில் முகம் கொடுக்கும் நிலீல உருவாகி வருகிறது. இன்று பொருளாதார துறையில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு அதிகரித்துள்ளது. சிறு கைத்தொழில் தொடக்கம் பாரிய நிறுவனங்கள் வரை பெண்கள் பல துறைகளில் ஈடுபடுவதுடன் பல்வேறு நிர்வாக பொறுப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல் கல்வி துறையிலும் பெண்களது பங்களிப்பு பிரமிக்கத்தக்களவு வளர்ச்சி யடைந்துள்ளது. இன்றைய பல்கலைக்கழக அனுமதியிலும் பெண்களே முதலிடம் வகிக்கின்றனர். எனினும் பெண்களின் அரசியல் பங்களிப்பை எடுத்து நோக்கும் போது மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்படுவதானது மிகவும் துரதிஷ்டவசமான நிலையாகும். எவ்வளவு தான் பெண்கள் ஏனைய துறைகளில் முன்னேறினாலும் அரசியல் துறையில் காணப்படும் இவ்வீழ்ச்சி நிலையினால் தாம் எதிர்நோக்கும் இப்பிரச்சினைகள், சவால்களில் இருந்து இன்னும் முழுமையாக மீட்சி பெற முடியாத நிலையே காணப்படுகிறது.

இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் உள்ளூர் மட்டங்களில் 1.7 வீதமாகவும், பிரதேச மட்டத்தில் 2.9 வீதமாகவும், தேசிய மட்டத்தில் 4.9 வீதமாகவும் காணப்படுகிறது. இது ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகின்ற போது மிகவும் குறைந்த மட்டமாகும். இது குறைந்தது 30 சதவீதத்திற்கேனும் அதிகரிக்கப்பட்ட வேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.

இலங்கையை பொறுத்தவரையில் இவ்வாறு பெண்களது அரசியல் பிரதிநிதித்துவம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. அரசியல் பற்றிய பெண்களின் மனப்பாங்கு, அரசியலில் காணப்படுகின்ற ஆணாதிக்க நிலை, பெண்களுக்கு பாதுகாப்பற்ற தற்போதைய அரசியல் சூழல் போன்ற காரணிகள் பெண்களது அரசியல் பங்களிபின் வீழ்ச்சிக்கும், அவர்கள் அரசியலில் ஈடுபட பின்நிற்பதற்கு காரணங்களாக கொள்ள முடியும்.

பெரும்பாலான பெண்கள் அரசியல் ஆண்களுக்குரிய விடயமாகவே கருதுகின்றனர். அரசியலின் ஊடாக தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதனையும் அரசியலில் தமக்குள்ள பொறுப்பு என்ன என்பதையும் பெரும்பாலான பெண்கள் உணராமல் இருக்கின்றனர். ஆண்களை போலவே சமூகத்தில் பெண்களுக்கும் பொறுப்புக்களும், கடமைகளும் காணப்படுகின்றன. இப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அரசியல் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்தோடு நமது நாட்டின் பெண்களின் துரதிஷ்டவசமான வாழ்க்கை நிலையை மாற்றியமைப்பதற்கும், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் முக்கியத்துவப்படுகின்றது. எனவே அரசியலில் பெண்களின் குரலை ஒலிக்கச்செய்வதுடன் இந்த நாட்டின் அரசியல் மற்றும் கொள்கை திட்டமிடல் நடவடிக்கைகள் அனைத்திலும் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இன்று அரசியலில் காணப்படுகின்ற ஆணாதிக்க நிலை பெண்களது அரசியல் பிரவேசத்திற்கு பெரும் தடையாக உள்ளது. நாட்டில் காணப்டுகின்ற அரசியல் கட்சிகள் பெண்களின் அரசியல் பங்களிப்பு குறித்த விடயங்களில் பாரபட்சமாக நடந்து கொள்வதும்,

- ஏ. உசாமா

நாட்டின் ஜனாதிபதி ஒரு பெண்ணாக இருந்தும் கூட பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படாதது என்பன கண்டனத்துக்குரிய விடயங்களாகும்.

அதேபோல் நாட்டில் காணப்படுகின்ற ஒழுங்கற்றதும், பாதுகாப்பற்றதுமான அரசியல் சூழ்நிலைகளும் பெண்கள் அரசியலில் ஈடுபட பின்னிற்பதற்கான காரணங்களாக கொள்ளப்படுகின்றன. நாட்டில் இடம்பெறுகின்ற அரசியல் படுகொலைகள், தேர்தல் வன்முறைகளினாலும் ஊழலும், ஒழுங்கற்ற அரசியல் நடவடிக்கைகளினாலும் பெண்கள் அரசியலை வெறுப்பதற்கும், அதிலிருந்து ஒதுங்குவதற்கும் காரணங்களாக அமைகின்றது. எனவே இந்நிலைகள் மாற்றப்பட்டு இவர்களின் அரசியல் பிரதிநிதித்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது எதிர்கால அரசியல் முன்னெடுப்புகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான விடயங்களாகும்.

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும்.
விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# தாயகப் பிரதேசம் வேண்டுமென 1958 இல் தமிழர்களிடம் மேலோங்கிய இலக்கை எய்தும் காலம் அண்மிக்கிறதா?

## சமஷ்டியை நோக்கியேனும் நகரும் எண்ணம் சிங்களத் தலைமைகளுக்கு ஓரளவேனும் வந்திருக்கிறது

செல்லப்பா நடராசா

கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் பங்கு கொண்ட சமார் இரண்டரை இலட்சம் தமிழ் மக்கள் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என வீர கர்ச்சனை எழுப்பிய போது நான் ஒரு கணம் தந்தை செல்வா அவர்களை நினைவு கூர்ந்து கொண்டேன்.

இலங்கையில் சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் வடக்கு - கிழக்கு இணைந்த அகண்ட தமிழ் மாநிலம் ஒன்று உருவாக வேண்டு மெனத் தந்தை தமது வாழ்நாள் முழுவதும் பெரிதும் அவாவுற்றார். தமது இலட்சியத்திற்காக அவர் நாடாளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் பேசினார்; வாதாடினார்; போராடினார். பல இனமக்கள் ஒற்றுமையாக ஆனந்தமாகப் பெருவாழ்வு வாழ்வதற்கு கனடாவையும் சுவிற்ஸர்லாந்தையும் இன்னும் பல நாடுகளையும் முன்னுதாரணமாகக் காட்டினார். இந்த நோக்கத்தை அடையும் பொருட்டே 1949 ஆம் ஆண்டில் கோப்பாய்க் கோமகன் சி.வன்னிய சிங்கம் அவர்களது துணையுடன் தந்தை அகில இலங்கைத் தமிழரசுக் கட் சியை ஆரம்பித்தார். தந்தை எமக்கு எமது நிலம் வேண்டும் என்பதை அவரின் தாரக மந்திரமாகவும் இருந்தது. இதுவே இன்றைய இளைஞர் படையணிகளினதும் பொது மக்களினதும் வலுவான கோரிக்கையாகவும் இருப்பதைப் பார்கிறோம்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க, கிழக்கு மாகாணத்தில் அல்லை, கந்தளாய், பட்டிப்பளை யாற்றுப் பகுதிகளில் பெரும் எடுப்பில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை முன்னெடுத்தார். அப்போது தந்தை செல்வாவும் அவரது கட்சியினரும் கைகட்டி அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. மாறாக எமது நிலம் எமக்கு வேண்டும்; அதில் கை வைக்காதே எனப் போர்க்கொடி தூக்கினார்கள்!

### சட்டமறுப்புப் போராட்டம்

இலங்கை சுதந்திரம் அடைந்த கையோடு மலையகத் தமிழ் மக்களது வாக்குரிமைகள், குடியரிமைகள் பறிக்கப்பட்டன. அதனால், அவர்கள் அன்று ஏழு நாடாளுமன்றப் பிரதி நிதித்துவங்களை இழந்தனர். 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறை வேற்றப்பட்டதன் பயனாக முழு இலங்கைத் தமிழ்பேசும் மக்களுமே தமது மொழி உரி மைகளைப் பறிகொடுத்தனர். இதன் விளை வாகப் பல்லாயிரக்கணக்கான தமிழ் அரச ஊழியர்கள் பாதிப்புக்குள்ளாயினர். இவற்றை கருத்தில் எடுத்த தந்தையும் அவரது கட்சியினரும் 1957 ஆம் ஆண்டு மாபெரும் சட்டமறுப்புப் போராட்டம் ஒன்றுக்குத் தயாரானார்கள். 'ஆகஸ்ட் போராட்டம்' என அதற்குப் பெயரிடப்பட்டது. லட்சம் தொண்டர்களைத் திரட்டும் பணியிலும் போராட்டக் குழுவினர் ஈடுபடலாயினர். போராட்டத்திற்கான பிரசாரங்களில் அ. அமிர்தலிங்கம், வி.என்.நவரத்தினம், வ. நவரத்தினம், டாக்டர் இ.எம்.வி. நாகநாதன், என்.ஆர்.ராஜவரோதயம், எஸ்.எம். இராசமாணிக்கம், செ.இராசதுரை, மசூர் மௌலான, அறப்போர் முன்னணிப் பிரமுகர் அரியநாயகம் போன்ற தலைவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பட்டி தொட்டி எங்கும் ஈடுபடலாயினர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் லேக்கவுஸில் பத்திரிகையாளனாகப் பணிபுரிந்த எனக்குப் பெரியவர் ஆகஸ்ட் போராட்டம் எதற்காக என்பதை விளக்கி பிரத்தியேகச் சிறப்புச் செவ்வி ஒன்றை அளித்தார். அதில் **''வடக்குக் கிழக்கிணைந்த தமிழ்பேசும் மக்களது காணியின் உறுதி இன்று அவர்கள் கையில் இருக்கிறது. அந்த உறுதியை நாம் மீளப் பெறு வதே எமது இன்றைய போராட்டத்தின் நோக்கமாகும்.''** என்பதே தந்தை அளித்த விளக்கமாகும்.


*''வடக்கு - கிழக்கிணைந்த தமிழ்பேசும் மக்களது காணியின் உறுதி இன்று அவர் கள் கையில் இருக்கிறது. அந்த உறுதியை நாம் மீளப் பெறுவதே எமது இன்றைய போராட்டத்தின் நோக்கமாகும்.''*

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

தமிழரசுக் கட்சியனரின் ஆகஸ்ட் போராட்ட ஆயத்தங்களையும் ஆரவாரங்களையும் கருத்திலெடுத்த அன்றைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க, நாட்டு அரசியல் நிலைமைகள் மோசமாவதை உணர்ந்து தந்தை செல்வா அவர்களுடன் பேச்சுக்களை நடத்த முன்வந்தார். அதன் பெறுபேறாக 1957 ஆம் ஆண்டு வருட நடுப்பகுதியில் உருவானதே சரித்திரப் பிரசித்திபெற்ற பண்டா - செல்வா ஒப்பந்தமாகும்.

மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் ''தமிழ் பேசும் மக்களுக்கு விலைமதிக்க முடியாத உரிமைகள் பல கிடைக்கவுள்ளன'' எனப் பெரியவர் மீண்டும் எனக்களித்த விசேட செவ்வியில் தெரிவித்திருந்தார். உண்மையில் பண்டா - செல்வா ஒப்பந்தம் சிறப்பானதோர் அரசியல் அதிகாரப் பகிர்வென அன்று புத்திஜீவிகளால் பெரிதும் மெச்சப்பட்டது.

அந்தநாளில் எட்டு அங்கத்தவர்களுடன் மட்டுமே நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்குப் பாதயாத்திரை சென்றார். அந்தப் பாத யாத்திரையை இம்புல் கொடையில் வைத்து எஸ்.டி. பண்டாரநாயக்க தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தொண்டர்கள் துகிலுரிய ஓட ஓட அடித்து விரட்டினர். அன்று முதல் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களால் எஸ்.டி.பண்டார நாயக்க கிம் புல்கொட வீரயா என அழைக்கப்பட்டார்.



பிரதமரின் வாசஸ்தலத்திற்கு முன்னால் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து பௌத்த துறவிகள் சத்தியாக் கிரகப் போராட்டம் நடத்தியமையும், பௌத்த துறவிகளுடைய கோரிக்கைகளுக்கு பண்டார நாயக்க அடிபணிந்தமையும் ஒப்பந்தம் செல்லாக்காசாக்கப் பட் டமையும் எனது பேனாவின் பதிவுகளாகின. இந்த நிலையில் சிங்களவர் - தமிழர் அரசியல் நெருக்கடிகள் மேன்மேலும் விசுவரூபம் எடுக்கலாயின.

### 1958ஆம் ஆண்டு வகுப்புக் கலவரம்

மாபெரும் எடுப்பிலான வகுப்புகள் கலவரமொன்றை இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் 1958 ஆம் ஆண்டில் சந்தித்தனர். பலநூறு தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். தமிழ் மங்கையர்கள் மானபங்கம் செய்யப்பட்டனர். தமிழ்மக்கள் அடைந்த துன்ப துயரங்கள், இழப்புகள் சொல்லுந்தரமன்று. இதில் அகப்பட்டுக்கொண்டவர்களுள் யானும் ஒருவன். அகதி முகாம்களில் தஞ்சமடைந்த பல் லாயிரக்கணக்கான மக்கள் வடக்கு - கிழக் குப் பகுதிகளுக்குக் கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழ்மக்களுக்குக் காணி நிலம் வேண்டும் எனக் கோரித் தமிழ்த் தலைவர்கள் பிரசாரஞ் செய்த உச்சக் கட்டத்தில் தான் வகுப்புக் கலவரம் வெடித்த தென்பது இங்கு சிந்திக்கற்பாலது.

வகுப்புக் கலவரத்தை அடுத்துத தமிழ் பேசும் மக்களது மனோநிலை எவ்வாறு இருக்கின்றதென்பதை நாடியோட்டம் பிடித்துப் பார்க்கும் பொருட்டு, லேக்கவுஸ் நிறுவனத்தினர் வடக்கு - கிழக்கில் சுற்றுப் பயணம் ஒன்றுக்கான ஏற்பாடுகளைச் செய்து தந்தனர். 1959 ஆம் ஆண்டு மார்ச் ஏப்ரல் மாதங்களில் எனது பயணம் இடம்பெற்றது. சிங்கள அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருந்த திருகோணமலையில் பல வாரங்கள் தங்கித் தலைவர்களுடனும் மக்களுடனும் கலந்துறவாடினேன். வடக்கிலும் அப்படியே கருத்தறியும் பயண முடிவில் எட்டு முழுப்பக்கக் கட்டரைகளை எழுதினேன் அவற்றின் அடி நாதமாகத் தமிழ் மக்களது தாயகக் கோட்பாடும் எமது நிலம் எமக்கு வேண்டும் எனும் கோரிக்கையுமே முதன்மைப் படுத்தப்பட்டன.

### தாயகப் பிரதேசம் வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது

'இன்று மக்கள் கவலை எல்லாம் காணிக் குடியேற்றம் பற்றியதே. சிங்களப் பகுதிகளில் அடிவிழுந்தபொழுது எமக்கென்று ஒரு தனிப் பகுதி 'தாயகப் பிரதேசம்' இருந்தபடியால் அல்லவோ பத்துக்கப்பல்களில் அகதிகளாக எமது பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தோம். எமக்கு எமது மொழி எவ்வளவு முக்கிய மோ அதை விட எமது பாரம்பரியமான பிர தேசங்கள் முக்கியமானவை. அவை பறி போகாமல் காப்பாற்றப் பட வேண்டும் என் பதே எமது இன் றைய இதயஒலி. எங்கள் மொழி, கலை, கலாசாரம், பொருளாதாரம், பாதுகாப்பான வாழ்வு அனைத்திற்கும் பாதுகாப் பானதோர் கோட்டை போன்று எமது தாயகம் இருக்க வேண்டும்'' என்ற கருத்தே வகுப்புக் கலவரத்தை அடுத்துத் தமிழ் பேசும் மக்கள் மனதில் மேலோங்கி இருந்தது. அதனையே எனது சுற்றுப் பயணத்தில் அவதானிக்க முடிந்ததாக எனது கட்டுரைத் தொடரில் சுட்டிக்காட்டியிருந்தேன் என்று கட்டு ரைத் தொடரை இன்று வரை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பவர் களுள் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் குறிப்பிடத்தக்கவர்.

### 1961 இல் சத்தியாக்கிரகப் போராட்டம்

வடக்கு - கிழக்கிலுள்ள அரச நிர் வாகங்களைச் சுமார் ஆறுமாத காலம் முடக்கி வைத்த 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டம் பற்றிய நினைவு வருகிறது. இராணுவப் பலத்தைப் பிரயோகித்து முறியடிக்கப்பட்டது அந்தப் போராட்டம். தந்தை செல்வா வீட்டுக்காவலிலும் ஏனைய தமிழ்த் தலைவர்கள் பனாகொடை இராணுவ முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டனர் இதை இன்றைய இளம் தலைமுறையினரின் தகவலுக்காகக் குறிப்பிடவேண்டியுள்ளது.

தந்தை செல்வா அவர்கள் வற்புறுத்தி வந்த சமஷ்டி அரசியற் கோரிக்கையை இன்று சிங்களத் தலைமைகள் சில ஏற்றுக் கொண்டுள்ளமை இலங்கை அரசியலில் குறிப்பிட்டுக் கூறத்தகுந்த ஒன்றாகும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இப்போது, இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என பகிரங்கமாகப் பொதுமேடைகளில் பேசிவருகின்றார்.

ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்களும் ''சமஷ்டி முறையிலான தீர்வொன்றுக்கு இணங்க ஐக்கிய இலங்கைக்குள் சிறுபான்மை இனங்களுக்குச் சர்வ தேசத்தின் முன்னிலையில் உரிமைகளை வழங்குவேன்'' எனத் திருமலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அடித்துக் கூறியிருக்கிறார்.

### சமஷ்டியை நோக்கிய நகர்வு

தமிழ் பேசும் மக்களது நீண்டகாலக் கோரிக்கைப்படியும் உலக அழுத்தங்கள், அபிப்பிராயத்திற்கிணங்கவும் ஒரு சமஷ்டி அரசமைப்பை நோக்கி இலங்கை ஓரளவு நகர்ந்து கொண்டி ருக்கின்றது என்பதை அவதானிக்க முடிகிறது.

அதிகாரப் பரவல் விடயத்தில் விடுதலைப் போராளிகளும் தமது இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர் தம் இலட்சிய உறுதியை எவராலும் உடைக்க முடியாமல் உள்ளது.

சுமார் நாலரைத் தசாப்தங்களுக்கு முன்னர் ஒரு சமயம் சிங்களத் தலைவர்களைப் பார்த்துத் தந்தை எஸ்.ஜே.வி. பின் வருமாறு கூறினார்.

**''நாங்கள் இன்று கோரிநிற்கின்ற மிக மிகச் சாதாரணமான உரிமைகளைத்தர நீங்கள் மறுக்கின்றீர்கள். ஆனால், எதிர் காலத்தில் இன்று நாம் கோரி நிற்கின்ற உரிமைகளைவிடக் கூடுதலானவற்றைத் தமிழ் பேசும் மக்களுக்குத்தர நீங்கள் முன்வரும் வேளையில் அதை எமது இளைஞர்கள் நிராகரிக்கின்ற நிலைவரும்''** என்று எச்சரித்திருந்தார். தந்தை கூறியவை எல்லாம் இன்று உண்மையாகி நிற்பதைக் காண்கிறோம்.

*''நாங்கள் இன்று கோரிநிற்கின்ற மிகமிகச் சாதாரணமான உரிமைகளைத் தர நீங்கள் மறுக்கின்றீர்கள். ஆனால், எதிர் காலத்தில் இன்று நாம் கோரி நிற்கின்ற உரிமைகளைவிடக் கூடுதலானவற்றைத் தமிழ் பேசும் மக்களுக்குத்தர நீங்கள் முன் வரும் வேளையில் அதை எமது இளைஞர்கள் நிராகரிக்கின்ற நிலைவரும்''*

சிங்களத் தலைமைகள் சிறுபான்மைத் தமிழ்ச் சமூகங்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது இன்றைய காலத்தின் தேவையாகி விட்டதென்பது எனது அரசியல் கணிப்பு.

எனது ஐம்பது வருடகால அரசியல் அவதானிப்புக்களைக் கொண்டு ஒரு விடயத்தைச் சொல்ல அவாவுகின்றேன்.

இலங்கை அரசியலில் எவருமே எதிர்பாராத வகையில் திடீர் திடீரென மாற்றங்கள் நிகழப்போகின்றன. கிழக்கே சூரியன் உதிக்கையில் இன்றெல்லாம் புதிய ஒளிமயமான காட்சிகள் தென்படுகின்றன. விடியற் பொழுதில் சேவல்கள் கூவும் வேளைகளிலும் ஒருகன சம்பீரமும் மிடுக்கும் தெரிகிறது. குயில்கள், மைனாக்கள், செண்பகங்கள், சிட்டுக் குருவிகள், தேன் குருவிகள் எழுப்பும் இன்னொலிகளிலும் வழமைக்கு மாறான ஒருவித எக்களிப்பை தமிழ் ஈழமெங்கிலும் காணமுடிகின்றது. இவையெல்லாம் எதைச் சுட்டி நிற்கின்றதெனச் சொல்லப்போனால், அரசியல் அதிகாரப் பகிர்வின் மூலம் விடுதலைப் போராளிகளின் கைகள் மேலோங்கப் போகின்றன என்பதேயாகும். தந்தை செல்வா கண்ட கனவு நிஜமாகும் காலம் மிக அண்மித்து விட்டது என்றே எனக்குத் தோன்றுகிறது. மனம் தெளிவாகச் சொல்கிறது.

*காணி நிலம் வேண்டும் - பராசக்தி*
*காணி நிலம் வேண்டும்.*
*- மகாகவிபாரதி.*

FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express FedEx Express

வெளிநாட்டு அழைப்புகளுக்கு

இந்தியா 20/-

4/-

தீபத்திருநாளை முன்னிட்டு விசேட சலுகைகளை எமது அனைத்துக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை எந்த அளவினதானாலும் 5 வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். - கொழும்பு உலக நாடுகளுக்கான விமானப் பயணச் சீட்டுக்களை கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=

லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=

விரைவான பணப்பரிமாற்றத்திற்கு

WESTERN UNION® பணப்பரிமாற்றம்

நம்பகமான துரித சேவை FedEx Express

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 2027 Fax - 021 222 2993


வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

WESTERN UNION பணப் பரிமாற்றம் WESTERN UNION பணப் பரிமாற்றம் WESTERN UNION பணப் பரிமாற்றம்

இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்

WESTERN UNION பணப் பரிமாற்றம் WESTERN UNION பணப் பரிமாற்றம் WESTERN UNION பணப் பரிமாற்றம்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1951.03.28

மறைவு
2001.10.29

அமரர் சண்முகராஜா சிறீஸ்கந்தராஜா
(போட்டோ சிறி)
குரும்பசிட்டி

திதி: திரயோதசி (2005.10.30)

அன்பாலே அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு வழிகாட்டி
எம்மை ஆளாக்கி வாழவைத்த
அன்புத் தெய்வமே! ஆருயிர் அப்பாவே!
நீங்கள் காட்டிய வழியில்
நாங்கள் செல்கிறோம் அப்பா
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை அப்பா எம் துயரம்
எப்போது காண்போம் உங்கள் அன்பு முகத்தை
ஏங்கித் தவித்து நிற்கிறோம்.

போட்டோ சிறி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரமகன் முரளிதாஸ்.

(41998) (39-15-45)

## சுற்றாடல் விவகார சபையின் கூட்டம்

மானிப்பாய்,ஒக்.30

மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகாரசபையின் ஆளுநர் சபைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாய் மெடிக்கிளினிக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி இரா.வசந்தசேனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அனைத்து ஆளுநர் சபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-90-202)

## விசேட நிகழ்வு

வலி. தெற்கு.ஒக்.30

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு விசேட நிகழ்ச்சிகளை சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் "வாசிப்பும் சமூக மேம்பாடும்" பற்றி விசேட உரையாற்றுவார்.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் க.செல்வக்குமரன் "சுன்னாகம் பொதுநூலகத்தின் வளர்ச்சியும் வாசகர்களின் பங்கும்" பற்றி உரையாற்றுவார்.

கவிஞர் கலாபூஷணம் சு.துரைசிங்கம் "வாசிப்பின் வழியே எனது இலக்கிய பயணம்" பற்றி உரையாற்றுவார்.

(202-152)

## பவளவிழா நடத்த ஏற்பாடு

வலி. தெற்கு.ஒக்.30

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையின் பவளவிழா இவ்வருடம் நடைபெறவுள்ளது.

பவளவிழாவையொட்டி வித்தியாசாலையில் புதிய மாடிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

நிக்கொட் நிறுவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பத்து லட்சம் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

பவளவிழாக் கொண்டாட்டங்களின்போது மேற்படி கட்டடம் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (202-152)

# பரீட்சைக்காகப் பட்டபாடுகளை பகிர்கின்றனர் சாதனையாளர்கள்

கடந்த மாதம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறுகளில் வடபகுதியில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டு இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றார்கள் என்பதை இனிவரும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டும் முகமாக சாதனை படைத்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைத் தருகின்றோம்.

இந்த மாணவர்கள் எத்தகைய இலக்கினை நோக்கிச் செல்கிறார்களோ அத்தகைய இலக்கினை வெற்றிகரமாக அடைந்து எமது தாயக மண்ணில் சேவையாற்ற வேண்டுமென்று ஊக்கமளிக்கும் வகையில் உதயனின் இந்தத் தொடர் அமைகிறது.

7

## இரவில்தான் அதிகம் படிப்பேன்; அதுதான் அமைதியான நேரம்!

ஞானசேகரம் துஷ்யந்தினி
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கலைப்பிரிவு



காங்கேசன்துறையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் இடம்பெயர்ந்து சண்டிலிப்பாயில் வசித்து வருகின்றார்.

தனது ஆரம்பக் கல்வியை சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்று தரம் 9 இல் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவரிடம் அவரது கல்வி முறைகள் பற்றி கேட்டேன்.

எனக்கு ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் 3ஏ, பி, 5சி, எஸ் என்ற பெறுபேறுகள் கிடைத்தது.

கலைத்துறை என்பது எனக்கு மிகவும் விருப்பமானதுறை. ஆதலால் அதனை நானாக விரும்பித் தெரிவுசெய்து படித்தேன்.

நான் தெரிந்தெடுத்த பாடங்களில் எனக்கு அரசியல் கடினமானதொன்றாக இருந்தது. 'பாஸ் பேப்பரில்' உள்ளதைத்தான் அதிகம் பயிற்சி செய்துகொள்வேன்.

எப்படியான நேரங்களை படிப்பதற்கு ஒதுக்கிக் கொள்வீர்கள்?

இரவில்தான் அதிக நேரமெடுத்துப் படிப்பேன். அதுதான் மிக அமைதியான நேரமாக இருக்கும். அதிகாலை 2 மணி வரையும் படிப்பது வழக்கம்.

வேறு துறைகளில் ஈடுபாடுகள் இருந்ததுண்டா? அப்படி வேறு ஒரு துறையிலும் ஈடுபாடு இருக்கவில்லை. என்னுடைய முழுக் கவனமும் இலக்கும் படிக்கவேண்டும். அதன் மூலம் சாதிக்க வேண்டும் என்பதில் தான் இருந்தது. இதனை உரிய இலக்காகக் கொண்டேன்.

அப்படியானால் வேறுதுறைகளில் ஈடுபட்டால் கல்விக்குத் தடை என்று கருதுகிறீர்களா?

அப்படி நான் நினைத்ததில்லை சின்ன வயதிலிருந்து இயல்பாகவே எனக்கு வேறு துறைகளில் ஈடுபாடு இருக்கவில்லை. அதனால்தான் அவற்றில் அக்கறை கொள்ளாமல் படிப்பில் கவனம் செலுத்தினேன்.

வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

என்னுடைய இலக்கு எதுவோ அதனை அடைந்து விட்டேன். இனி அடுத்த கட்ட இலக்கினை நோக்கி நகர வேண்டும். அதிலும் வெற்றியடைவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

எந்தவொரு மாணவனும் தனக்குள்ளே தன்னம்பிக்கையினை வளர்த்து தளராத மனத்துடன் எதனையும் எதிர்கொண்டால் எதிலும் எதிர்நீச்சல் போட்டு வெற்றிகளை ஈட்டிக் கொள்ளலாம்.

***

## அயராத முயற்சி வீண்போகவில்லை!

கந்தையா சுஜாலினி
சுன்னாகம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கலைப்பிரிவு



காங்கேசன்துறையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சண்டிலிப்பாயில் வசித்து வருகின்றார்.

தனது ஆரம்பக்கல்வியை சண்டிலிப்பாய் தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்று தரம் 9 இல் தான் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இவருடைய இத்தகைய சாதனைபற்றி கேட்ட போது....

எனக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஏ, 4பி,3எஸ் என்ற பெறுபேறு கிடைத்தது. என்னுடைய அண்ணா பல்கலைக்கழகத்தில் 3 ஆம் வருடத்தில் கலைத்துறையில் கற்கிறார். அவரின் தூண்டுதலின் பேரில்தான் கலைத்துறையினைத் தேர்ந்தெடுத்தேன்.

நீங்கள் படித்த பாடங்களில் கடினமானது என்ன....

இந்துநாகரீகம், அளவையியல், அரசியல் ஆகியவற்றில் அரசியல் பாடத்திற்கு ரியூசனுக்குப் போனதில்லை. ஆனால், அதுதான் கடினமானதாக இருந்தது. இருப்பினும் பள்ளிக்கூடத்தில் அந்தப்பாடத்தை அக்கறையுடன் படித்தேன்.

படிக்கின்ற போது எப்படியான முறைகளைக் கையாளுவீர்கள்?

படிக்கிறதுக்கெண்டு நேரம் ஒதுக்கிப் படிப்பதில்லை. எப்பநேரம் கிடைக்குதோ? அப்பவெல்லாம் படிப்பேன். குறிப்பாக இரவு படிக்கின்றதென்றால் அதிகாலை 2 மணி வரை நானும் எனது சகோதரியும் சேர்ந்து படிப்போம்.

இடப்பெயர்வு உங்கள் கல்வியைப் பாதித்ததா?

யாருக்கும் தங்கள் சொந்த ஊரில் இருக்கிற மாதிரி வாராதுதானே. ஆரம்பத்தில் பல் வேறு வசதியீனங்கள் மத்தியில் தான் படித்தேன். இருப்பினும் காலப்போக்கில் அது மாற்றமடைந்தது. எங்கட ஊரை இழந்தோம். உறவுகளை இழந்தோம். இத்தகைய இழப்புக்களை ஈடுசெய்ய வேண்டுமென்றால் கல்வியால்தான் முடியும் என்ற வைராக்கியத்துடன் ஓர் இலக்கினை வைத்துப் படித்தேன்.

அதிலும் மூன்று பாடங்களிலும் 'ஏ' பெறுபேறு எடுக்க வேண்டுமென்ற உறுதியுடன் படித்தேன். என்னுடைய அயராத முயற்சியும் அதிக பயிற்சியும் வீண்போகவில்லை என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன்.

செவ்வி: அபிமானன்

---

# நாளை உலகம் நம் கையில்.....!

கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சமீபத்தில் வெளியாகின. அந்தப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றுக் கொண்ட சிறார்களிடம் பேசக்கொடுத்துப் பார்த்தோம். அவர்கள் கூறியவற்றை இங்கு தொடராகத் தருகின்றோம்.

மாவட்ட நிலையில் மூன்றாவது இடத்தை மூவர் பெற்றுள்ளனர். அந்த மூவரும் கூறியவற்றை இந்தமுறை தருகிறோம்.

2



தவராசா செந்தாளன்
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
168 புள்ளிகள்
யாழ்.மாவட்ட நிலை 3

## மீட்டல் அதிகம் செய்தேன்

**கேள்வி:** உங்களுடைய குடும்பத்தைப் பற்றி...?

**பதில்:** எனது அப்பா குழந்தைவேலு தவராசா சாவகச்சேரியில் புடவையகம் ஒன்றை நடத்தி வருகின்றார். அம்மா ஜெகதீஸ்வரி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். ஓர் அண்ணாவும் தங்கையும் உள்ளனர். நான் கடந்த 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாகத் தரம் 1, தரம் 2 ஆகிய வகுப்புகளைச் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் கற்றேன். தரம் 3 முதல் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று வருகிறேன்.

**கேள்வி:** பரீட்சைக்கு எவ்வாறு தயாரானீர்கள்?

**பதில்:** நடந்து முடிந்த பரீட்சை வினாத்தாள்களை மீளச் செய்து பார்ப்பேன். பாடசாலையிலும் தனியார் கல்வி நிறுவனத்திலும் படித்த பாடங்களை மீளக்கற்றேன். பொது அறிவு தொடர்பான புத்தகங்களையும் வாசித்தேன்.

**கேள்வி:** பாடசாலைகளில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிய அனுபவம்?

**பதில்:** கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி, மனனப் போட்டி, ஆங்கிலப் போட்டி போன்றவற்றில் பங்குபற்றிச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளேன். அத்துடன் நாடகப் போட்டிகளிலும் பங்குபற்றிப் பாராட்டுகளைப் பெற்றுள்ளேன்.

**கேள்வி:** விளையாட்டுத்துறையில் உங்களுக்கு ஈடுபாடு இருந்ததா?

**பதில்:** விளையாட்டுத்துறையில் பெரிதாக ஆர்வம் இல்லை. பாடசாலை விளையாட்டுப்போட்டியில் குழு நிகழ்வுகள், பந்தெறிதல், நீளம்பாய்தல், உயரம் பாய்தல் போன்ற போட்டிகளில் பங்குபற்றிச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளேன்.

***



மிருந்தன் துமிலன்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
168 புள்ளிகள்
யாழ்.மாவட்ட நிலை 3

## இலகுவான வினாக்களை முதலில் செய்து முடித்தேன்

**கேள்வி:** உங்களுக்குக் கல்வியில் மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியவர்கள் யார்?

**பதில்:** எனக்கு கல்வியில் மிகுந்த ஈடுபாடு உள்ளது. எனது வெற்றிக்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சகமாணவர்கள் எல்லோரும் உறுதுணையாக இருந்துள்ளனர். வீட்டில் நான் கல்வியைத் தொடர்வதற்கு எனது பெற்றோர் நல்வழிகாட்டிகளாகச் செயற்பட்டுள்ளனர்.

**கேள்வி:** வீட்டில் எவ்வாறு படித்தீர்கள்?

**பதில்:** எனது தந்தை யாழ்.பல்கலைக்கழகத்தில் உயிரியல் பிரிவில் விரிவுரையாளராகவும் எனது தாயார் யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றனர். எனது தந்தை பெரிய 'காட்போட்' அட்டையில் நேரசூசி அமைத்துக் கொடுத்தார். அதன்படி வீட்டில் கல்வியைத் தொடர்வேன். தினமும் நேர அட்டவணைப் படி படித்தேன். அதுவே என்னை வெற்றியடைய வைத்தது.

**கேள்வி:** ஓய்வுநேரத்தை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்...?

**பதில்:** பாடங்களைப் படிப்பதுடன், கதைப் புத்தகங்களையும் படிப்பேன். சிறுகதை, வேடிக்கை வினோதமான புத்தகங்கள், விஞ்ஞானம் சார்ந்த புத்தகங்கள், புவி, விண்வெளி சார்ந்த புத்தகங்கள் என்பவற்றை வாசிப்பேன். பத்திரிகைகள், வாராந்த சஞ்சிகைகள் போன்றவற்றையும் தவறாமல் வாசிப்பேன்.

**கேள்வி:** புத்தகங்களைச் சேகரிக்கும் பழக்கம் உள்ளதா?

**பதில்:** பயனுள்ள புத்தகங்களைச் சேகரித்து வைப்பேன். எனது அப்பா புத்தகங்களை அடுக்கிவைப்பதற்கென ராக்கை ஒன்றை வாங்கித்தந்தார். நான் அதில் புத்தகங்களைத் தரம்பிரித்து அடுக்கி வைத்துள்ளேன். ஓய்வு நேரங்களில் எடுத்து வாசிப்பேன்.

**கேள்வி:** பரீட்சை வினாத்தாளை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

**பதில்:** இலகுவான வினாக்களைச் செய்து விட்டுப் பின்னர் கடினமான வினாக்களுக்கு வந்தேன். செய்தவற்றை மீண்டும் பார்த்த போது சில வினாக்களுக்குச் சரியான விடை கிடைத்தது. இந்தப் புத்திமதியை எனக்கு அப்பா கூறியிருந்தார்.

***



தவராசா சானுஷன்
தும்பளை, சிவப்பிரகாச வித்தியாலயம்
168 புள்ளிகள்
யாழ்.மாவட்ட நிலை - 3

## ஆசிரியர்கள் தட்டிக்கொடுத்தனர்

**கேள்வி:** உங்கள் குடும்பநிலைமை பற்றிக் கூறுங்கள்?

**பதில்:** எனது குடும்பம் கஷ்ட நிலையில் உள்ள குடும்பமாகும். நான்தான் வீட்டில் இளையபிள்ளை. எனக்கு மூன்று சகோதரர்கள் உள்ளனர். எனது தந்தையார் சிறியளவில் வியாபாரம் செய்துவந்தார். தற்போது ட்ராக்டர் ஒன்று வாங்கியுள்ளார்.

1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் போது நாங்கள் இடம்பெயர்ந்து குடும்பமாகச் சிலாபத்துக்குச் சென்று அங்குள்ள உறவினரின் வீட்டில் தங்கினோம். பின்னர் சிலாபம் சென்.பற்றிக்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 1 முதல் தரம் 2 வரை கல்வி கற்றேன். பின்பு எமது சொந்த ஊரான குடத்தனைக்கு வந்தோம். வந்தவுடன் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தேன். அதன் பின்னர் பருத்தித்துறை கலட்டி கத்தோலிக்க ஆண்கள் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 3 முதல் தரம் 4 இல் 2ஆம் தவணை வரையும் கல்வி கற்று பின்னர் தரம் 4இன் 3 ஆம் தவணையில் இருந்து தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் சேர்ந்து இன்றுவரை கல்விகற்று வருகின்றேன்.

**கேள்வி:** பாடசாலைக் கல்வியை விட மேலதிகமாகவும் கல்வி கற்றீர்களா?

**பதில்:** ஆம். பருத்தித்துறையில் உள்ள ஒரு தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்றேன்.

**கேள்வி:** கல்வியில் உங்களை ஊக்குவித்தவர்கள் பற்றிக் கூறமுடியுமா?

செவ்வி: கங்கைவேந்தன் வல்லழகனார்

**பதில்:** ஆம். அப்பா, அம்மா மற்றும் எனது சகோதரர்கள் குறிப்பாக உயர்கல்வி கற்கும் எனது அண்ணா எனக்குத் தெரியாத சந்தேகமான கேள்விகளுக்கு விடைசொல்லித்தருவார். அதற்கு அம்மா, அப்பா எல்லோரும் உதவுவார்கள்.

**கேள்வி:** பாடசாலையில் உங்கள் கல்விச் செயற்பாடு எப்படியிருந்தது?

**பதில்:** பாடசாலையில் வகுப்பில் நான் தான் ஒவ்வொரு தவணைப் பரீட்சையிலும் முன்னணியில் இருப்பேன். இதனை எனது வகுப்பு ஆசிரியர் முதல் அதிபர் வரை என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தினார்கள்.

**கேள்வி:** விளையாட்டுத்துறையில் உங்களுக்குள்ள ஆர்வம் பற்றி....?

**பதில்:** விளையாட்டு என்னும் போது கிரிக்கெட் எனக்கு நன்றாக பிடித்தது. ஏதன் ஓட்டத்திலும் பங்குபற்றியுள்ளேன்.

கலைவட்டம், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம

முதுசம் XI

கடந்தகாலமும் கழிவிரக்கமும்

மு. கனகசபையின் ஓவியங்களின் தொகுப்புக்காட்சி

நூலகக் கேட்போர் கூடம், யாழ். பல்கலைக்கழகம்

காலை 10 - மாலை 5.00

நுழைவு ரூபா 20

இன்று மட்டும்

யூட் கிறீம் கவுஸ்,சந்நிதி வீதி,உடுப்பிட்டி.

(41978)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 - 05 - 1930 |  | 10 - 11 - 2004 |

### திருமதி குழந்தை சரஸ்வதி

ஈராறு மாதங்களாகியும் - எம்
விழிகளில் உனது விம்பம்
அழியவில்லையம்மா
பேராறாய் சிந்திய பாசம் - இன்னும்
நெஞ்சினில் காயவில்லையம்மா
ஆலம் விழுதுகள் போல் உறவு
ஆயிரம் இருந்தாலும் - அம்மா
தாயென நீ இருந்தால் - என்
கண்ணீரெல்லாம் காய்ந்துவிடும்.

அன்னங்கை.
கோண்டாவில். (42014)(50) - கு.மகேஸ்வரி (மகள்).

## தொழிற்பயிற்சியும் சத்துணவு வழங்கலும்

யாழ்.,ஒக்.30

நிகொட் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்தும் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாவளை இயற்றாலைக் கிராம மக்களுக்கு மனைப் பொருளியல் பயிற்சி, தையல்பயிற்சி சாரதிப் பயிற்சி என்பனவும் தெரிவுசெய்யப் பட்ட சிறார்களுக்கு சத்துணவும் வழங்கப்படவுள்ளன.

தையல் மற்றும் மனைப்பொருளியல் பயிற்சிக்கென 26 யுவதிகளும் சத்துணவு வழங்குவதற்கென 22 முன்பள்ளி சிறார்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பயிற்சி மற்றும் சத்துணவு வழங்கலுக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதில் நிகொட் திட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பொறியியலாளர், கிராமத்திட்ட அலுவலர், சமூக வலுவூட்டாளர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர், கிராம அலுவலர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கிராமத்தின் முக்கிய உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(உ-204)


Cambrian College of Applied Arts and Technology

# Welcome to the First Canadian campus in Sri Lanka

Cambrian College is the largest College of Applied Arts and Technology, in Northern Ontario, Canada.

2nd Intake

We are Now in Canada

Subramaniam Thayananthan



I'm happy to declare that my ambition to study in Canada has fulfilled through Governor's College.

Prasad Rasika Mendis



I have experienced true Canadian education from Governor's College before leaving to Canada for continuing my education.

Rs. 60,000/= Limited SCHOLARSHIPS Scheme Available

Courses Offered
- HOTEL AND RESTAURANT MANAGEMENT
- TRAVEL AND TOURISM MANAGEMENT
- SOFTWARE ENGINEERING TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION - ACCOUNTING

- ☑ Complete TWO semester (one year) at Sri Lankan campus, and transfer to CANADA
- ☑ Free ESL course (English as a second language)
- ☑ Course fee can be paid monthly (Rs. 15,000/=)
- ☑ Loan facilities on request
- ☑ Hostel Facilities

FOR THE SECOND INTAKE
Contact : Niroshini / Kavitha
Hot Line : 0785 271 337



GOVERNOR'S COLLEGE
"COLLEGE CAMPUS"
376, Galle Road, Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374
E-mail : governors@sltnet.lk Website : cambrianc.on.ca

Advertise 3384





# விளக்கேற்றும் நேரம் புறப்பட்டோம்

தமிழ்மக்களால் என்றுமே - எப் போதுமே - மறக்கமுடியாத வலிகாமம் இடப்பெயர்வு நடைபெற்று இன்றோடு பத்துவருடங்கள் ஆகின்றன. மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்த உதயன், பின்னர் தென்மராட்சியிலிருந்து வெளிவந்தான். அப்போது 1995ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில் தொடராக வெளிவந்தது இந்தக் கவிதை. இதனை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

இன்னும் ஆயிரம் வருடங்களுக்குப் பின்னர்
எம் மண்ணிலிருந்து வாழப்போகும்,
இல்லை, ஆளப்போகும்
இளைய தலைமுறைக்கு இது.
உம்மை அரியணையமர்த்த
'இருபதாம் நூற்றாண்டுக்கு'
மங்களம்பாடும் வயதில்
எம் மண் கொடுத்த விலையிருக்கே
அது பெரிது.
எல்லாவற்றையும் எழுத்திற் பொறிக்க
முடியாது.
வார்த்தைகளுக்குள்ளே அவை வந்தும்
குந்தாது.
எப்படி எடுத்து விரித்தாலும்
அளந்தறியாத 'துயர நிலாவரை'
மொழிபெயர்ப்புக் கவிதையைப்போல
மூலத்தின் முழுமையும் முகம் காட்டாது.
நாங்கள் சுமந்த துன்பச் சுமையை
உங்கள் தோளறியாது.
அன்றடித்த எங்கள் இதயத் துடிப்பை
காலம் கடந்தெவரும் கணக்கெடுக்க
முடியாது.
ஆயிரம் வருடங்கள் கழிந்து
ஆருக்கிது புரியப்போகிறது?
கல்லடித்த வேதனை காலுக்கே தெரியும்
அது கைகளுக்கு விளங்காது.
பிரசவ வேதனை புருஷனுக்குப் புரியாது
குத்திய வயிற்றுக்கே கொடுமை தெரியும்.
ஒருநாள்
கருத்தரித்த மேகங்கள் சூரியனை
மறைக்க
மாரிமழை பொழியும் ஐப்பசி மாதம்
30.10.1995 அன்று
திங்கட்கிழமை.
வெய்யோன் படுவான் திசை வாய்க்குள்
இரையாகும் வேளை
சந்தியா நேரம்
ஐந்து மணி
'பேய்கள்' வருவதாகப் பேசப்பட்டது.
'பிசாசுகள்' எம்நிலம் புகுந்து
கோரப்பசிக்குக் குடிநிலங்களை
விழுங்கியபடி
புத்தூர்,
சிறுப்பிட்டி,
நீர்வேலி,
கோப்பாய் என்று விழுங்கிவிட்டு
இருபாலைப் பக்கம் எழுவதாய்
அறிந்தோம்.
பேய்கள் ஏவிய எறிகணைகள்
கூவிவந்து
ஊருக்குள் உயிர்குடிக்கத் தொடங்கின.
நின்று நிதானிக்க நேரமிருக்கவில்லை.
அகப்பட்டதை அள்ளிக்கொண்டு
ஆண்டாண்டு காலம் பற்றிப்படர்ந்த
சொந்தத்தைப் பிரிந்தோம்.
ஊர்வெள்ளம் கூடி ஒருகுளத்தில்
நிறைவதுபோல்
'வலிகாமம்' ஓடி வந்து
'செம்மணி'யில் திரண்டது.
பொழுது கருகத் தொடங்கியதும்
'முத்திரைச் சந்தை'க்கு மூச்சுத் திணறியது'
செம்மணிற் தெருவில்
எடுத்தகால் வைக்க இடமின்றி நின்றோம்.
பின் ஊர்ந்தோம்.
இட்டகாலுக்கும், எடுத்த காலுக்கும்
இடையில்
இரண்டங்குல வெளியில்
நாங்கள் நடந்தோம்.
இல்லை மெல்ல நகர்ந்தோம்.
பத்துமைல் நீளத்துக்குப் பாம்பென
நெளிந்தது
சனத்திரளின் வரிசை.
தரவைக்கடலின் மேலே அவலக்குரலெழுப்பி
'ஆட்டிகாட்டிகள்' எமக்காகக் கத்தின.
முன்னிலவு நெடுமூச்செறிந்து
சின்ன வெளிச்சம் சிந்தியது
கூதற்காற்றும் குழறியது
மழைமேகம் விழிபனித்து
சொட்டுச் சொட்டாகத் தோளில் விழுந்தது.
நாங்கள் நடந்தோம்.
உள்ளே சின்ன உயிர் சுமந்து
வயிறூதிய தாயரும் வரிசையில்,
பக்கவாதத்தால் படுக்கையிற் கிடந்த
பெற்றோரைக் காவிகளும் வரிசையில்,
தள்ளாத வயதில் தடுமாறிய
மூப்படைந்த முதியோர்,
பூப்படைந்த குருதிப் பெருக்குடன்
புதிய குமரர்கள்,
கைத்தடியுடன் காலிழந்தோர்
வெள்ளைப்பிரம்புடன் விழியிழந்தோர்
இன்னும் உயிர்காக்கத் துடித்தோரெல்லாம்
அதே வரிசையில் அணிவகுத்திருந்தோம்.
கையிற் சுமையுடன், தலையிற் சுமையுடன்
நெஞ்சிற் கனத்த துன்பச் சுமையுடன்
நாவற்குழிப் பாலமேறி நகர்ந்தோம்.
கையிற் பிடித்து இழுத்துவந்த
முதுமைசில மூச்சைத் துறந்தன.
கரையிற் கிடத்தி வந்தோம்.
மூச்சுத்திணறிய சின்னப்பூக்கள் சில
பேச்சுக் குரலடங்கிப் போயின.
தூக்கியபோது பிள்ளையாகவும்
கிடத்தியபோது பிணமாகவும் இறக்கினோம்.
உப்பேரிக்குள் ஒரு பாதை உருவாக்கி
இறங்கிய சிலர்
கழுத்தளவு நீரிற் கரைந்தனர்.
பின்னர் கைதடியில் இணைந்தனர்.
சிலர் சேற்றில் அமிழ்ந்துபோயினர்.
பேரும் தெரியாத அந்தப் புதியவரை
யாரும் தேடவில்லை.
தேடும் நிலையிலுமில்லை.
பத்துமணிக்கு நிலவு பட்டுப்போக
எத்தனை இடர்பட்டோம்
எவருக்கும் எவரையும் தெரியவில்லை.
ஒரு கைக்கணக்கில் ஊர்ந்தோம்.
கணவனின் கைபிடித்து வந்தவள்
இன்னொருவனிடம் இடம்மாறிப் போனாள்.
பேச்சுக் குரலில் பின்னர் இனம்கண்டு
பெயர் சொல்லிக் கூப்பிட்டாள்.
பெருவெளியில் எதிரொலித்தது சத்தம்.
நாமங்கள் சொல்லிக் கூவிய குரல்கள்
நாவற்குழியையே நடுங்க வைத்தது.
பாலுக்கழுதன வாய்கள்.
முலையிருந்தும் முடிச்சவிழ்க்க முடியாத
தனக்குள் அழுதது தாய்மை.
பசிக்குதென்று சொல்லிற்றுப் பிள்ளை.
பெற்றவள் வயிறு பற்றியெரிந்தும்
பேசாமல் வாவெனச் சொல்லி நடந்தது.
தண்ணீர் கேட்டன தளிர்கள்.
என்ன செய்ய முடியும்?
கடல் நீரையா காட்டலாம்?
காதில் ஏறாத பாவனையில்
யாரும் வாயே திறக்கவில்லை.
பயணம் தொடர்ந்தது.
ஊரழுத கண்ணீரால்
உப்பேரி ஒரு அங்குலம் உயர்ந்தது.
மழைநீரும் விழிநீரும் கலந்து
தமிழீழம் நனைந்தது.
போயாறும் இடமின்றிப் புறப்பட்டோம்.
எங்கு போய்த் தங்குவது?
வழி நெடுக இதுவே கனத்தது.
கொட்டும் மழை,
குதறும் குளிர்,
கும்மிருட்டு,
கையிற்சுமை,
வயிற்றிற் பசி
எனினும் நடந்தோம்
பெருமைக்குரிய வாழ்வுக்கதிபதிகள்
எச்சில் இலைபோல
தெருவில் எறியப்பட்டோம்.
தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த
விசாலமான வீடு.
தலைவாசலில் மட்டும்
நூறுபேர் உறங்கலாம்.
முற்றத்தில் பந்தலிட்டால்
மூவாயிரம் பேர் அமரலாம்.
பால்சுரக்கும் பட்டிக் கறவைகள்.
ஆழக்கிணறு அதனுள் அமிர்தம்.
ஆரதக்கறி சமைக்கும் அடுப்படி.
அடிவளவில் ஐம்பது தென்னை.
குடை விரித்து நிழல்பரப்பும் வேப்பமரம்.
மெல்லத்தழுவிச் சுகம் கேட்கும் காற்று.
வந்தமர்ந்து கூவும் வசந்தக்குயில்.
முற்றத்துத் துளசிமாடம்.
இன்னும் பலவாய் எல்லாமுமிருந்த
வாழ்வுதறி
இனிய கனவேதுமற்ற மனதுடன்
நாம் நடந்தோம்.
மூன்றிரவும், இரண்டு பகலும் முடிய
வலிகாமம் வழித்துத் துடைக்கப்பட்டது
அந்தளவு சனமும்
தென்மராட்சியில் அடைக்கலம் பெற்று
ஆறியது.
எந்தப் பெரிய துயரேற்றோம்.
எனினும் தளரவில்லை.
வந்த மறுநாளே
எம் வாழ்வு மீண்டும் துளிர்த்தது.
கொட்டில் கட்டக் கப்புகள் தேடினோம்.
கிடுகு பறித்தோம்.
ஆங்காங்கு முளைத்தன குடிசைகள்.
தலைகுனிந்து செல்லும்
சிறுகொட்டிலானாலும்
நீட்டிப்படுக்க நிலமில்லையானாலும்
'பேயிடம் பிடிபடாதோர்' என்ற பெருமை
எம் தலைமுறை கொண்டது.
பூமிப்பந்து எம்மைப் புதிதாய்ப் பார்த்துப்
புல்லரித்துக் கொண்டது.
'ஆற்றலின் வடிவ' மென்று ஆமோதித்தது.
தமிழீழத்தின் ஒரு தலைமுறை
விடுதலைக்குக் கொடுத்த விலையிது.
என்றோ ஒருநாள்
எத்தனை வருடங்களானாலும்
எங்கள் பரம்பரை தெரிந்துகொள்ளும் இதை.
அது போதும்.
விளக்கேற்றும் நேரம் புறப்பட்டோம்.
துயருற்ற போதும் மகிழ்வுற்றோம்.

*புதுவை இரத்தினதுரை*

# பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உதவிகள் சமமாகக் கிடைக்கவேண்டும்!

## உதவிப் பணிகள் குறித்து மனம் திறக்கிறார்கள் மக்கள் - 03

வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்திட்டங்கள் தற்போது எந்த நிலையில் இருக்கின்றன என்று உதவிப் பணிகளோடு தொடர்புடையவர்கள் கூறும் கருத்துக்களின் தொகுப்பு இது. இதன் இரண்டாம் பாகம் கடந்த 02ஆம் திகதிய உதயனில் வெளியாகியது.

**துரை.சத்தியசீலன்**
*(வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு)*



எனது நிர்வாகத்தின் கீழ் மூன்று பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் வடமராட்சி வடக்கில் 72முன்பள்ளிகளும், வட. தெற்கு மேற்கில் 62முன்பள்ளிகளும் வடமராட்சியில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் 20 முன்பள்ளிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான அம்பன் - குடத்தனையில் 05 முன்பள்ளிகளும் இயங்குகின்றன.

ஆழிப்பேரலைக்கு முன்பு பல முன்பள்ளிகள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வந்தன. இவ்வேளையில்தான், ஆழிப்பேரலை பாடசாலைகளின் தற்காலிகக் கொட்டகைக் கட்டிடம் முதல் பாலர்களின் கற்றல் உபகரணங்கள் வரை அனைத்தையும் முற்றாக அழித்துச் சென்றன.

• ஆழிப்பேரலையினால் பாதிப்புற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் நிலை தற்போது எப்படியுள்ளது?

✱ மேற்படி முன்பள்ளி ஆசிரியர்களும் சிறுவர்களை, சகோதரர்களை, கணவனை இழந்தும் வீடு,வாசல்களை இழந்தும் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். இவர்களுக்கு ஆழிப்பேரலைக்கான போதிய உதவி கிடைக்கவில்லை எனப் பாதிப்புற்ற ஆசிரியர்கள் தெரிவித்துள் ளனர்.

இருப்பினும், பிள்ளைகளின் பெற்றோர்களிடம் இருந்தும் சில தொண்டர் நிறுவனங்களிடமிருந்தும் சிறுகச்சிறுகச் சேமிக்கப்பட்ட ஊதியங்களை அவர்களது சேவைக் கால ஊதியமாக வழங்கி வருகின் றோம்.

ஆழிப்பேரலைக்கு முன்பிருந்தே கட்டைவேலி ப.நோ.கூ.சங்கமும் பனை தென்னை வள.கூ.சங்கமும் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர், வல்வை ஒன்றியம், சந்நிதியான் ஆச்சிரமம், கிறிஸ்த திருச்சபைகள் போன்றவை ஒரு ஆசிரியருக்கு 500 முதல் 1000 வரையான கொடுப்பனவுகளைப் பொறுப்பேற்று வழங்கி வருகின்றன.

இவர்களுக்கான உதவிகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் கடந்த மாதம் தொடக்கம் வழங்கப்படுகிறன.

ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் மாதாந்த ஊதியமாக 1500ரூபா வழங்கு வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பாதிப்புற்ற ஆசிரியர்களுக்கு உடுப்புகள், சைக்கிள்கள் போன்றவையும் வழங்கப்படவுள்ளன.

**ச.குமாரு**
*(பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவர்)*



ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட உதவிகள், பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் இன்றைய வாழ்வு நிலை என்ப வற்றைப் பற்றி பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ச.குமாரு வைக் கேட்டோம். அவர் கூறியதாவது:-

பருத்தித்துறை வியாபாரிமூலை தொடக்கம் முனைப்பகுதி வரையில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற சிறிது பெரிதான வியாபார நிலையங்கள் அனைத்திற்கும் நிவாரணங்கள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். ஆனால், இதுவரை எந்த அரச நிறுவனமோ தனியார் நிறுவனங்களோ அவற்றை வழங்கவில்லை. நாம் எமது சங்கத்தின் மூலம் பல முனைப்புகளில் இருந்து கோரிக்கைகளை கடிதம் மூலமாகவும் நேரிலும் கேட்டோம். இதுவரை எவ்வித பிரயோசனமும் ஏற்படவில்லை.

• பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உதவுமாறு கோரியாரை அணுகினீர்கள்...?

✱ பருத்தித்துறை பிரதேச செயலர், யாழ். மாவட்ட அரச அதிபர், தமிழர் புனர் வாழ்வுக்கழகம், சுனாமி அனர்த்த நிவாரணப் பணிமனை போன்றவற்றிற்கு உத்தியோகபூர்வமாக அணுகியதோடு, மகஜரும் சமர்ப்பித்திருந்தோம். அன்றில் இருந்து இன்றுவரை எவ்வித உதவியும் எமது மக்களை வந்து சேரவில்லை.

• பதிப்புற்ற வர்த்தகர்களின் தற்போதைய நிலை என்ன?

✱ வர்த்தக நிலையம், வீடுகள் சேதமானவர்கள் மீளவும் தங்கள் வாழ்க்கையைக் கட்டி எழுப்ப முடியாத நிலையில் உள்ளனர். சிலர் கூலி வேலைக்குச் செல்வதையும் சிலர் வேறு வர்த்தக நிலையங்களில் வேலை செய்வதையும் காணும்போது பெரும் வேதனை அடைகின்றோம்

**செல்வி சீ.சுந்தரலிங்கம்**

இந்த நிலையினை நாம் எமது சம்மேளனத்திலும் அரச அதிபரிடமும் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் தேவையானால் வங்கிகளில் கடன் பெறுவதற்குத் தாம் சிபார்சு செய்வதாகக் கூறுகிறார்கள்.

*(முற்றும்)*

# IIS CITY CAMPUS

## 1 ஆவது பட்டமளிப்பு விழா

## 30.10.2005

இன்றைய பட்டமளிப்பு விழாவில Edexcel International UK இன
Higher National Diploma in Computing / Software Engineering
பட்டங்களைப் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு IIS City Campus
தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

### BTEC Higher National Diploma in Software Engineering


பிரேமினி ஆறுமுகராசா


தங்கராஜா மேனராஜ்


இலங்கநாதன் பிரசன்னா


பொன்னுத்துரை கோபிநாதன்


இரவீந்திரா விஜயசங்கர்

### BTEC Higher National Diploma in Computing




இராஜநாயகம் பிரதீப


ஷாமினா சரவணபவன்


மிதுனாலினி செல்வநாயகம்


தேவராஜா வாகீசன்


சிவானந்தம் ரமணன்


நவரட்ணம் வேணுகாணன


ஸ்கந்தராஜா ரஜீவ்


செந்தில்நாதன் மயூரேசன


ராஜராஜேஸ்வரன் திருமுருகன்


பேடினன்ட்சந்திரன் நிரூஷன்


துர்ஜா சபாநாயகம்


பிராமினி ரவீந்திரன்


மய,ரதி லவேந்திரநாதன்


ஜெயகதா சிவஞானம்


கந்தசாமி நவீந்திரன்



### Message from Edexcel International Country Manager

It is with great pleasure that I send this message of congratulations on the occasion of the BTEC Higher National Diploma awards ceremony of IIS CITY CAMPUS – Jaffna. Edexcel offers the widest range of academic and vocational qualification for international education. Whether students are looking towards a University position or workplace, BTEC qualifications open doors to future opportunities. BTEC HND's are studied by over 60 000 students per annum in Universities, higher education Institutions and Colleges in the UK and over 50 countries worldwide. Edexcel's BTEC HND's are developed with and for industry, therefore meeting the needs of the employers.

Institutions and students around the world trust the BTEC brand to provide quality vocational qualifications that add global recognition to their chosen course of study.

BTEC Higher National Diplomas are recognized for advanced entry into degree programmes by many Universities in countries like UK, USA and Australia. Often students need to complete only one year of study after completing their BTEC HND to achieve their degree.

I must also add that Edexcel is happy to be associated with IIS City Campus in delivering BTEC HND programmes which breed competent young professionals.

In Conclusion, let me extend my warmest congratulations to all the award winners and wish them success in all their future endeavors.

Ishan Sidique
Country Manager
Edexcel International



### இயக்குநரின் வாழ்த்துச் செய்தி

IIS City Campus இலங்கையில் ஒரு சர்வதேச தரம் வாய்ந்த உயர்தேசியடிப்ளோமா, இளமானி மற்றும் முதுமானி கற்கைநெறிகளை நடாத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஓர் உயர்கல்வி நிறுவனமாகும். இந்நிறுவனம் தனது தொலைநோக்கிற்கு (Vision) ஏற்ப இன்று வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது. எமது நிறுவனத்தின் கற்கைநெறிகள் நவீன முறைமைகளைக் கொண்டதாகவும் தொழில்நுட்பப் பிரயோகங்களையும் உள்ளடக்கியதாகவும் உள்ளது. அந்த வகையில் குறிப்பாக Edexcel நிறுவனத்தின் Higher National Diploma in Computing / Software Engineering / Business Information Technology கற்கை நெறிகளையும் Manipal பல்கலைக்கழகத்தின் Master of Business Administration (MBA) மற்றும் இளமானிக் கற்கைநெறிகளான B.Sc in Computer Science, Bachelor of Business Administration (BBA) என்பவற்றையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிக் கற்கைநெறியான Bachelor of Information Technology (BIT) எனும் கற்கைநெறியையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

பாடசாலையில் இரண்டாம் நிலைக்கல்வியை முடித்துக்கொண்ட மாணவன் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத பட்சத்தில் சீர்வதேச தரம் வாய்ந்த ஓர் பட்டக்கல்வியை தொடரக்கூடிய வாய்ப்பினை மேற்படி கற்கை நெறிகளினூடாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். அந்த வகையில் எமது நிறுவனத்தில் முதலாவது பிரிவில் இணைந்து கொண்ட 20 HND மாணவர்களும் சித்தியடைந்து இன்று பட்டங்களைப் பெற்று வெளியேறவுள்ளார்கள் என்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எமது நிறுவனத்தின் குறிக்கோளான (Motto) "Success Through Knowledge" என்பதற்கேற்ப மாணவர்களை சிறந்த புத்திஜீவிகளாக்கி அதனூடாக அவர்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்து வருகின்றோம். அந்த வகையில் வேகமாக சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் தொழில்நுட்ப மற்றும் சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப எமது மாணவர்களை தயார்ப்படுத்தி இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தி வருகின்றோம். போட்டி மிகுந்த இவ்வியாபார உலகில் எமது மாணவர்கள் உயர்கல்விகளையும் தொழில் வாய்ப்புக்களையும் இலகுவாகத் தட்டிச் செல்லக்கூடியதாக இருக்கும் என்பது எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

இன்றைய நிகழ்வில் பட்டங்களைப் பெற்று வெளியேறும் மாணவர்கள் தொடர்ந்தும் பல உயர் பட்டங்களைப்பெற்று மிளிர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

K.விக்னேஸ்
இயக்குநர்
IIS City Campus

## IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
T.P No.: 021 222 8060/ 021 222 2201

edexcel

# வன்னியில் புத்துயிர் பெறும் பாற்பொருள் உற்பத்தி

## சத்துணவை இனங்காண்பதில் விழிப்புத் தேவை

பாலிலிருந்து பல வகையான பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளன. இவற்றில் சிலவகை எமது பொருளாதார நிலைக்கு எட்ட முடியாத நிலையில் உள்ளன. ஆனால், எமது உள்ளூர் பாலுற்பத்தியாளரிடம் இருந்து பெறப்பட்டு எமது தொழிற்சாலையில் உற்பத்தியாகி விற்பனைக்கு வந்துள்ள பாலுற்பத்திப் பொருள்கள் விலை குறைந்தனவாகவும் தரத்தில் சிறந்ததாகவும் உள்ளன.

இவற்றில் வன்னியில் உள்ள பசுக்களிலிருந்து பெறப்பட்டு அன்றாடம் உடனடியாகத் தயாரித்து விற்பனைக்கு விடப்படும் பாலுற்பத்திகள் மிகவும் சிறந்த தரத்தில் உள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யோகட், பழயோகட், சுவையூட்டிய பால் போன்றவை போத்தல்களிலும் பைக்கற்றுகளிலும், பால்கோவா, தயிர் போன்றவை சட்டிகளிலும், பிளாஸ்ரிக் கோப்பைகளிலும், நெய் போத்தல்களிலும் மிகவும் சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு கடைகளில் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

### யோகட்

இந்த உற்பத்திகளில் யோகட் எமது உணவுச் சமிபாட்டை ஊக்குவிக்கக்கூடிய பக்றீரியாக்களைக் கொண்டுள்ளது. அவற்றின் செயற்பாட்டினால் பாலிலுள்ள லக்ரோஸ் எனப்படும் பால் சீனி லக்ரிக் அமிலமாக்கப்பட்டு புளிப்புத் தன்மையைக் கொடுக்கும். இதுதான் சமிபாட்டைத் துரிதமாக்குகிறது.

யோகட் தயாரிப்பதற்குத் தேவைப்படும் உறை லக்ரோ பசிலஸ் பல்காரிகஸ், ஸ்ரெப்றோகோகஸ் தேமோபீலஸ் எனப்படும் இரண்டு நன்மைபயக்கும் பக்றீரியாக்களைக் கொண்டுள்ளது. இவை தூய தனி இனங்களாக இனம் பெருக்கப்பட்டு உறை (Freez) வைக்கப்பட்டு சந்தையில் கிடைக்கின்றது. இவ்வாறான உறையைப் பாவித்து உண்டாக்கப்படும் யோகட் மிகவும் சிறந்ததாகக் கணிக்கப்படுகின்றது. யோகட்டில் எமது உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதம் 4 சதவீதம், கொழுப்பு 2-3 சதவீதமும், சீனி 8-10 சதவீதமும் விற்றமின், கனிப்பொருள்கள் என்பனவற்றுடன் மொத்தப் பொருள்கள் 20-21 சதவீதமும் கொண்டுள்ளது. இதனால், இது ஒரு நல்ல உணவுப் பெறுமதியுடைய மிகவும் குறைந்த விலையில் கிடைக்கும் ருசியுள்ள உணவாகும். குடற்புண் உள்ளவர்களுக்கு இது மிகவும் சிறந்த உணவு என பரிந்துரைக்கப்படுகின்றது.

யோகட்டின் சிறப்புத் தன்மையை அறிந்ததனால்தான் இது ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் மக்களால் பெருமளவில் விரும்பி உண்ணப்படுகிறது. இலங்கையின் தென்பகுதிகளில் இவை பெரும் எண்ணிக்கையில் உட்கொள்ளப்படுகின்றது. ஆனால் எமது பகுதிகளில் தற்போதுதான் சிறிது சிறிதாக அறிமுகமாக்கப்பட்டு ஓரளவு விற்பனையும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. சிலர் இதை ஐஸ்கிறீம் என நினைத்து வாங்குகின்றனர். பின்பு வாயில் வைத்ததும் புளிப்பு ருசியாக இருப்பதைப் பார்த்து பழுதடைந்த உணவு என நினைத்து சாப்பிடாது விடுகின்றனர். இது யோகட் என்பது என்னவென்று சரியாகத் தெரிந்து கொள்ளாமையால் - அதன் உணவுப் பெறுமதியை புரிந்து கொள்ளாமையால் ஏற்படுகின்றது.

**வன்னி மடல்**

யோகட் தயாரிப்பதற்குச் சுத்தமான தரமான பசுப்பால் தெரிவுசெய்யப்பட்டு நோயுண்டாக்கும் நுண்ணுயிர்களை அழிப்பதற்காக 70தொடக்கம் 80பாகை செல்சியசுக்கு 30 நிமிடங்கள் சூடாக்கப்படும். இதன் பின்னர் பாலை ஆறவைத்து பாலின் அளவுக்கேற்ற சீனி, அனுமதிக்கப்பட்ட வாசனைத் திரவம், மாப்பொருள்கள், நிலையாக வைத்திருக்கும் பதார்த்தம், உறை என்பன நன்றாக கரைக்கப்பட்டு பக்றீரியாக்கள் செயற்படும். உஷ்ண நிலையில் உற்பத்திப் பெட்டிக்குள் இரண்டரை தொடக்கம் மூன்று மணித்தியாலயம் (சிறிய 80 ml கொள்ளவுள்ள கோப்பைகளில் ஊற்றிய பின்) வைக்கப்படுவதால் யோகட் தயாரிக்கப்படுகின்றது. இதன் பின்பு புளிப்புத் தன்மை அளவோடு இருப்பதற்காக 4 தொடக்கம் 5 பாகை செல்சியசில் குளிர் நிலையில் சேமித்து வைத்து உண்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

### பழயோகட்

அண்மையில் பழயோகட் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. இது இனிப்பான பண்டங்களை அதிகம் விரும்பி உண்பவர்களைக் கவரும் நோக்கத்தில் ஜெலியுடன் பழங்களையும் உள்ளீடு செய்து தயாரிக்கப்படுகிறது. இதனால், யோகட் பாவனை படிப்படியாக அதிகரிக்கும் வாய்ப்பு உண்டாகிறது.

அத்துடன் காலத்திற்கேற்ப பலவிதமான பழங்களையும் உள்ளீடு செய்து தயாரிக்கப்படுகின்றது. இதனால் யோகட் பாவனை படிப்படியாக அதிகரிக்கும் வாய்ப்பு உண்டாகின்றது. அத்துடன் காலத்திற்கேற்ப பலவிதமான பழங்களையும் சேர்க்கக்கூடியதாகவும் பாவனையாளரின் விருப்பங்களை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இருக்கும்.

### பால்கோவா

பால்கோவா பாலுடன் சீனியையும் சேர்த்து பாகாகும் வரை காய்ச்சி நீரை ஆவியாக்கிய பின் அச்சுகளில் ஊற்றி இறுகவிட்டு தயாரிக்கப்படுகின்றது. இது சந்தையில் கிடைக்கும் ரொபிகளைவிட மிகவும் சத்துள்ள உபஉணவாகும். இதில் பாலையும் சீனியையும் தவிர வேறு எந்த ஒரு பொருளும் சேர்க்கப்படுவதில்லை. ஆகையால் குழந்தைகளுக்கும் சிறியவர்களுக்கும் மிகவும் வேண்டிய சத்துக்கள் அடங்கிய குறைந்த விலையில் கிடைக்கும் உணவு இதுவாகும். பால்கோவாவிலும் பல வகைகள் உற்பத்தியாக்கலாம். மரமுந்திரிகை, கச்சான் பருப்பு போன்ற பொருள்களையும் சேர்த்துத்தரமான பாலுணவுப் பொருள்களாக எதிர்காலத்தில் சந்தைக்கு விடத்திட்டங்கள் உள்ளன.

### சுவையூட்டிய பால்

சேர்க்கும் உள்ளீடுகளுக்கேற்ப இது பல வகைப்படும். கொக்கோ பவுடர் அல்லது சொக்லேற் பவுடர் சேர்த்து தயாரிக்கப்படுவது சொக்லேற் சுவையூட்டிய பால் எனப்படும். அதுபோல் ஸ்ரோபரி சுவையூட்டிய பால், வனிலா சுவையூட்டிய பால் என மூன்று [illegible]கயான சுவையூட்டியபால் பைகற்றுகளி[illegible] போத்தல்களிலும் அடைத்து விற்பனையாகின்றன. பைக்கற்றில் அடைக்கப்படுவன பாச்சர் முறையில் (**Pasteurization**) காய்ச்சி நோயுண்டாக்கும் நுண்ணுயிர்கள் அழிக்கப்பட்டு சுவையூட்டித் தயாரிக்கப்படுகின்றன. இவை குளிரூட்டிகளில் வைக்கப்படாவிடில் பழுதடையும் நிலை ஏற்படும்.

போத்தல்களின் அடைக்கப்பட்ட சுவையூட்டிய பால் முற்றாக கிருமி அழிக்கப்பட்டடையால் நீண்டநாள்களுக்கு சாதாரண உஷ்ண நிலையிலேயே பழுதடையாது இருக்கும் நன்கு அவிக்கப்பட்ட சுத்தமான போத்தல்களில் பாச்சர் முறையில் காய்ச்சப்பட்ட சுவையூட்டிய பால் அடைக்கப்பட்டு அமுக்கமுள்ள அடுப்பில் (**Pressur Cooker**) கொதி நிலையில் அவிக்கப்பட்டு தயாரிக்கப்படுகிறது. இதனால் இப்பாலில் எல்லாவித கிருமிகளும் அதன் முட்டைகளும் அழிக்கப்படுகின்றன. அதனால், இதன் பழுதடையும் தன்மை அற்றுப்போகிறது. தேவைப்படும்போது குளிரூட்டி அருந்தலாம். மிகவும் சுவையாக இருப்பதோடு அதிக சத்தும் கிடைக்கிறது.

### தயிர்

சுத்தமான எருமைப்பாலிலும் தயிர் தயாரித்து விற்பனைக்கு விடப்படுகிறது. இது மிகவும் சத்துள்ள உப உணவாகும் ஒரு லீற்றர் மண்சட்டிகளிலும், 180 மி. லீற்றர் பிளாஸ்ரிக் கோப்பைகளிலும் தற்போது இது விற்பனையாகின்றது. எதிர்காலத்தில் இதனை வெவ்வேறு அளவான கோப்பைகளிலும் விற்பனைக்கு விடுவதற்கான திட்டங்கள் உள்ளன. எருமைப்பாலில் கொழுப்பு, புரதம், மாப்பொருள் கனியுப்புக்கள் என்பன மிகவும் கூடுதலாக உள்ளன. சாதாரணமாக கொழுப்பு 7 தொடக்கம் 10 சதவீதமும் புரதம், மாப்பொருள் ஆகிய கொழுப்பு அல்லாத பொருள்கள் 9.5 தொடக்கம் 11 சதவீதம் வரையும் எருமைப்பாலில் உள்ளது. பசுப்பாலுடன் ஒப்பிடும் பொழுது இது அதிக உணவுபெறுமதி உடைய பால். எருமைத் தயிர் அன்றாடம் உணவுடன் அல்லது உணவுக்குப்பின் சீனி, தென்னம்பாணி, கித்துள் பாணி, பனங்கட்டி என்பவற்றுடன் சேர்த்து உண்பதால் நல்ல ருசியுடன் குளிர்ச்சியையும் சமிபாட்டு ஊக்குதலையும் உடலுக்கு தேவையான பெறுமதிமிக்க சத்துக்களையும் எமக்குக் கொடுக்கிறது. இதை உண்பதால் மலச்சிக்கல் தவிர்க்கப்படுகிறது. இந்தப் பாற்பொருள் உற்பத்தியில் தமிழீழ பொண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வன்னி சுரபி பாற் தொழிற்சாலையும் ஈடுபட்டு வருகின்றது.

**மு. கந்தசாமி**

இன்றைய சமுதாயம் தாங்கள் கொள்வனவு செய்யும் உணவுப் பொருள்களின் உணவுப் பெறுமதியைச் சரிவர அறியாமையால் மென் பானங்களுக்கு அடிமையாகி உடலுக்கு தேவையான சத்துக்களைப் பெற்று நன்மையடைவதற்குப் பதிலாக மிகவும் அதிகவிலை கொடுத்துத் தீமை தேடிக்கொள்கிறார்கள். இவற்றில் தண்ணீரும் நிறமூட்டிகளும் செயற்கையான சுவை, மணம் சேர்க்கப்பட்டு குளிரூட்டப்பட்டுச் சுவையாக தரப்படுகின்றன.

ஆனால் இவற்றில் கொழுப்போ, புரதச் சத்தோ, மாப்பொருள்களோ, விற்றமின் சத்துக்களோ, எவையும் அடங்கியிருப்பதில்லை.

ஆனால், சுவையூட்டியபால், யோகட், பால்கோவா என்பனவற்றில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதம், கொழுப்பு என்பனவற்றுடன் மிகவும் அரிதாகக் கிடைக்கும் கனியுப்புக்களும் அடங்கியுள்ளன.

எனவே, எமது பணத்தைக் கொடுத்து நாம் வாங்கி உண்ணும் உணவுகள் நமது உடலுக்கு எந்த வகையில் பலனைத் தருகின்றன. என்பதை அறியவேண்டும். ✱

# இயற்கை அனர்த்தங்கள் குறித்த அறிவும் விழிப்புணர்வும் அத்தியாவசியம்

## விஞ்ஞானத்துறைப் பீடாதிபதி வலியுறுத்து

இயற்கை அனர்த்தங்கள் குறித்த அறிவையும், அவற்றின் மூலமான அழிவுகளை குறைத்துக்கொள்ளும் செயற்பாடுகளையும் எமது மக்கள் பெறுவது அவசியம். அவை குறித்த விழிப்புணர்வு எல்லா மட்டங்களிலும் தோற்றுவிக்கப்படுவது காலத்தின் தேவை. இதனை எல்லோரும் கருத்திற் கொள்வது மிகவும் அவசியமாகிறது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி ஆர். குமாரவடிவேல்.

கடந்த வியாழக்கிழமை உதயன் கேட்போர் கூடத்தில் யாழ்.றோட்டறிக் கழகத்தினரால் நடத்தப்பட்ட அதிதிப் பேச்சாளர் உரையில் 'இயற்கை அனர்த்தங்கள்' என்ற தலைப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் என். சரவணபவன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போது பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் மேலும் தெரிவித்ததாவது:-

இயற்கைப் பேரழிவுகள் மனிதனுடைய சக்திக்குட்பட்டவையல்ல. அவை இயற்கையின் விளைவுகள். பூமியின் உள்ளே நிகழும் பல்வேறு மாற்றங்களாலும் புறத்தாக்கங்களாலும் இவை நிகழ்கின்றன.

இந்த வகையிலே ஆழிப்பேரலை மீண்டும் இலங்கையைத் தாக்குமா இல்லையா என்பதை வரையறுத்துக்கூற முடியாது. எனினும் வரக்கூடிய சாத்தியங்கள் அதிகம் என்று மட்டும் சொல்லலாம்.

இவ்வாறான அனர்த்தங்கள் உருவாகுவதை மனிதர்களால் தடுக்க முடியாது. ஏனெனில் அது மனித சக்திகளுக்கு அப்பாற்பட்டது.

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஊட்டுவதன் மூலம் இழப்புகளை ஓரளவு தடுக்க முடியுமே அன்றி அவை உண்டாவதைத் தடுக்கமுடியாது. பூமியின் உட்பகுதியில் இயற்கையாக நாளாந்தம் நடக்கும் நிகழ்வுகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடுதான் நில அதிர்வு, நில நடுக்கம், பூமியதிர்ச்சி, ஆழிப்பேரலை போன்ற இயற்கை அழிவுகள்.

ஒவ்வொரு நிமிடமும் பூமியின் உட்புறத்தில் பௌதிக மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அவற்றின் விளைவாக உண்டாவதே இயற்கை அனர்த்தங்கள். மனிதனால் ஏற்படுத்தப்படும் சூழல் மாசுபடுத்தல்களும் அவை ஏற்படுவதற்கு ஓரளவு காரணமாகின்றன அல்லது தூண்டுதலாக அமைகின்றன என்றும் கூறலாம்.

அணுகுண்டுத் தயாரிப்புகள், அதனால் வரும் கழிவுகளை கடலுக்குள் கொட்டுதல், விஞ்ஞான ஆராய்ச்சிகள், கைத்தொழில் நாடுகளின் பாரிய அளவிலான தொழிற்சாலைகள் போன்றவற்றால் சூழல் மாசுபடுத்தப்படுகின்றது. வெப்பநிலை அதிகரிப்பும் இயற்கை அனர்த்தங்களுக்கான காரணிகளில் ஒன்று எனலாம். இயற்கைச் சமநிலை மாற்றமடைவதற்கு இவையும் காரணிகளே.

இயற்கையின் சமநிலை குழப்பமுறும் போது அதனைச் சீர் செய்வதற்காகவும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

உலகத்தில் உயிர் வாழ்வனவற்றின் பெருக்கம் அதிகரிக்கும்போதும் இயற்கை அழிவுகள் ஏற்பட்டு வளங்களைச் சமப்படுத்துவதாகவும் கூறிக்கொள்ளமுடியும்.

இதனால், அழிவுகள் ஏற்படுகின்றதே என்று நினைத்து இயற்கை மீது நாம் கோபம் கொள்ளமுடியுமா?

ஆபத்துக்களால் வரக்கூடிய அழிவுகளை [illegible] பாதிப்புக்களைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளையும் எடுக்க அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்.

அண்மையில் அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏற்பட்ட சூறாவளி அனர்த்தங்களின் போது அழிவுகள் மிகவும் குறைவாகவே இருந்தன. ஆனால், எமது நாட்டில் ஏற்பட்ட அழிப்பேரலையால் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று தரவுகள் கூறுகின்றன.

இவ்வாறு நோக்கும் போது எமது நாட்டில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதற்கு எமது மக்களிடம், இயற்கை அனர்த்தங்கள் குறித்த பரந்த அறிவும், விழிப்புணர்வும் இல்லை. அவற்றைக் கண்டறிந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வும் அரசுகளுக்கும் அதன் அதிகாரிகளுக்கும் தேவை.

கடந்த டிசெம்பரில் ஏற்பட்டது போன்று ஏதாவதொரு அனர்த்தம் எமது நாட்டில் ஏற்படும்போது அதனால் வரும் இழப்புகளைக் குறைப்பதற்கு எல்லோரிடமும் விழிப்புணர்வு தேவை. பாடசாலை மட்டத்தில், சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஊட்டவேண்டும். அனர்த்தங்கள் ஏற்படும்போது எவ்வாறு நடத்துகொள்ளவேண்டுமென்ற அறிவை ஊட்டவேண்டும்.

அரசும், பொதுமக்களுக்குச் சேவைசெய்யும் அதிகாரிகளும், உதவி நிறுவனங்களும் இதனைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். இது காலத்தின் தேவை.

இலங்கையைப் பொறுத்த மட்டில் குறிப்பாகக் குடாநாட்டைப் பொறுத்தமட்டில் அரச அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகளும் இது தொடர்பான தரவுகளைப் பெற்று அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சி முறையைப் பயன்படுத்தி இயற்கை அனர்த்தங்களை முற்கூட்டியே கண்டறியும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்திப் பாதிப்புகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அதுமட்டுமன்றி அறிவுபூர்வமான தகவல்களை அறியக்கூடிய ஆவல், அதிகாரிகளிடம் மட்டுமன்றி மக்களிடமும் இருக்க வேண்டும்.

இதற்கு உதாரணமாக இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தால் இறந்தவர்களின் தொகையைவிட அமெரிக்காவில் நடந்த அனர்த்தத்தால் இறந்தவர்களின் தொகை மிகமிகக்குறைவாகும் என்பதைக் கூறலாம்.

இது அவர்களது அறிவு வளர்ச்சியையும் விழிப்புணர்வையும் வெளிப்படையாகக் காட்டுகின்றது.

இறுதியாகக் கண்டறியப்பட்ட தகவல்களின்படி கடலுக்கடியில் உள்ள தட்டுகள் நகர்ந்துள்ளன.

இதனால், பூமி அதிர்ச்சி ஏற்படக்கூடிய எல்லைகளில் ஒன்று இலங்கைக்கு அருகில் உள்ளதாகவும் இதனால் பூகம்பம், ஆழிப்பேரலை போன்ற அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளதெனவும் கருதலாம் - என்றார்.

(அ-203)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஊர்க்குரக்கன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.N0.: 0777 238285, 021 4591249 (41922)

Chnon 1215 , 2020, 3025, 3225 போட்டோ கொப்பி இயந்திரத்திற்குரிய புதிய சகல உதிரிப்பாகங்கள் Parts மலிவான விலையில் விற்பனைக்குண்டு. பாவித்த Toshiba airconditioner 1200 Btu Stabiguards களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 071-4142976. (சி-45982)

தரமான மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் வேலித் தூண்கள், கட்டடத் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்கார பூங் கற்கள், பூச்சாடிகள் என்பன வேண்டிய அளவு களில் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகிலன், 17, ஐயனார் கோயில் வீதி (கெங்காதரன் வைத்தியசாலை அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 077 3144884. (40603)

சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட Colour Lab க்குரிய Noritsu 2600 F மற்றும் Film, processor என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. No. 011 2725505, 0777 731816. (41972)

## காணி விற்பனைக்கு

யாழ்.பலாலி வீதி, திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு அருகில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 4590447, 0777 169062 தொலைபேசியில் தொடர்புகொள்ளவும். (42099)

உரும்பிராய் சந்திக்கருகில் இரண்டு பரப்புக் காணி, கிணற்றுடன் விற்பனைக்கு ண்டு. தொடர்புகளுக்கு 0773151457. (42112)

யாழ்.நகரத்தின் மையத்தில் புதிய நீதி மன்றத்திற்கு அருகில் 2ஆம் குறுக்கு வீதியில் கிணறு அத்திபாரத்துடன் கூடிய 2¾ பரப்பும் 1குழியுடைய காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: 021-2229263, 0776079352. (42106)

சங்கானை, குதிரைப்பிட்டி வயல், சுடலையடி வயல், கேணியடி வயல் என்பன விற்பனைக்குண்டு தொடர்பு: அ.க.சண்முகதாசன், தேவாலய வீதி, சங்கானை. (42041)

முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வேம்படி பாடசாலைக்கு அருகில் திருத்தம் செய்யக்கூடிய வீட்டுடன் 1பரப்பு, 4 குழி காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.சத்தியகுமாரன், 99 சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 5381 (42153)

## வீடு விற்பனைக்கு

இல. 975/17, வளன்புரம், கொழும்புத் துறையில் கிணற்றுடன் கூடிய 1½ பரப்புக் காணியில் உடன் குடியேறக்கூடிய நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: செரூபிம் பாக்கியலீலா, 41, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 3344. (41952)

கொக்குவில் கிழக்கு, பிறவுண் வீதியில் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக் குண்டு. தொடர்பு: S.ஸ்ரீஸ்கந்தராசா, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரி சேச்சிற்கு அருகில்). (42096)

யாழ்.நல்லூர் முத்திரைச் சந்தைக்கு அருகில் செம்மணி வீதியில் 126ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய 2¼ பரப்பு காணி விற்பனைக்குண்டு. (கல்வித் திணைக்களத்திற்கு எதிர்ப்புறமாக செம்மணி நோக்கி 5ஆவது வீடு) தொடர்பு: 0777 739544, 021 222 3898. (42155)

கொக்குவில் கிழக்கில் 3¾ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0777 079746. (42144)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 260/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, விஜயகுமார், குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை. (42102)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (41857)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்துபோடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 31.10.2005, 14.11.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் கரன் - உடுவில் பாம், ஆலடி- உடுவில், நல்லூர் - பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41855)

## நாய்கள் விற்பனைக்கு

பத்து மாதங்கள் நிரம்பிய சகல தடுப்பூசிகளும் போடப்பட்ட அல்சேஷன் (ஜேர்மன் )நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு தாசன் பாம் 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (42100)

## கார் விற்பனைக்கு

லான்சர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.61, ஆடியபாதம் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (பார்வையிடும் நாள் ஞாயிறு காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை. (42148)

## தவறிவிட்டது

வி.எஸ்.எஸ். செல்வராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் உள்ளடங்கிய பொதி ஆனைக்கோட்டை வடக்கு, கட்டப்பாலி ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கட்டப்பாலி ஒழுங்கையில் உள்ள 'சிவசக்தி வர்சா' இல்லத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (42124)

பளையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் என்பவரது விசேட அடையாள அட்டை, இலங்கை போக்குவரத்துச் சபை அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், நிரந்தர அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேஸ் 27.10.2005 வியாழக்கிழமை கொடிகாமத்திற்கும் (794 பாதையில்) யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.பஸ்நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (42116)

## மணமகன் தேவை

நாடு பூராகவும் இந்து, கிறிஸ்தவர்களில் டாக்டர், எஞ்ஜினியர், எக்கவுண்டன், விரிவுரையாளர், ஆசிரியை, அரசதனியார்துறை, வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்கள், வீட்டுப்பணியில் உள்ள மணமகள்களுக்கு அரச, தனியார், சுயதொழில், வெளிநாட்டில் குடியுரிமையுடைய மணமகன்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர். T.P.: 0776528641(மந்திரி அரண்மனை எதிரில்) (41992)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1971 ஆம் ஆண்டு பிறந்த அழகிய பொது நிறமுடைய ஆங்கிலப் பட்டதாரி ( B.A. in English / Post Graduate Dip. Education (Eng.) ஆசிரியைக்கு பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு விளம்பர இலக்கம் 2732, உதயன், யாழ்ப்பாணம். (42122)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய நல்ல நிறமுடைய பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியைக்கு 39 வயதிற்கு உட்பட்ட அரசாங்கம் / வங்கி /கூட்டுத்தாபனம்/ பட்டதாரி ஆசியர் தேவை. சீதனம் உண்டு. தொடர்புகளுக்கு சண்முகராஜா, மதிப்பீட்டாளர், 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (42122)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, உத்தராட நட்சத்திரம் 32 வயது 8இல் செவ்வாயும் கிரகபாவம் அதிகமுடைய கொழும்பில் தனியார் நிறுவன மொன்றில் தொழில் புரியும் மாதாந்தம் ரூபா 10,000 வேதனமுடைய பெண்ணுக்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ, அரச சேவையிலோ அல்லது தனியார் நிறுவனத்திலோ பணிபுரியும் மணமகனை எதிர்பார்க்கின்றோம். கொழும்பில் இருப்பதற்கு வீடு வசதி உண்டு. சீதனம் நேரில் பேசி தீர்மானிக் கப்படும். தொடர்பு: நா.நாகரத்தினம், 383/26 நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ். T.P. 3276 (42151)

## திருமண சேவை

சுயதெரிவு முறையில் மனம் விரும்பும் மணமக்களை சுயமாகத் தெரிவுசெய்ய வேண்டுமா? சுயதெரிவு முறை முன்னோடி பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனைச் சந்தித்தல் முக்கியம். சந்திப்பு வேளை மாலையில் மாத்திரமல்ல காலை, நண்பகல் மாலை இரவு வேளைகளிலும் சந்திக்கலாம்! சந்திப்பதற்கு முன்பதிவு மிக முக்கியம்! தொலைபேசியில் கிழமை நாள்களில் பிற்பகல் 4.30 மணிக்கு மேல் மாத்திரம் தொடர்பு கொள்க! T.P.: 2360488, 4514396 (சி-45981)

## ஜோதிடம்

உள்நாட்டில், வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்களைக் கணிக்கவும் பலன்கள் கூறவும், விவாகப் பொருத்தம் பார்க்க கைரேகை, நினைத்தகாரிய பலன்கள் கூறவும் சுபகருமங்கட்கு நாள்குறிக்கவும் நாடுங்கள்: எஸ்.சிதம்பரநாதன் புங்கடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை (மந்திகை ஆஸ்பத்திரி தாண்டி மெதடிஸ் பாடசாலைக்கு 4 ஆவது வீடு. (42013)

## சேவை

55000 அமெரிக்க நிரந்தர விசா லொத்தர் விண்ணப்பம் Intenet மூலம் Process பண்ணி அமெரிக்காவிற்கு அனுப்பி அமெரிக்க றிசீட் தரப்படும். ஒரு குடும்பம் 2 விண்ணப்பம் அனுப்பலாம். 16 வயதிற்கு மேற்பட்டவர்களும் தனியாக அனுப்பலாம். Latent விண்ணப்பத்தை இலவசமாகப்பெற Penqune Book shop B2/F23 Bloemendhal Flats Colombo-13. T.P.: 0773081764 , 2438367. (சி-45983)

## தேவை

புதிதாகத் தொடங்கப்பட உள்ள வியாபாரத்திற்கு சிறிய காட்சியறைக்கான இடம் நகர்ப்பகுதியில் தேவை. தொடர்புகளுக்கு 0714-22 3881 அல்லது மே/பா உதயன் இல. 2730. (42093)

## வீடு வாடகைக்கு

நாயன்மார்கட்டு, இல.43/4, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களிற்கும் தனியார் நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு: 021 2227124. (42095)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, இருபாலைச் சந்தி பழைய வீதியில் 4 பரப்புக் காணியுடன் சேர்ந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: **நாதன்,**
**லட்சுமி பவான் ஹோட்டல்**
(42143) **இருபாலைச்சந்தி.** (21.11.15)

**பூங்கன்றுகள் விற்பனைக்கு**

எல்லாவகையான பூங்கன்றுகளும் பயன்தரு மரங்களும் விற்பனைக்குண்டு. (தேசி, மா, ஜம்புநாவல், கமுகு, றோஸ், சிதம்பரத்தை, போகன்விலா, யுகோடியா, கார்டினியாஸ், குறோட்டனிஸ், பாம்ஸ், அலெக்கெரியா, சைபிறஸ், எக்ஸ்சோறா, றெசினா, இன்டோர்க்குளான் என்பன மலிவான விலையில் விற்பனைக்குண்டு)
தொடர்பு: **ஹரிஸ் கார்டின்,**
சம்பியன் லேன், நந்தாவில் ஒழுங்கை,
(K.K.S. Road), கொக்குவில்.
(42146) T.P. No.: 0776524970 (30-11-15-21)

**மாபெரும் மலிவு விற்பனை**
**ஷன் மல்ரி றேட் சென்றர்.**
Sony, National (T.V கள் 14",20",21",25")
மற்றும் வீடியோ டெக், ஓடியோ டெக், அம்பிலிபயர் (AMP),
செற்றப் றேடியோக்கள்
(Pioneer, Kenwood, Sony)
என்பன விற்பனைக்குண்டு
நீங்கள் நாடவேண்டிய இடம்
T.P.: 2227442 232, K.K.S Road, Jaffna.
(42168) (54-11-15-21)

**HOUSE FOR RENT**

A big house with all facilities in the heart of Nelliady Town, infront of IIS Science Centre amplg space for vehicles avilabe from December. Ideal for N.G.Os, Banks and Companies. Furnished. Inspection daily 8 a.m. - 3p.m. Contact 077 6648751
(41864)(46-

## பாராட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

**2005 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்**



உதயசூரியன் பிரசாந்
புள்ளி 135
யா/இராமநாதன் மகளிர் கல்லூரி



மலர்விழி சுகந்தன்
புள்ளி 132
யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை



சிவராசா கபில்சன்
புள்ளி 124
யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை

இடம்: சறண்யா கல்வி நிலைய மண்டபம், ஏழாலை
காலம்: இன்று (30.10.2005) ஞாயிறு பகல் 1 மணி.

சறண்யா கல்வி நிலையம், ஏழாலை. ஆசிரியர்கள், மாணவர்கள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## முதலாவது சிரார்த்த தின நினைவலைகள்

தோற்றம் 25 12 1953




மறைவு 10 11 2004

**திருமதி கமலினி குகதாசன்**

திதி திரயோதசி

வாழும் வயதினிலே என் உதிரத்தை ஊட்டி
கண்இமை காப்பது போல் காத்து வந்தேனம்மா!
இரத்தம் கொதிக்குதம்மா! உடம்பெல்லாம்
நடுங்குதம்மா!
"கிளி" என்று அழைத்தால்
ததும்பி நிற்கும் பாச வெள்ளம் எங்கே அம்மா?
கூடி மகிழ்ந்திருந்து குதூகலித்த நாள்களெல்லாம்
ஓடி மறைந்தின்று ஓராண்டு ஆனதம்மா
வாடி வதங்கி இங்கு வழியறியாமல் நாமிருக்க
நாடி வந்த உறவுகளும் நழுவி எங்கே சென்றதம்மா?



உங்கள் ஆத்மா சாந்திபெற
ஸ்ரீ காளி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி !சாந்தி!

"குககமலவாசம்"
காளிகோயிலடி, உடுவில்,
சுன்னாகம். T.P: 0776544558
(42127) 11-15

என்றும் மறவா நினைவில்
கணவர்: த.குகதாசன்.

## பாலாலய கும்பாபிஷேகம்

வடமராட்சி, கரணவாய் மத்தி, நவிண்டில் பதியிலே சுவாமி ஐயப்பனுக்கும் ஆஞ்சநேயப் பெருமானுக்கும் இன்று (30.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாலாலய கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

சாமி சரணம்.

தலைவர்.
ந.சுந்தரேஸ்வரசர்மா.

(42142)(42.11.15)

## புதிய வகுப்புக்கள்ஆரம்பம்...

IELTS - (31.10.2005)

*வெளிநாடுகளில் கல்வி பயில....
*பல்கலைக்கழக அனுமதி பெற...
*அங்கில அறிவை விருத்தி செய்ய...

Monday / Wednesday / Friday } 4.30 to 6.30

LONDON ENGLISH COLLEGE
NO:105, Arasady Road, Jaffna. T.P: 021-2225889, 0777252180
BCNS
No: 229A, Milcham Road, Tooting, London, SW 17910 UK


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நவாலி சென்.பீற்றேர்ஸ் றோ.க.த.க. பாடசாலை மாணவியும் திரு. திருமதி மனோகரன் சிந்தியா தம்பதியினரின் செல்வப் புதல்வியுமாகிய

**செல்வி மனோகரன் விதுஷாயினி**

அவர்கள் 2005ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இம் மாணவி கோட்ட மட்ட விளையாட்டுப்போட்டியில் சிறந்த வீராங்கனையாகவும் தமிழ்த்தினப் போட்டியில் இசைவும் அசைவும் என்ற நிகழ்வில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் வலய மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவருக்கு கல்வியறிவை ஊட்டிய அதிபர் திரு. சிறில் சுகந்தரன், வகுப்பாசிரியை திருமதி செந்தினி தர்மசீலன் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இம் மாணவியையும் பாராட்டுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
மாமா வசந்தன் (லண்டன்),
ஞானப்பெற்றோர் சுமதி, சதீஸ்,
ராணி - அன்ரி,
அம்மா - சிந்தியா,
தங்கை - அபிஷா,
மாமன்மார், அத்தைமார்.

நவாலி தெற்கு,
C.P.M. லேன்,
மானிப்பாய்.

(42097)(42.11.15)

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசிமாதம் 14ஆம் நாள் (31.10.2005) திங்கட்கிழமை காலை 6.11மணி முதல்7.33 மணிவரையுள்ள அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் விருட்சிகலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**பிரகாஷ்** (லண்டன்)
அவர்களுக்கும்



எமது புத்திரி திருநிறை செல்வி
**தாட்சாயினி**
அவர்களுக்கும்

வல்லை முத்துமாரி அம்பாள் திருவருள் துணைகொண்டு தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி அருச்சுனராசா பிரபாபதி
திரு.திருமதி மதிவண்ணன் தர்ஷினி , பிள்ளைகள்.
அ.மி.பாடசாலைஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (42152)(19-42-11-15)

23Cecil Road, Croy Don, Surry,
CRO 313 N, London.
T.P.: 0044 2086834074
(இருவீட்டார் அழைப்பு)

திருமதி செல்வச்சந்திரன் சிவகுபராணி (வசந்தி).
வேம்படி, வல்வெட்டித்துறை.
0777 226266

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் சர்வ மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசித்திங்கள் 14ஆம் நாள் இன்று (30.10.2005) ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய பிற்பகல் 14.10 மணிமுதல் 15.30 மணிவரையுள்ள (சுவிஸ் நேரப்படி) சுபமுகூர்த்தவேளையில்

திரு. திருமதி கதிர்காமநாதன் தம்பதியின்
புத்திரன் திருநிறை செல்வன்
**சசிகுமார்** (சசி)
அவர்களுக்கும்

திரு.திருமதி நட்ணசிங்கம் தம்பதிகளின்
புத்திரி திருநிறை செல்வி
**ரேணுகா** (ரேணு)
அவர்களுக்கும்

எம்பெருமான் சிவனருள் துணைகொண்டு பேர்ணில் அருள்மிகு ஸ்ரீ கல்யாண சுப்பிரமணியர் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்களும் மணமக்களை ஆசிர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறுமிடம்
**அருள்மிகு ஸ்ரீ கல்யாண சுப்பிரமணியர் ஆலயம்**
BAHNSTR 21.3008 BERN,
SWITZERLAND.

திரு.திருமதி கதிர்காமநாதன்
பரமேஸ்வரி குடும்பத்தினர்
இல.7/1, திருவையாறு, கிளிநொச்சி,
இலங்கை. (ச-45994)(42-11-15)

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி நட்ணசிங்கம்
நாகலட்சுமி குடும்பத்தினர்,
- மட்டுவில்நாடு, பூநகரி,
இலங்கை.


### A/L பௌதிகவியல், இணைந்த கணிதம் வகுப்புகள்

பலவருடங்களாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாக 20 வருட A/L வினாத்தாள்கள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். M.C.Q. இற்கான விளக்க விடைகளுடன் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். பயிற்சிகள் வழங்கி திருத்திக் கொடுக்கப்படும். பெற்றோர் தொடர்ப் விரும்பத்தக்கது. மீட்டலும் உண்டு. வகுப்புகள் நடைபெறு கின்றன.

R.பாலசுப்பிரமணியம்
B.Sc.(Cey)Dip.in.Ed.
17/1, பிறவுண் விதி,
யாழ்ப்பாணம்.

T.P.:0776648751.
(42140)
(42.11.15)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்குமபோது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்;
சிவா நறுமணப்பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
(3109)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய அழைப்பும



அன்னை மடியில்
1952.04.26

ஆண்டவன் அடியில்
2005.10.01

மாதம் ஒன்று வந்ததையா
மாறிடுமா எம் துயரம்
ஆண்டொன்று சென்றாலும்
ஆறிடுமா எம் கவலை
ஊழி உள்ள மட்டும் உம் நினைவு
எம்முடனே
அருகில் நீ இல்லையப்பா
ஆரெமெக்கு துணை அப்பா
அந்தரத்தில் நிற்கின்றோம்
அணைத்திட ஓடி வாங்கள் அப்பா.

எம் குலம் விளங்கவைத்த குலவிளக்கே! தெய்வமே! அப்பாவே!
உங்கள் ஆத்மா அமைதி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இன்று (2005.10.30) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், நாளை (2005.10.31) திங்கட்கிழமை நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திக் கிரியையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
**பொன்னுத்துரை சரவணபவன் (இராசா)**
(மண்டைதீவு)

59, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(42138)(51-)

குடும்பத்தினர்.

## பாராட்டும் 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



### செல்வன் ஜெ. ஜெயப்பிரதாபன்
(கண்ணன்)

*இளவாலை ஜெயரட்ணம்-தவராணி தம்பதியூரின் செல்வப்புதல்வனும், யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவன் செல்வன் ஜெயப்பிரதாபன் 2005ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன், அவருக்கு வழி காட்டிய அதிபர், ஆசிரியர்களான திரு.பரமேஸ்வரன், திரு.சுதன், செல்வி கவிதா, திருமதி வ. குமாரலிங்கம் ஆகியோரையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.*

*இவ்வேளையில் 10ஆவது பிறந்தநாளாகிய இன்று செல்வன் ஜெயப்பிரதாபன் பல்கலையும் பெற்று பல்லாண்டு சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.*

**வாழ்த்துவோர்:**
அப்பா, அம்மா, பெரியம்மா குடும்பம் (மூளாய்),
அத்தான் குடும்பம் (சுழிபுரம்),
பெரியமாமா குடும்பம் (அளவெட்டி),
குட்டி மாமாகுடும்பம் (கனடா),

(42173) (54-11-17)


## வீதியும் மதகும் பலத்த சேதம்

காரைநகர் ஒக்.30

காரைநகர் கல்லூரி வீதியும் அருகில் உள்ள மதகும் பலத்த சேதமடைந்துள்ளமையால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேல் புனரமைக்கப்படாமல் உள்ளது.

அதேபோல்-

அந்த வீதியில் உள்ள மதகும் பலத்த சேதமடைந்துள்ளது. இதனால் இந்த வீதியூடாக பயணிப்போர் அடிக்கடி விபத்துக்குள்ளாகவேண்டியிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ-73)


## இலவச அமெரிக்க லொத்தர் விசாவைப் பெற்றுக்கொள்ள விரைவாகச் செயற்படுங்கள்



கொழும்பில் உள்ள எமது தலைமை அலுவலகம் மூலமாக இதுவரை பெற்றுக் கொடுத்த சேவையை முதல் முறையாக யாழ். மண்ணில் இலவசமாக அறிமுகப் படுத்துகின்றோம்.

❊ இந்த விசாவினைப் பெறுவதற்கு கல்வித்தகைமை, வயது எல்லை எதுவும் தேவையில்லை. நீங்கள் குடும்பத்தோடும், தனியாகவும் குடியேறலாம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.

**RAINBOW TRAVELS & TOURS**
32 1/2, KASTURYAR ROAD, JAFFNA.
Tel: 021 2223237

## உங்களுக்கோர் சேமிப்பு உங்களுக்கோர் இல்லம்

*காணி வாங்குதல், வீடு கட்டுதல், வீடு வாங்குதல், வீடு திருத் தியமைத்தல் போன்ற தேவைகளுக்கு கடன்பெற சேமிப்புக் கணக்கு ஒன்றை எங்களுடன் ஆரம்பியுங்கள்.*

*மேலும்,*
*அதியுயர் வட்டியில்*
*நிலையான வைப்புக் கணக்குகள்.*
*முதியோர் நிலையான வைப்பிற்கு*
*விசேட சலுகைகள்.*

**பிரதிநிதி ஒருவரின் ஆலோசனை பெற அழையுங்கள் 021-2226258**

CBSL
**(செலிங்கோ வீடமைப்பு கடன் சங்கம் லிமிட்டட்)**
*24, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 021222 6258*

*(இலங்கையில் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தனியார்துறை வீடமைப்புச் சங்கமாகும்)*

(42068) (54-11-17)

## பரம்பரை சுதேச மருத்துவர் சங்கம் யாழ். மாவட்டம் கலந்துரையாடல்

இடம்: லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி
காலம்: இன்று (30-10-2005) ஞாயிறு (நண்பகல் ஒரு மணி)

எமது சங்க உறுப்பினர்கள் சுதேச மருத்துவ பாதுகாப்புச் சபை நடத்தும் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்வதுடன் உரிமம், மருந்துகள் விபரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும். இத்தகவலை அருகிலுள்ள சுதேச மருத்துவர்களுக்கும் தெரியப்படுத்தவும்.

Dr.க.சோதிநாதன் — தலைவர்
Dr.ஜெ.ஜெயலன் — செயலாளர்
(42170)(54/)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில், நவீன வடிவமைப்பில் நன்கு கட்டப்பட்ட வீடு, நாலு அறைகள், இரு குளியலறைகள், பெரிய மண்டபம், சிறிய பொதுமண்டபம், சமையலறை, வாகன அறை, நல்ல தண்ணீர்க் கிணறு, இவ்வீடு பிள்ளையார் கோயிலுக்கு வீதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ளது.

தொடர்புக்கு கொழும்பு
இல. 2596429.

(42110) (54-11-17)

## MOON BEAUTY CARE
### Diploma & Personal Grooming classes

**Personal Grooming classes (4 weeks)**
(பெண்கள் தங்களின் சருமகேச அழகுப் பராமரிப்பை தாங்களே மேற்கொள்ள உதவும் பயிற்சி நெறி)

(a) Personal Skin - Skin தன்மைக்கு ஏற்ற Facial
(b) Henna Treatment - பொடுகு, இளநரை, முடிபிளவு என்பவற்றை கட்டுப்படுத்த உதவும் சிகிச்சை முறை
(c) Day make up & Party make up
(d) Nail care, Mani cure & Pedi cure
(e) Dye Hair Styles & Blow dry
(f) Body beautyful, Diet & Figure Control
(g) Fashion Sense & Poise, Saree drapes

**Diploma in Beauty Culture** (3 - மாதம்)

1. Facials:- Deulun (மலேசியா நாட்டுமுறை), 22k Gold Galvanic, High frequency உட்பட 10 வகைகளில்
2. Hair care:- Hair styles (30 methods), Henna Treatment Hair straitening, Hair Perming & Curling Hair Colouring
3. Bridle Dressing:- Hindu, Christian, Kandyan, Gugarathi
4. Make up:- Oil make up, Day make up, Party make up, Dance make up.
5. Body care:- Mani cure, Pedi cure, கழுத்தில் படரும் படர் கருமை, warts Remove (சிறிய காய்கள்) அகற்றல்
6. Eye care:- கண் கருவளையத்தை நீக்கும்முறை Eye brow shapping .
7. Mehenthy, Nail art, Body art & Stone work.

❊ பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
❊ பயிற்சி பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
❊ பயிற்சிகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் நடைபெறும்.

பயிற்சி வழங்குபவர்: பிரபல அழகுக்கலை பயிற்றுநர், நடன ஆசிரியை
Moon Beauty Care உரிமையாளர்
திருமதி B.அகிலா (Dip. in Beauty Culture)
(Dip. in Dance)
(Visaratha in karthak)

கொழும்பு - வவுனியா - யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

*மேலதிக விபரங்களுக்கு:-* இல.92, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி, யாழ்.
(சனி, ஞாயிறு காலை 9.30-1.00 மணிவரை சந்திக்கலாம்)
தொடர்புகளுக்கு: 0777 - 570138

(42090) (54-11-17)

## ஒத்துமாறல்

கிளிநொச்சி நகரத்தில் பிரபல பாடசாலையில் திட்டமிடல, நிதி உதவியாளராக பணியாற்றுபவர் யாழ்.மாவட்டத்திற்கு /தீவகத்திற்கு/ பளைக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு: 0214591820, 0779232592

(42141)

## பில் கிளாக் தேவை

சுன்னாகத்தில் உள்ள ஸ்ருடியோவுக்கு பில் கிளார்க், வெளிப்படப்பிடிப்பாளர்கள் தேவை. விரும்பும் சம்பள விவரங்களை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
விள. இல. 2731 மே/பா உதயன்.

(42105)

## அறிவித்தல்

கோண்டாவில் ஈசன் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற பௌதிகவியல் வகுப்புகள் தற்காலிகமாக இன்று ஞாயிற்றுக் கிழமை (30.10.2005) பிற்பகல் 4 மணி தொடக்கம் கன்னாதிட்டி நியூ சயன்ஸ் கோல் கல்வி நிறுவனத்தில் நடைபெறும்.

குறிப்பு:
மாணவர்கள் ஈசன் கல்வி நிறுவனத்தின் அனுமதி அட்டையைக் கொண்டுவரவேண்டும்.

ஆசிரியர்
குமரன்.

(42169) (54-11-17)

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**எஸ்.என் கந்தையா (J.P.)**
(இளைப்பாறிய அதிபர்)
தோற்றம்: 25.09.1917
மறைவு: 20.10.1987



**என்.கே.தர்மலிங்கம் M.A. Dip.**
(முன்னாள் அதிபர், ஸ்ரான்லிக் கல்லூரி)
தோற்றம்: 28.03.1941
மறைவு: 20.10.1987

18ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் திவசமும் இன்று (30.10.2005) ஞாயிற்றுக் கிழமை அவர்களின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் சமுகம் தந்து சிறப்பித்து மத்திய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அழைக்கின்றோம்.


*93/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*சுண்டுக்குழி,*
*யாழ்ப்பாணம்.*

க.தர்மநாயகம்
பொறுப்பதிகாரி,
யாழ்.பேருந்து நிலையம் (இ.போ.சபை)

தகவல்:
மனைவிமார், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(42134) (54-11-17)

## அதிரடி விலைக்கழிவில்



வீடுகளில் அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M. மேசைத் தொலைபேசிகள் பூட்டித்தரப்படும்.
டயலொக் 500/-, மொபிரல் 300/- பைக்கேச் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

ரூபா 10,000/- மட்டும்

தொடர்புகளுக்கு:
**பவர் செலூலர் டிரேடிங் கம்பனி**
*205/01, கஸ்தூரியார் வீதி*
*(ராஜா தியேட்டர் அருகில்), யாழ்ப்பாணம்.*
**T.P.: 0712 399220, 0714-182500, 0775518550**

(சி/45468) (24) (54-11-17)


## றோட்டறிக் கழக பதவியேற்பு நிகழ்வு

வலி. தெற்கு, ஒக்.30


சுன்னாகம் றோட்டறிக் கழகத்தின் பதினோராவது தலைவர் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி றோட்டறிக் கழகத்தின் பதினோராவது தலைவராக றோட்டரியன் சோமசுந்தரம் தயாபரன் பதவியேற்றுக் கொண்டார்.

றோட்டோரியன் இ.நவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ்ப்பாண றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டோரியன் என். சரவணபவன் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்.

நிகழ்வில் சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினரின் சுருதி என்னும் சஞ்சிகையும் வெளியீட்டு வைக்கப் பட்டது. (202-152)


## மரண அறிவித்தல்



### திருமதி விஜயலட்சுமிஅம்மா இராமச்சந்திரக்குருக்கள்
(பாப்பா)

திருமதி விஜயலட்சுமிஅம்மா இராமச்சந்திரக் குருக்கள் அவர்கள் கடந்த 27.10.2005 வியாழக் கிழமை மலேஷியாவில் காலமாகி விட்டார். அன்னார் பிரம்மஸ்ரீ ச.க.இராமச்சந்திரக் குருக்கள் (மலேஷியா, முன்னாள் பிரதமகுரு, வல்லிபுராலயம்) அவர்களின் அன்பு மனைவியும் சாரங்கன் (பிரான்ஸ்), ரோகினி (சுவிஸ்), காருண்யா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தாயும் சசிதரசர்மா (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2005) ஞாயிற்றுக் கிழமை மலேசியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இத்துயரம் நிறைந்த செய்தியினை அன்னாரின் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குரு
தொ. பே: 2263380

*வல்லிபுராலயம்,*
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*

(42149) (54-11-17)

சிறப்புத் தள்ளுபடி



*இன்றும், நாளையும் தீவாபளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விலையில் அனைத்து ஆடைகளுக்குமான விலைக்கழிவை வந்து பாருங்கள். உண்மை புரியும்.*
*முற்றிலும் குளிருட்டப்பட்ட காட்சியறைய்யில் புடவைகளின் சாம்ராஜ்ஜியம்*

## கிறீன் பலஸ் எம்போறியம்
**திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.**

சிறப்புத் தள்ளுபடி

(42154) (54-11-17)

# வெள்ளையருக்கு ஆசனத்தைக் கொடுக்கமறுத்து உரிமைப் போராட்டம் நடத்திய கறுப்பு இனத்தாய்

**1955** ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி றோசா பார்க்ஸ் அம்மையார் நகர பஸ் ஒன்றின் ஆசனத்தில் அமர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தார். பஸ்ஸில் ஏறிய வெள்ளை இன மனிதர் அந்த ஆசனம் வெள்ளையருக்குரியது என்று கூறி றோசா பார்க்ஸ் அம்மையாரை எழுந்து ஆசனத்தைத் தரும்படி உத்தரவிட்டான்.

அந்த காலத்தில் பஸ்களில் கறுப்பு இனத்தவர் ஆசனங்களில் அமர்ந்து பிரயாணம் செய்யும் போது வெள்ளையர் வந்தால் எழுந்து இடந்தர வேண்டும் என்பது ஓர் ஒழுங்கு விதியாக நடைமுறையில் இருந்தது.

வெள்ளையனுக்கு ஆசனத்தைக் கொடுப்பதற்கு றோசா மறுத்துவிட்டார்.

இம்மாதிரி மறுப்புத் தெரிவித்த இரண்டு கறுப்பினப் பெண்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர். ஆனால், றோசாவுக்கு சிறைத்தண்டனையும் 14 அமெரிக்க டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது.



றோசா பார்க்ஸ்

றோசா பார்க்ஸ் அம்மையார் கைது செய்யப்பட்டதையடுத்து 381 நாள் மொன்ரிகொரி பஸ் பிரயாண பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடங்கியது. இந்தப் போராட்டத்தை முன்நின்று நடத்தியவர் அப்பொழுது வெளி உலகில் அதிகம் அறியப்படாதிருந்த பரப்டிஸ்த போதகர் வண. மார்டின் லூதர் கிங் ஜூனியர் ஆவார். இந்தப் போராட்டத்தின் பின்னரே அமெரிக்க சிவில் உரிமைப் போராட்ட வீரராகப் புகழ் பெற்றார் மார்ட்டின் லூதர் கிங். அவருக்கு நோபல் பரிசும் கிடைத்தது. பின்னர் வன்முறையாளன் ஒருவனின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார்.

றோசா பார்க்ஸ் அம்மையார் கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை தமது 92 ஆவது வயதில் தமது இல்லத்தில் இயற்கையான முறையில் காலமானார். 1955 ஆம் ஆண்டு வெள்ளையருக்கு எதிரான போராட்டத்தை நடத்திய போது றோசாவுக்கு 42 வயது. அந்தப் போராட்டம் அமெரிக்க கறுப்பு இனமக்கள் வாழ்வில் ஒரு திருப்பத்தையே ஏற்படுத்தியது. அதே போல் அமெரிக்க "சிவில் உரிமை போராட்ட இயக்கத்தின் தாயார்" என்ற பட்டத்தையும் அவருக்குப் பெற்றுக்கொடுத்தது.

சிவில்யுத்த மறுசீரமைப்பு சட்டங்களின் கீழ் அமெரிக்க தென்பகுதியின் முழுவதும் பஸ்கள், உணவகங்கள் மற்றும் பொதுத் தங்குமிடங்கள் எங்கும் கறுப்பர், வெள்ளையருக்கென்று வெவ்வேறு இடங்கள் இருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. அதேபோல் வடக்கில் சமூக பாகுபாடான சட்டங்கள் அமுலில் இருந்தமையால் கறுப்பர்கள் வேலைகள் இன்றியும் இதர ஒடுக்குமுறைகளுக்கும் முகம் கொடுத்துவந்தார்கள்.

மொன்றிகொரியில் தையல் வேலை செய்து வந்தவரான றோசா பார்க்ஸ் அம்மையார், வெள்ளையர் அல்லாதவர்களின் முன்னேற்றத்துக்கான நிறுவனத்தின் உள்ளூர் கிளையின் தீவிர உறுப்பினராக இருந்துவந்தார்.

றோசா அம்மையாரின் இறுதிச் சடங்கில் உரை நிகழ்த்திய டிட்ரொயிட் மேயர் பின்வருமாறு கூறினார். "ஆசனத்தில் அமர்ந்தபடி அவர் நிமிர்ந்து நின்றார். அவர் அவ்வாறு செய்ததனால்தான் நான் இன்று இவ்வாறு நிற்கிறேன்" என்று.

அமெரிக்க காங்கிரஸ் சபை பிரதிநிதி சர்ல்ஸ் நேஞ்சல், றோசா அம்மையாரின் துணிச்சலைப் புகழ்ந்து பேசுகையில், போதும் என்றால் போதும் என்று கூறக்கூடிய திராணியுள்ள ஒவ்வொரு அமெரிக்கனிலும் றோசா பார்க்ஸ் அம்மையாரின் ஒரு கொஞ்சம் இருக்கிறது என்று நம்புகிறேன். அவர் சிறு காரியத்தையே செய்திருந்தார். ஆனால், பணிவான ஒரு நபர் செய்திருக்கக் கூடிய மிகத் துணிச்சல் மிக்க காரியமாகும் அது என்றார்.

அந்த நிகழ்வுபற்றி அம்மையார் ஒருமுறை கூறியபோது, "என்னை அவர்கள் எழுந்திருக்கச் சொன்னபோது நான் ஏன் மறுத்தேன் என்று தெரியவில்லை. ஆனால், அதற்கு உண்மையான காரணம் என்னவென்றால் வேறு எந்த ஒரு பிரயாணியைப் போலவே நானும் நடத்தப்படவேண்டும் என்ற உரிமை எனக்கிருக்கிறது என்பது தான் இம்மாதிரி நடத்தப்படுவதை அளவுக்கு அதிக காலத்துக்கு நாங்கள் சகித்துக் கொண்டு வந்து விட்டோம்" என்று கூறினார்.

முப்பது வருடங்களுக்கு பின்னர் அவர்

## மார்டின் லூதர் கிங் பிரபல்யமாகக் காரணமாக இருந்தவர்

அந்த நிகழ்வை நினைவு கூர்ந்தபோது "இந்த விதமாக அது மாறும் என்று நான் நினைத்திருக்கவில்லை. அன்றைய தினம் வேறு எல்லா நாள்களைப் போலவே சாதாரண நாளாக எனக்குத் தோன்றியது. ஆனால், அதுமுக்கியத்துவம் பெற்றமைக்கு பெரும் எடுப்பில் பொதுமக்கள் சேர்ந்து கொண்டதுதான் காரணம்" என்றார்.

"கறுப்பர்களுக்கு வேறாகவும் வெள்ளையர்களுக்கு வேறாகவும் பாடசாலைகள் நடத்தப்படுவது இயற்கையாகவே சமநிலையற்ற காரியம்" என்றவாறு அமெரிக்க உச்ச நீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பையடுத்து ஒரு வருட காலத்தின் பின்னர் மொன்றிகோமரி பஸ் பகிஷ்கரிப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதுவே நவீன சிவில் உரிமை நிறுவனம் உருவாகக் காரணமாயிற்று. இதன் தீவிர போராட்டங்களின் பயனாக 1964 ஆம் ஆண்டு சிவில் உரிமைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது. பொது நிலையங்களிலும் அமைப்புகளிலும் இன அடிப்படையில் பாகுபாடுகள் காட்டப்படுவதை இச்சட்டம் தடைசெய்தது.

வெளிப்படையாக உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் அலபாமாவில் வேலை கிடைப்பது குறைந்துவிட்டது. அதனால் பார்க்ஸ் குடும்பம் பயமுறுத்தல்கள், இடைஞ்சல்களுக்கிடையில் 1957 ஆம் ஆண்டு டிட்ரொய்ட் நகருக்கு இடம்பெயர்ந்து 1965 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க காங்கிரஸ் ஜனநாயக பிரதிநிதி ஜோன்கென்வெயர் என்பவரின் காரியாலத்தில் ஓர் உதவியாளராக றோசா பணிபுரிந்தார். 1988 இல் ஓய்வு பெற்றார். அவரது கணவர் றேமோன்ட் பார்க்ஸ் 1977 ஆம் ஆண்டு காலமானார்.

## தாய்மார் மூவர் குழந்தை ஒன்று

### ஒரு குழந்தை தாய் மூவர்

புற்றுநோய் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதால் அலெக்ஸ் என்ற பெண் மணிக்கு குழந்தைப்பேறு இல்லை என்று டாக்டர்கள் அறிவித்துவிட்டார்கள். குழந்தை இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை என்று ஆகிவிட்டது அவருக்கு.

அலெக்ஸின் கவலை பற்றி அறியவந்த அவரது இரட்டைச் சகோதரிகளில் ஒருவரான சார்லட் என்பவர் "கவலைப்படாதே என் கருமுட்டைகளில் ஒன்றை உனக்குத் தந்துதவுகிறேன்" என்று தைரியமூட்டினார். மற்ற சகோதரி ஹெலன், அந்த கரு முட்டையில் உருவாகும் குழந்தையைத் தான் தமது கருப்பையில் சுமந்து உதவ முன்வந்தார். தனது சகோதரிகள் பகிடி விடுவதாகவே முதலில் அலெக்ஸ் நினைத்திருந்தார். ஆனால், அது உண்மையானவே நடந்துவிட்டது.

இன்னொருவரின் கரு முட்டையைக் கொண்டு குழந்தை பிரசவிக்கச் செய்யும் (IVF) சிகிச்சை நான்கில் ஒருவருக்குத் தான் வெற்றியளிக்கும் என்று கருதப்பட்டாலும் முதல் முயற்சியிலேயே ஹெலென் கருவுற்றார். ஹெலெனின் வயிற்றில் வளர்ந்த குழந்தை சார்லட்டின் கருமுட்டையையும் அலெக்ஸின் கணவர் ஷாவுனின் உயிர் அணுவையும் கொண்டு உருவாக்கப்பட்டது. பிறந்தது ஆண் குழந்தை. அதற்கு சார்ளி என்று பெயரிட்டார்கள். குழந்தை பிறக்கும் போது ஒரு இறாத்தல் 7 அவுன்சாக நிறை இருந்தது.

ஒன்பது மாதங்கள் சார்ஷியை வயிற்றில் சுமந்தாலும் குழந்தையை அலெக்ஸிடம் கொடுப்பதில் தனக்கு எதுவித குழப்பமும் இல்லையென்று ஹெலென் கூறுகின்றார்.

இச் சகோதரிகளின் குழந்தைக் கதை பி.பி.ஸியில் ஒலிபரப்பப்படவிருந்தது. "ஓர் உயிர், மூன்று சகோதரிகள் கூட்டினால் ஒரு குழந்தை" என்று அந் நிகழ்ச்சிக்குப் பெயரிட்டிருக்கிறார்கள்.



ஒரு குழந்தைக்கு தாய் மூவர்

* * *

### இதய நோய்க்கு மதுபானம் ஒருமருந்து?

இரத்தம் உறைவதைத் தடுக்கும் சக்தி மதுபானத்தில் இருப்பதாக ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர். வாரத்தில் சிறிதளவு மது அருந்தினால் இரத்தம் கெட்டிப்படுவதற்குக் காரணமாய் இருக்கும் பொருளின் சக்தியைக் குறைக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரத்தம் உறைவதற்கு காரணமாகும் பொருள் தொகுதியாக சேர்வதில் மதுரசம் தலையிடும் தன்மையைக் கொண்டிருப்பதாக முன்பு ஆய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போதைய கண்டுபிடிப்பு மதுபான பாவனையானது இரத்தம் கெட்டியாவதற்குக் காரணமான பொருளின் செயற்பாட்டை கண்டிக்கும் தன்மை கொண்டிருக்கிறதென்பதைக் காட்டுகிறது என்று போஸ்டனிலுள்ள பெத் இஸ்ரேல் டீக்கொனஸ் மருத்துவ அமைப்பைச் சேர்ந்த டாக்டர் கென்னத் ஜே. முக்கமல் தெரிவித்துள்ளார்.

3000 பேரிடம் நடத்திய ஆய்விலிருந்து இந்த உண்மை தெரியவந்திருக்கிறதாம்.

மிதமாக மது அருந்துவது இதய நோய்களின் அபாயத்தைக் குறைப்பதாக இருந்த போதிலும், இதய நோய்களின் அபாயத்தை முற்றாகவே இல்லாதொழிப்பதற்கு வழியேற்படுமா என்பதில் ஆய்வாளர்கள் ஈடுபடவிருக்கிறார்கள் என்று தெரிகின்றது.

* * *

### ஆப்கான் பத்திரிகைஆசிரியருக்கு தண்டனை

ஆப்கானிஸ்தானில் பெண்கள் சஞ்சிகை ஒன்றின் ஆசிரியர் தெய்வ நிந்தனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது கட்டுரைகள் இஸ்லாம் மதக்கோட்பாடுகளைக் குறை கூறுவதாக இருந்தன வென்று கூறப்படுகின்றது.

அலி மொஷாக்கிக் நசாப் என்ற அப்பத்திரிகையாளர் காவலில் வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து அதிபர் ஹமிட் ஹார்சாயிடம் முறையிடப் போவதாக ஆப்கானிஸ்தான் சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

ஆரம்பத்திலிருந்தே அவர் கைது செய்யப்பட்டது. விசாரிக்கப்பட்டது, காவலில் வைக்கப்பட்டது அனைத்துமே சட்டத்துக்கு மாறான செயல்கள் என்று அச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆப்கான் சட்டத்துக்கு அமைவாக அவர் எழுதக் கூடியதை மட்டுமே எழுதினார். அவர் தவறேதும் இழைக்கவில்லை. பத்திரிகைச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்கு மாறாக அவர் செயல்படவில்லையென்று சங்கம் தெரிவித்துள்ளது. சட்டவிரோத உடல்உறவு போன்ற குற்றங்களுக்கு அளிக்கப்படும் இஸ்லாமிய தண்டனைகளின் கடும் தன்மை பற்றி அவர் கேள்வி எழுப்பியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்த வழக்கு ஆப்கானிஸ்தான் ஊடகத்துறை ஆணைக்குழு முன்னிலையிலும் விசாரிக்கப்பட்டது. பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்ற பதவியை ஆணைக்குழு இரத்துச் செய்தது. அதே சமயம் தெய்வ நிந்தனை என்ற குற்றச்சாட்டை கைவிடலாம் என சிபாரிசு செய்தது.

உலக வலம்

மேனா

ஆப்கானிஸ்தான் சட்டத்தின் கீழ் ஒருவர் இருமுறை - ஒருமுறை நீதிமன்றத்தாலும் இன்னொரு முறை ஆணைக்குழுவினாலும் தண்டிக்கப்பட முடியாது. நாம் இதுபற்றி அதிபர் ஹார்சாயிடம் முறையீடு செய்வோம் என்று பத்திரிகையாளர்சங்கம் அறிவித்துள்ளது.

* * *

### பூகம்பத்தின் எதிர் விளைவுகள்; பாகிஸ்தான் இன்னும் மீளவில்லை

பாகிஸ்தானில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் சரியான வகையில் உதவிகள் போய்ச்சேரவில்லையென்று முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

மலைப் பிரதேசங்களில் இன்னமும் மறைவான இடங்களில் தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு நிவாரணப் பொருள்களைத் 'தும்பி' விமானங்கள் மூலம் போடப்பட்டு வந்தபோதிலும் விமானங்கள் போதவில்லையென்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

உதவிப் பணிகள் தூர இடங்களுக்கு சென்று சேர்வதில் பெரும் இக்கட்டுகள் ஏற்பட்டிருக்கும் வேளையில் கடந்த ஞாயிறு மீண்டும் புதிய பூமி அதிர்ச்சிகள் சில இடங்களில் ஏற்பட்டு நிலைமையை மோசமாக்கியிருக்கின்றது.

இந்த அதிர்ச்சிகளினால் ஏற்பட்ட உயிர்ச் சேதம், பொருள் சேதம் பற்றிய விவரங்கள் வந்து சேரவில்லை என்று அதிகாரிகள் கூறினார்கள். ஒக்ரோபர் 8ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் 53 ஆயிரம் பேருக்குமேல் கொல்லப்பட்டு, 30 லட்சம் பேருக்கு மேல் வீடுகளை இழந்தார்கள்.

பாகிஸ்தான்,காஷ்மீர், இமாலயப்பகுதிகளில் பாகிஸ்தான் 'தும்பி' விமானங்கள் பறந்து நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ளன. வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளின் 'தும்பி' விமானங்கள் வந்து கொண்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

காஷ்மீர் எல்லைப்பகுதியில் இந்திய - பாகிஸ்தான் அதிகாரிகள் ஒருங்கிணைந்த முறையில் நிவாரணப்பணிகளைச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். எல்லைக்கோட்டைக் கடந்து இருபுறமும் நகர்ந்து பணியாற்றுவதற்கு பாகிஸ்தான் ஆலோசனை தெரிவித்துள்ளது. அதேசமயம் உயர்மட்ட ராணுவ அரண்கள் அமைந்துள்ள பகுதிகளில் மூன்று நிவாரண மையங்களை அமைக்க இந்திய அதிகாரிகள் முன்வந்துள்ளார்கள்.

பூமி அதிர்ச்சி ஏற்பட்டு பல நாள்கள் ஆகியும் அதன் பின் விளைவுகளின் தன்மை பற்றி இப்பொழுதுதான் உலகம் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளது என்று ஐ.நா.அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ.நா.முகவர் அமைப்புகள் 60 ஆயிரம் கூடாரங்களை விநியோகித்துள்ளன.

மலைப்பாங்கான பகுதிகளுக்கு நிவாரணங்களைக் கொண்டு செல்வதே இப்பொழுது பெரும் பிரச்சினையாக விருக்கிறது.

# திருமணக் கார் (குளிரூட்டியது)



## வாடகைக்கு

+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (41278)

தொடர்பு: [illegible]
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



# கொழும்பு மொத்த விலையில்!

*அனைத்து ரகப் புடைவைகளையும் பெற்றுக்கொள்ள!!*

## சீமாட்டி புடைவைக்கடல்

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/45930)



# ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள
**வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாக துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார், வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்கால பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

✱ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளை சந்திக்கலாம்.

**பிள்ளையார் இன்**

*அறை எண் 3, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.*



# யா/அருணோதயக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்-2005

மேற்படி கூட்டம் 04.11.2005 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு *அருணோதயக் கல்லூரி மண்டபத்தில்* நடைபெறும். சகல அங்கத்தவர்களும் சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். புதிய அங்கத்துவத்தைப் பெற விரும்புவோர் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளவும். (41223)(21.


## சிறப்புற நடந்த நற்கருணைப் பேரணி

வலி.தென்மேற்கு ஒக்.,30

சில்லாலைப் பங்கு மக்களும், சில்லாலை புனித கதிரை மாதா ஆலய பங்குச் சபையும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய நற்கருணைப் பேரணியில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்திலிருந்து அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்பட்ட இப் பேரணி பண்டத்தரிப்பு சந்தியை வந்தடைந்தது. பின்னர் அம்மன் வீதி வழியாக சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலயத்தை பேரணி சென்றடைந்தது. அங்கு பூசை வழிபாடுகள் இடம் பெற்றன. இப்பேரணியில் பொது மக்களுடன் குருமார்களும், அருட் சகோதரிகளும் கலந்து கொண்டனர்.

(எ-135)

## புங்குடுதீவில் பனம் விதை நடுகை

புங்குடுதீவு ஒக. 30

புங்குடுதீவுப் பகுதியில் பனை வளத்தை மேம்படுத்தும் நோக்குடன் வேலணை பிரதேச சபையின் உப அலுவலகத்தினால் பனம் விதை நடுகை மேற்கொள்ளப்படுகிறது. புங்குடுதீவின் முக்கிய வீதிகளின் இரு மருங்குகளிலும் பனம் விதைகள் நடப்படவுள்ளன என்று உப அலுவலகப் பொறுப்பதிகாரி இ. பேரின்பநாதன் தெரிவித்தார்.

(ஒ-ரி)

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி ஜெகநாதன்



திருநெல்வேலி தெற்கு, தாளையடியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிட மாகவும் இல.14, கந்தர்மடம், அம்மன் வீதியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ஜெகநாதன் அவர்கள் 26.10.2005 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர்கள் திரு,திருமதி நடராஜாவின் மகளும் அமரர்கள் திரு. திருமதி தாமோதரம்பிள்ளை - கண்ணுக்காவின் மருமகளும் அமரர் ஜெகநாதனின் (ஓய்வு பெற்ற பொலீஸ் உப பரிசோதகர்) அன்பு மனைவியும் அருளேஸ்வரி (ஜேர்மனி), உதயராஜ் (ஜேர்மனி), ஜெயவாணி (**Fashion Beauty Corner**) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேஸ்வரன் (ஜேர்மனி), சுபர்ஜனா (ஜேர்மனி), கஜேந்திரன் (ஸ்ரீலங்கா புத்தகசாலை உரிமையாளர்) ஆகியோரின் அன்புமிகு மாமியும் அமரர் மதிவதனசோதி, ஜெயராணி, வசந்தமல்லிகா (விமலா), பாலகிருஷ்ணன் (கனடா), கோணேசலிங்கம் (கனடா), நளாயினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசுப்பிரமணியம், வசந்தமல்லிகா(கனடா), ஸ்ரீகுமாரி (கனடா), செல்வகாந்தன் (ஜேர்மனி), ஜெயரட்ணம் (ஓய்வு பெற்ற மதுவரிப் பரிசோதகர்), அமரர் ஜெயசிங்கம் (**ACI Ltd.**), ஜெயகாந்தன் (கனடா),லயன் **G.** இராமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனியும் அமரர் கந்தசாமி, திருமதி கந்தசாமி, ஈஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் பிரீத்தன், அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 30.10.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**குடும்பத்தினர்.**

**இல.14, அம்மன் வீதி, கந்தர்மடம்.**
**021 - 222 6864**

(சி-45965)(21.11.15)


# BBS இன் ஆங்கில மொழி மூலமான பாட நெறிகள்

## ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

| | |
|---|---|
| வயது 2+ முதல் வயது 3 வரை | Play Group |
| வயது 3+ முதல் வயது 4 வரை | Montessori |
| வயது 4+ முதல் வயது 5+ வரை | Pre-School |

### விசேட அம்சங்கள்

✱ ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
✱ தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
✱ பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
✱ முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

## Year 1,2,3,4,5 Saturday English Medium Classes

*BBS யாழ்ப்பாணம், பருத்தித்துறை வளாகங்களில் நடைபெறுவது போன்று மானிப்பாய் ஆலடிச்சந்தி வளாகத்திலும் ஆங்கில மொழி மூலம் ஆண்டு 1, 2, 3, 4, 5 வகுப்புக்கள் சனிக்கிழமைகளில் நடாத்தப்படும்*

தேசிய பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் ஆங்கில மொழி மூல பாடத்திட்டத்தை சிறார்கள் சிறந்த முறையில் மேற் கொள்ளுவதற்கு இப்பாடநெறிகள் வழிவகுக்கும்.

சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள் 5+ to 14+ சிறார்களுக்கு

- Pre-Foundation
- Lower Intermediate
- Foundation
- Intermediate
- Upper Intermediate

வளர்ந்தோருக்கான ஆங்கில பாட நெறிகள்

- COMMUNICATION SKILLS
- CERTIFICATE IN ENGLISH
- DIPLOMA IN ENGLISH
- IELTS by Top Lecturer

## BRITISH BUSINESS SCHOOL

| | | | |
|---|---|---|---|
| இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய். |

HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL






யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்
தீபாவளியை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்

# Style Park
Perfect Collection

# ஸ்ரைல் பார்க்



முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்
அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383
இல. 171. கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

# ஆனைக்கோட்டைப் பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடம்; மாணவர் சிரமம்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் 7 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன எனக் கூறப்பட்டது.

இங்கு ஆரம்பக் கல்வியை போதிப்பதற்கு ஆங்கில ஆசிரியர் உட்பட 4 பேரும் சமூகக்கல்வி, தமிழ், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கு தலா ஒவ்வொருவருமாக 7 வெற்றிடங்கள் நிலவுவதாக தெரிவிக்கப் படுகிறது.

இதற்கிடையில் மேற்படி ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படாத தனால் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது (எ-100)

## வாழ்த்துகிறோம்



### திருமதி றெஜீனா இருதயநாதன்

(வலயக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)

ஆற்றல் மிக்க அதிகாரியாய்
அரவணைத்து வழி நடத்தும் அன்னையாய்
வாழும் தலைமுறையின் விடி வெள்ளியாய்
வரலாற்றில் தடம்பதித்த நாயகியே!
நானிலம் போற்றிட நலமே வாழ்க!

அறுபதாவது அகவையில் சேவையிலிருந்து ஓய்வுபெறும் எம் கல்விப் பணிப்பாளருக்கு எம் வாழ்த்துக்கள்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/மிருசுவில் றோ.க.த.க. வித்தியாலயம்,
யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை.

(42126)
(18-17-45)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் விவேகானந்தமூர்த்தி (ராயு)

(யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன்)

தோற்றம் 11-09-1980 மறைவு 29-10-2004

நெஞ்சம் கனத்தபடி ஓராண்டு கடந்தது நண்பா!
இன்னும் உன் நினைவுகள் எம்மை
சுற்றி வந்து வாட்டுதடா
நிரப்பிட முடியா இடைவெளியை
நினைத்தபடி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் உன் நினைவால்...

3 ஆம் வருட மாணவர்கள்,
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

(42178)
(18-17-45)

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 06 - 03 - 1948



மறைவு 30 - 09 - 2005

### அமரர் தம்பு முத்தையா

அன்பின் திருவுருவமாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் எம்மையெல்லாம்
ஆழாக்கி நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!
பிரிந்தது நாள்கள் 31 என்ன பல வருடங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (30.10.2005)ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(42181)(18-17-45)

## மரண அறிவித்தல்

### கதிர்காமத்தம்பி சிறீவர்ணன்

மானிப்பாய், சந்தையடியைப் பிறப்பிடமாகவும் சரசாலை ,வடக்கு சாவகச்சேரியை புகுந்த இடமாகவும் கொண்டு கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சென்.மேரிஸ் வர்த்தக நிறுவன உரிமையாளர் கதிர்காமத்தம்பி சிறீவர்ணன் 28.10.2005 அன்று காலமானார்.

அன்னார் மானிப்பாய் சந்தையடி காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி - ராசலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் சரசாலை வடக்கு; சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் கந்தசாமி - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் இரத்தினசிகாமணியின் கணவரும் தேவகி மாலா(கனடா), மதிபாலா(கனடா), ஜெயந்தி (கனடா), அமரர் சிறீகாந்தா, சிறீரஞ்சன், சிறீசீலன், சிறீமன்னன், சிறீரஞ்சன் ஆகி யோரின் அன்புச் சகோதரனும் கொடிகாமம் க.ஞானலிங்கம் (தபால் அதிபர் - யாழ்ப்பாணம்), க.வீரசிங்கம் (ஆசிரியர், கம்பளை இந்துக் கல்லூரி), கதங்க ராசா,க.சற்குணராசா (கிருலப் பனை கஜூ சொப்பி உரிமையாளர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.10.2005)ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4 மணிவரை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 4 மணிக்கு கொகுவலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.0785655269 (42187) (18-17-45) தகவல்: மனைவி,

# ரூ. 8 கோடி ஹெரோயினுடன் 2 இந்தியப் பிரஜைகள் கைது!

மன்னார்க் கடலில் எட்டு கோடி ரூபா பெறுமதியுடைய 12 கிலோ ஹெரோ யினைக் கடத்திவந்தவர்கள் என்று கருதப்படும் இந்தியப் பிரஜைகள் இருவரை கடற்படையினர் நேற்று முன்தினம்அதிகாலை கைதுசெய்திருக்கின்றனர்.

அதிவேக இயந்திரப் படகொன்றில் இலங்கை நோக்கிவந்து கொண்டிருந்த போது மன்னார் வடக்குக் கடலில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

தமிழ்நாட்டுக் கரையை அடுத்து கச்சதீவு பகுதியிலிருந்தே இந்த ஹெரோயின் 12 கிலோவும் கொண்டு வரப்பட்டதாக மேற்படி இந்தியப் பிரஜைகள் கடற்படையினரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இது குறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## கண்ணீர் அஞ்சலி



28.10.2005
அன்று
சிவபதமடைந்த
எமது பாடசாலை
முன்னாள் அதிபர்

### செல்வி போ.கந்தசாமி

அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள்
யா/பண்டத்தரிப்பு பெண்கள்
உயர்தரப் பாடசாலை.

(42189)
(18-17-45)


ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விக்ரம், அஸின், மணிவண்ணன் நடித்த

மஜா (சினிமா) காட்சிநேரம்: 10.30, 2.30 , 6.30, 9.30பு.நே.

(ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்).

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த

மழை (சினிமா) காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00, 7.00

அடுத்த வெளியீடு: அர்ஜுன் நடித்த ஆணை

மனோகரா யாழ்ப்பாணம்

இன்று முதல்இளைய தளபதி விஜய் வெடிக்கும்

சிவகாசி

யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்

காட்சிநேரம்: 10.30, ..30 , 6.30, 9.30பு.நே.

விசேட காட்சியாக சிலதினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

(அ.45593)


## மரண அறிவித்தல்

### புனிதமணி சின்னையா

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புனிதமணி சின்னையா நேற்று(29.10.2005) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சின்னையா - தெய்வநாயகி தம்பதியரின் புதல்வியும் திருமதி நெ.மனோன்மணி (தி/ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரி ஆசிரியை), சி.இரத்தினவடிவேல், காலஞ்சென்ற திருமதி யோ.யோகமணி (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), சி.ஞானமணி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), சி.சாரதாமணி(யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ப.ஜெயகுமாரன், நி.யோகேந்திரன், இ.தயாளினி ஆகியோரின் மைத்துனியும் ஜெ.தாட்சாயனி(கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), ஜெ.மயூரேசன் (களனிப்பல் கலைக்கழகம்), ஜெ.ஜெயதாரணி, யோ.குகதாஸ்( யாழ். பல்கலைக் கழகம்), யோ.குகதர்சன் , யோ.பாரதி ஆகியோரின் சிறிய தாயாரும் இ.பூங்கோதை (IFS கொழும்பு), இ.திருக்குமரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று பிற்பகல் 3 மணியளவில் பத்திரகாளி கோயில் வீதி, பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை.

(அ-46001)
(18-17-45)

தகவல்:சகோதரன்
சி.இரத்தினவடிவேல்.

## மரண அறிவித்தல்கள்

### கதிரேசு மகாலிங்கம் (லிங்கம்)

(முன்னாள் உரிமையாளர், காந்தன் அச்சகம் தெல்லிப்பழை)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சம்பியன் லேன், கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கதிரேசு மகாலிங்கம் அவர்கள் 27.10.2005 வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் முகுந்தன் (நோர்வே), மகிந்தன்(பிரான்ஸ்), மகிலா(நோர்வே), மேகலா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மணிவண்ணன் (நோர்வே), கிருஷ்ணகுமார்(நோர்வே), அருட்செல்வி (நோர்வே), பாமினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திறிம்.அனோஜன், எமில்வர்மன், பரிஷ்னா, மேனன், மயூரி, அஜேராம், அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கதிரேசு - சின்னத்தங்கம் தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற சின்னம்மா, சிவபாக்கியம் மற்றும் கண்மனி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்லப்பா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விஜியரட்ணம் மற்றும் அமரசிங்கம், பாலசுப்ரமணியம் (ஜேர்மனி), காலஞ்சென்ற தனலட்சுமி, புகனேஸ்வரி மற்றும் ராசலட்சுமி மகேஸ்வரன், ராஜேஸ்வரன்(ராசன்),சுந்தரேஸ்வரன்(வரன்), காந்திமதி(டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் லேன், கொக்குவில்.
T.P. No.:0712244821 (42190)(22-12-18-45)

தகவல்:
மகேஸ்வரி (மனைவி).

### திருமதி இராசரத்தினம் இராசம்மா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் இராசம்மா நேற்று (29.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் இராசநாயகி, இராசலெட்சுமி, இராசலிங்கம், இராசதுரை(செயலாளர், சுழிபுரம் பிரதேசசபை), இராஜேஸ்வரன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், சபாநாயகம், கிரிகா, ஜெகதீஸ்வரி, இரா ஜேஸ்வரி (ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகி யோரின் மாமியும் பிரேமகுமார், அசோகுமார், முரளி, ஸ்ரீஸ்கந்தராசா, வாசுகி, கௌரி , மதிவதனி, விஜயநந்தினி, இரவிச்சந்திரன், தமயந்தி, தரிசினி, மிருஷா, நிருஷா, நிருஷன், நிசார, திவாகரன், திருமகள், திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.10.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உரும்பிராய் கிழக்கு இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(42183)
(18-17-45)

தகவல்:
இ.இராசதுரை.

### ஏபிரகாம் அன்ரனி (சட்டத்தரணி J.P. U.M.)



யாழ்.குருநகரைப் பிறப்பிடமாகவும்கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பிரபல சட்டத் தரணியும் உத்தியோக பற்றற்ற நீதிவானும் சமாதான நீதிவானுமாகிய ஏபிரகாம் அன்ரனி 25.10.2005 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் அவுறாம்பிள்ளை -ஆளாயமுத்துவின் அன்பு மகனும் எட்விஸ்சம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அரியராசாவின் அன்புச் சகோதரனும் மேரி ஆன்(கனடா), லூடிக் கன்ஸ் (கனடா), ஜொய்சி(கனடா),அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி அ.ம.தி. (யாழ்ப்பாணம்), அருள்தாசன்(கனடா), நிர்மலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரான்ஸிஸ் ஜோசப் (கனடா), இருதயதாஸ்(கனடா), றேமண்ட் சிங்கறிங்கம்(கனடா), விஜயா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனலம்மாவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக நாளை (31.10.2005)திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல.225,பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(42161)
(18-17-45)

தகவல்:
மைக்கல் அஞ்சலோ.

### திருமதி புவனேஸ்வரி சபாபதிநாதன்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சித்தன் கேணியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சபாபதிநாதன் நேற்று (29.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சபாபதிநாதனின் (நிலஅளவையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணமுத்து நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம்-கயிலாயநாயகி தம்பதியரின்அன்பு மருமகளும் கலாவதி (ஆசிரியை, சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), சாந்தி (பிரான்ஸ்), சிவநாதன் (Computer Point ) ஆகியோரின் அன்புத் தாயாரும் வரதராஜா (p.s. சேவிஸ் ஸ்ரேசன்), சுரேந்திரன் (பிரான்ஸ்), சாயினி ஆகியோரின் மாமியும் அகிலா, கபிலன், அரவிந், விதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற செல்வராசா, தர்மலிங்கம் மகேஸ்வரி, செல்லையா சரஸ்வதி , இராசதுரை, சிவசுப்பிரமணியம் பாமா தேவி, இராஜரட்ணம் ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (கயிலயங்கிரி - சித்தன்கேணி) இன்று (30.10.2005)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கயிலயங்கிரி,
சித்தன்கேணி.

(42184)
(18-17-45)

தகவல்:
ச.சிவநாதன் (மகன்),
கா.வரதராஜா (மருமகன்).

# புலிகள் பகுதியில் பேச்சு நடத்தக்கூடாது ஹெலஉறுமய பிரமுகர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.30

விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுகள் வெளியாரின் பிரசன்னமின்றி புலிகளின் வன்னிப் பிரதேசத்துக்கு வெளியே நடத்தப்படவேண்டும்.

வன்னியில் பேச்சுக்கள் நடத்தப்படுமானால் பொலீஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவுக்கு நேர்ந்த கதியே பேச்சில் பங்குபற்றுகின்ற அரச பிரதிநிதிகளுக்கும் ஏற்படும்.

- இப்படிக் கூறுகின்றார் ஜாதிக ஹெல உறுமயவின் பொருளாளரும் முன்னாள் பொலீஸ் மா அதிபருமான எம்.கொட்டகதெனிய.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சமாதானச் சூழல் ஏற்பட்டால் தான் அபிவிருத்தியை நோக்கி நகரமுடியும். வெளிநாட்டு முதலீடுகள் குவிய வாய்ப்பு ஏற்படும்.

சமாதானத்தை உருவாக்க விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படவேண்டும். அந்தப் பேச்சுக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியில் நடத்தப்படவேண்டும். வன்னியில் பேச்சுகள் நடந்தால் அப்பேச்சுகளில் பங்குபற்றச் செல்பவர்களுக்கு சாள்ஸ் விஜேவர்த்தனவுக்கு நேர்ந்த கதி ஏற்பட்டுவிடும்.

கடந்த காலங்களில் சிங்களத் தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படாமல் போயின. சிங்கள மக்களின் கருத்து அறியப்படாமல் அந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதால் அவை தோல்வியில் முடிந்தன.

தற்சமயம் சிங்கள மக்களின் கருத்து அறிந்து அதன் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய - ஆகக்கூடிய - தீர்வு குறித்து முடிவுசெய்யவேண்டும். அந்தத் தீர்வுத் திட்டம் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும். அதை அவர்கள் ஏற்கச் செய்வதன் மூலம் நிரந்தர சமாதான சூழலை தக்க வைக்கலாம்.

படையினர் சமாதானத்தை விரும்புகின்றனர். புலிகள் சமாதானத்தை விரும்பாவிட்டால் அவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும் - என்றார் அவர். (ஐ-3)

# சிப்பாயைக் கைதுசெய்ய அனுமதி


கொழும்பு,ஒக்.30

புத்தூர் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதத்திற்குப் படையினர் எவராவது காரணமாக இருந்திருப்பின் அவரைக் கைதுசெய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதானகே இவ்வாறு தெரிவித்தார்.

புத்தூர்ப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட பகுதியில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருந்தால் அதில் தொடர்புபட்ட படைச் சிப்பாயைக் கைது செய்வதற்கு பொலீஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ஐ-12)



நூலக விழிப்புணர்வு நிறுவனம் முதல் தடவையாக 'நூலுக்கோர் மாலை' என்ற நிகழ்ச்சியை நேற்றுப் பிற்பகல் யாழ். பொது நூலகத்தில் நடத்தியது.

யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா)

## புத்தூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்றம் நிலவியபோதிலும் வெடிக்காத குண்டு ஒன்றினை இராணுவத்தினர் வயல் வெளியில் வைத்து வெடிக்க வைத்ததால் ஏற்பட்ட சத்தம் அது என்பதை அறிந்து மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினர்.

புத்தூர் - மட்டுவில் வீதியில் வழமை போல போக்குவரத்துகள் நடைபெற்றன. படைமுகாமிற்கு அண்மையில் உள்ள வியாபார நிலையங்களைத் திறக்குமாறும் மக்களை வீடுகளுக்கு திரும்புமாறும் படைத் தரப்பினர் கேட்டுக்கொண்டபோதிலும் வியாபார நிலையங்கள் திறக்கப்படவில்லை.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலியான தர்மராசா நிரோஜனின் (வயது 20) சடலம் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து புத்தூர் கிழக்கில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டது. (ஐ-11)

## மீனவர் கரை திரும்பவில்லை

முல்லைத்தீவு,ஒக்.30

கடந்த 27ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் இதுவரை திரும்பவில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

அவரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் இவர் தொடர்பாகத் தகவல் கிடைத்தால் 021 2228942 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-12)

## புதுடில்லியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பல நகரங்களில் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று அநாமதேய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதால் எங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

டில்லி மாநில முதல்வர் மற்றும் சோனியா காந்தி ஆகியோர் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

அடுத்து எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயும் அவசர கூட்டம் நேற்றிரவு உள்துறை அமைச்சில் இடம்பெற்றது. (ஐ-12)

## புத்தூர் சூட்டுச் சம்பவத்துக்காக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

அப்பாவிப் பொது மக்கள் தாக்கப்பட்டு ஒருவர் மரணமடைந்ததற்கும் பலர் காயமடைந்ததையிட்டும் வர்த்தக சமூகத்தின் எதிர்ப்பை தெரிவிக்குமுகமாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தகர்களும் தமது வர்த்தக ஸ்தாபனங்களில் கறுப்புக் கொடியை பறக்கவிட்டு அகிம்சை வழியிலும் அமைதி வழியிலும் வர்த்தக சமூகத்தின் அனுதாபத்தையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கும் படி யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் கேட்டுக்கொள்கின்றது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை -

சகல தனியார் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் இன்று கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறும் சோக கீதங்களை இசைக்க விடுமாறும் தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் கேட்டிருக்கின்றது.

புத்தூர் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் அறிக்கைகளை பல அமைப்புகள் நேற்று விடுத்துள்ளன.

இலங்கை உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், கோப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆகியனவும் கண்டன அறிக்கைகளை விடுத்திருக்கின்றன. (ஐ-12-7-190)

## ஆந்திரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடம்புரண்டன. இவற்றில் ஐந்து பெட்டி கள் ஆற்றினுள் வீழ்ந்தன.

ஆற்றினுள் வீழ்ந்த ஐந்து பெட்டிகளுள் 250 இற்கும் மேற்பட்ட பயணிகள் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

மீட்புப் பணிகளில் இராணுவத்தினரும் பொலீஸாரும் ஈடுபட்டுள்ளனர். ஹெலிகொப்டர்களும் படகுகளும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ஐ-12)

## திருநெல்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இருவரும் பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டனர் மேலதிக விசாரணைக்காக இருவரையும் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்செய்த பொலீஸார் அவர்களை விளக்கமறியலில் வைக்கும் படி கோரினர்.

எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ-3)

## றக்கா வீதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்திலிருந்து வந்த பெரும் எண்ணிக்கையான கலகமடக்கும் பொலீஸார் காவலரண் அமைந்துள்ள பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.நகர படை அதிகாரிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர். (ஐ-7)

## மரண அறிவித்தல்

### நன்னித்தம்பி தம்பு (சிறுப்பிட்டி)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவிலில் வசித்துவந்தவருமாகிய நன்னித்தம்பி தம்பு நேற்று(29.10.2005) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் பருவதத்தின் அன்புக் கணவரும் நடராஜா(ஜேர்மனி), தியாகராஜா (சுவிஸ்), இந்திரன்(சுவிஸ்), செல்வராசா(சுவிஸ்), பரஞ்சோதிராஜா (சுவிஸ்),சின்னராஜா (மக்கள் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
தம்பு சின்னராஜா
(மகன்-மக்கள் வங்கி, சுன்னாகம்)

தாவடி வடக்கு,
கொக்குவில். (சி-46002) (18-17-12)

மீண்டும்
யாழ். மண்ணில்
ENGLISH
விமல்ராஜ்
NEW SCiENCE CENTRE
யாழ்நகர். (42156)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் தளயசிங்கம்

*(பருத்தித்துறை, தபாற்கந்தோர் ஓய்வுபெற்ற ஊழியர்)*

பருத்தித்துறை, 2 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த நா.தளயசிங்கம் நேற்று (29.10.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலஷ்மியின் அன்புக் கணவரும் கயிலாசநாதன், பவளராணி, ஜீவராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாவதியின் (நோர்வே) மாமனாரும் கயிலைவாசன், கயிலைச்செல்வன், கயிலைராசன், கயிலைச்செல்வி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2005)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று,பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.துரைரத்தினம்
(மைத்துனர்).

*2 ஆம் குறுக்குத் தெரு,*
*பருத்தித்துறை.* (சி-46003) (18-17-12)

### கதிர்காமு நடராசா (ஓய்வுபெற்ற அதிபர்)

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு நடராசா நேற்று (29.10.2005) சனிக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

*'கயிலை'*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (சி-46004) (18-17-12)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
30.10.2005

# தோற்பதற்காகவே வேட்பாளராக்கப்பட்டாரா?

ஸ்ரீ.ல.சு.கட்சி பண்டாரநாயக்கா குடும்பத்தின் கட்சி. அந்தக் கட்சியின் உரிமை பண்டாரநாயக்கா குடும்பத்தையே சேரும். பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநயக்கா காலத்தில் அந்தக் கட்சி அந்தக் குடும்பத்தின் சொத்தாக மாறவில்லை. மாறாக அம்மையார் சிறிமா காலத்திலேயே அக்கட்சி குடும்பச் சொத்தானது. ஐ.தே.கட்சியைத் தவிர ஆட்சி அதிகாரத்திற்கு வரக்கூடிய ஒரேயொரு கட்சி ஸ்ரீ.ல.சு.கட்சியே. தங்கள் குடும்பத்தைச் சேராத ஒருவர் தங்கள் கட்சி சார்பில் போட்டியிட்டு நாட்டின் தலைவராக வருவது அந்தக் குடும்பத்தினருக்கு விருப்பமில்லை. அப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டால் தாங்கள் அரச அந்தஸ்தை இழக்க நேரிடும் என்பதையும் கட்சியில் தமக்குள்ள உரிமை பறிபோகும் என்பதையும் அந்தக் குடும்பத்தினர் அறிவர்.



மஹிந்த ராஜபக்ஷவை தனது கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகச் சந்திரிகா அறிவித்ததற்குக் காரணம் இருந்தது. மஹிந்த நாட்டை ஆள்வதைக் காண்பது ஜனாதிபதியின் விருப்பமல்ல. இருப்பினும், அந்த வேளையில் மஹிந்தவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பதைவிட ஜனாதிபதிக்கு வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலைமை இருந்தது. மஹிந்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்ட சம்பவத்தை சந்திரிகா தனது சொந்தவிருப்பத்துடன் எடுத்த முடிவு என்பதை விட அதை மஹிந்தவின் ஆற்றலுக்குக் கிடைத்த பரிசு எனக் கூறினால் அது மிகையாகாது. மஹிந்தவிற்குப் பதிலாக சகோதரர் அனுராவை முன்நிலைக்குக் கொண்டு வரமுடியாத நிலைமை. அதேநேரம், ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க அந்தக் குடும்பத்தில் வேறு எவரும் இல்லாத நிலைமை. அவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மஹிந்தவுக்கு இடமளித்து - தேர்தலில் அவரை தோல்வியுறச் செய்து - கட்சியின் உரிமையைத் தொடர்ந்து பாதுகாப்பதே ஜனாதிபதியின் நோக்கமாக இருந்தது. மஹிந்தவுக்கு வெற்றி வாய்ப்புக்கள் உள்ளன எனத் தோன்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியும் அவரது குடும்ப உறுப்பினர்களும் குழப்பத்தில் மூழ்கினர். மஹிந்தவின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் அதி உச்ச அளவில் பயன்படுத்தினர். ஜனாதிபதி வேட்பாளராகத் தனது பெயர் அறிவிக்கப்படும் வரை மஹிந்த மிகத் திறமையுடன் செயற்பட்டார் என்றே கூறவேண்டும். ஆனால், அந்த வேளைக்குப் பின்னர் அவர் மேற்கொண்ட முடிவுகளில் தேவையான அளவிற்கு அவர் தனது புத்தியைப் பயன்படுத்தினார் எனக் கூறமுடியாதுள்ளது.

இந்தச் சிக்கலான வேளையில் மஹிந்த தனது ஆதர்ஷ புருஷராக ஆர்.பிரேமதாசவைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். பிரேமதாசாவின் பெயர் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் தனது கட்சியை (ஐ.தே.க) வழி நடத்தும் அதிகாரங்களையும் அவர் பெற்றுக்கொண்டார். அதாவது, ஐ.தே.கட்சியின் தலைமையை அவர் ஏற்றார். தனக்கு இடைஞ்சல்களை உருவாக்காமல் ஒதுங்கியிருக்குமாறு அவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால், மஹிந்தவின் அணுகுமுறைகள் வேறுபட்டவையாக உள்ளன. ஜனாதிபதி சந்திரிகாவை மகிழ்வித்து - அவரையே கட்சித் தலைவியாகத் தொடர வழிவிட்டு - முடிந்தால் சந்திரிகாவின் ஒத்துழைப்பைப் பெற்று - ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறு வதே மஹிந்தவின் நோக்கமாகும். தற்போது தான் ஜனாதிபதி வேட்பாளர் என்பதால் கட்சியை வழிநடத்தும் அதிகாரம் தனக்குத் தேவைப்படுவதாகவும் கட்சியின் தலைமைப் பதவியைத் தன்னிடம் ஒப்படைத்துவிட்டு - ஒதுங்கி - ஆலோசகராக மாத்திரம் பணியாற்றுமாறும் மஹிந்த சந்திரிகாவிடம் கேட்பாரானால், அது சந்திரிகாவுக்குப் பல சிக்கல்களை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. கட்சியில் தலைமை இல்லாத நிலையில் ஜனாதிபதி வேட்பாளராகத் தான் நியமிக்கப்பட்டதில் அர்த்தமில்லை என மஹிந்த தெரிவித்திருந்தால் அந்தக் கோரிக்கையிலுள்ள நியாயத்தை ஏற்று கட்சி உறுப்பினர்களின் உள்ளங்களை வெல்ல மஹிந்தவுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

ஆனால், ஜனாதிபதி கட்சிப் பொதுக் கூட்டத்தில் எதுவித வாத விவாதங்களுக்கு இடமளிக்காமல் யாரும் எதிர்பாராத வகையில் கட்சியின் தலைமையைத் தக்கவைத்துக் கொண்டார். இதன் பின்னரே மஹிந்த விழித்துக் கொண்டார். கட்சித் தலைமையை எவ்விதத்திலும் தனதாக்கிக் கொள்ளும் ஆற்றல் தற்போது மஹிந்தவுக்கு இல்லை.

ஜனாதிபதியால் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களை ஜீரணிப்பதைத் தவிர பதிலடி கொடுக்கும் ஆற்றல் தற்போது மஹிந்தவுக்கு இல்லை.

கட்சியின் மூக்கணாங்கயிறு தற்போது சந்திரிகாவின் கையிலேயே உள்ளது. இதனால் மஹிந்த சார்பில் குரல் கொடுக்க கட்சி உறுப்பினர் எவரும் முன்வரவில்லை. இதற்குக் காரணமும் உள்ளது. ஜனாதிபதியை எதிர்த்தால் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜனாதிபதி தங்களை வேட்பாளராக நியமிக்காமல் விடக்கூடும் என்ற அச்சமே காரணமாகும். வெகுவிரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்பதை அவர்கள் நன்கு அறிவர். அவ்வாறு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறும்போது அவர்களை வேட்பாளராக நியமிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது மஹிந்த அல்ல; ஜனாதிபதியே ஆவார்.

மஹிந்த வெற்றிபெறுவதைக் காணச் சகிக்க முடியாத நிலையில் ஜனாதிபதி உள்ளார். எவ்வாறாயினும் தேர்தலில் மஹிந்த வெற்றிபெற்றால் அதுவே தனது குடும்ப அரசியலின் அஸ்தமனம் என்பதை அவர் அறிவார். அது போலவே தனது குடும்பத்தின் பெறுமதிமிக்க சொத்தான ஸ்ரீ.ல.சு.கட்சி தங்கள் குடும்பத்திலிருந்து பறிபோகும் என்பதையும் அவர் அறிவார்.

எனவே, என்ன விலைகொடுத்தாவது மஹிந்தவைத் தோற்கடிப்பதற்காக அதிஉச்ச சக்தியைப் பயன்படுத்தும் நிலைமைக்கு ஜனாதிபதி தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது.



அனுபவமிக்க நபர் என்ற வகையில் தான் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும்போது கட்சியின் உரிமையாளர்களால் விடுக்கப்படக் கூடிய சவால்கள் குறித்து நேரகாலத்துடன் புரிந்துகொண்டு அச்சவால்களை வெற்றிகொள்ளும் தந்திரோபாயங்களை மஹிந்த தயார்படுத்தி வைத்திருந்திருக்க வேண்டும். சி.பி.டி. சில்வா மற்றும் ஹெக்டக் கொப்பேகடுவ ஆகிய இருவருக்கும் ஏற்பட்ட துன்பகரமான அனுபவங்களை மஹிந்த புரிந்திருக்க வேண்டும்.

தன் மீது குற்றங் காண்பதற்கான வாய்ப்பை - துருப்பை மஹிந்தவே ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளார். ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய ஆகியனவற்றின் தீவிரமான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாமல் பதிலாக அந்தக் கட்சிகளின் ஆதரவைப் புத்திசாதுரியமாகப் பெற்றிருக்க வேண்டும். ''நான் வெற்றியடைவதே உங்கள் நோக்கம் எனில் - எனது வெற்றியை நீங்கள் காணவிரும்புகிறீர்கள் எனில் - தேவையற்ற நிபந்தனைகளை முன் வைக்காது எனக்கு ஒத்துழைப்பை வழங்குங்கள்'' என மஹிந்த அக்கட்சிகளிடம் கோரியிருந்தால் என்ன நடந்திருக்கும். தங்களது சொந்தக் கால்களில் நிற்கமுடியாத நிலையிலுள்ள அந்தக் கட்சிகளுக்கு மஹிந்தவை ஆதரிப்பதைவிட வேறு மாற்று வழியே இல்லை. மஹிந்தவை எதிர்க்கும் ஆற்றலும் அக்கட்சிகளுக்கு இல்லை.

மறுபுறத்தில் மஹிந்தவுக்கு சிங்கள பௌத்தர்களின் ஆதரவு இருந்தது. இந்த ஆதரவுக்காக மஹிந்த யாரையும் கெஞ்சத் தேவையில்லை. இருப்பினும், புத்திசாதுரியமற்ற நடவடிக்கைகளால் ஜனாதிபதியால் விடுக்கப்படும் என எதிர்பார்க்கும் சவால்களை எதிர்கொள்ள ஜே.வி.பியின் மடியில விழ நேர்ந்துள்ளது.

ஜனாதிபதியின் போராட்டமானது (நோக்கமானது) தங்கள் சொத்தின் (ஸ்ரீ.ல.சு.கட்சி) உரிமையைப் பாதுகாக்கும் அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டதாயினும் மஹிந்த ராஜபக்ஷ அனுசரித்த தவறான வழிமுறைகள் கட்சியின் கொள்கைகளுக்கு முரணானவை என்ற தோற்றத்தை உருவாக்க சந்திரிகாவுக்கு வாய்ப்பாக அமைந்தது.

மஹிந்த விடயத்தில் ஜனாதிபதியும் சகோதரர் அனுராவும் அனுசரித்த வழிமுறைகள் போற்றத்தக்கதல்ல. ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் நிலையில் மஹிந்தவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்து - கட்சித் தலைமையையும் அவரிடம் ஒப்படைத்து - எதுவித இடையூறுகளுமின்றித் தேர்தலை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பளிப்பதே போற்றத்தக்கதாக அமைந்திருக்கும்.

மஹிந்த ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய அல்லது வேறு அமைப்புகளுடன் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கட்சிக் கொள்கைகளுக்கு முரணாக அமையுமாயின் மஹிந்தவைத் தனியே அழைத்து நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதே சிறந்த செயலாக அமைந்திருக்கும்.

ஆனால், ஜனாதிபதி தற்போது அனுசரித்துவரும் நடைமுறைகள் அவரது கட்சி வேட்பாளரின் வெற்றிக்கானவையாக அமையவில்லை. பதிலாக எதிர்க்கட்சி வேட்பாளரான ரணிலின் வெற்றிக்கானவையாகவே அமைந்துள்ளன. ரணிலுக்குக் கிடைக்கும் வெற்றியானது தனது குடும்பத்தின் - கட்சியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அமையும் எனச் சந்திரிகா நினைக்கிறார். நாட்டின் தலைமைப் பதவி ரணிலின் கைகளுக்குச் சென்றால் இன்னும் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளில் அந்தப் பதவி மீண்டும் தனது குடும்பத்தவர் ஒருவருக்குக் கிடைக்கும் எனச் சந்திரிகா எதிர்பார்க்கிறார்.

தான் நாட்டின் தலைவி என்ற அந்தஸ்தை இழந்தாலும் குறைந்தது எதிர்க்கட்சித் தலைவி என்ற பதவி கிடைக்கும் என்பதை சந்திரிகா அறிவார். ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்தால் மீண்டும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தன்னை நாடி வந்து " அம்மணி எங்களைக் காப்பாற்றுங்கள்'' என வேண்டுகோள் விடுப்பர் என்பதையும் சந்திரிகா அறிவார். சந்திரிகாவின் இவ்வாறான எண்ணங்களைத் தோற்கடிப்பது இலகுவான விடயமல்ல. இருப்பினும் என்றோ ஒரு நாள் பண்டாரநாயக்கா குடும்பத்தின் ஆதிக்கத்திலிருந்து ஸ்ரீ.ல.சு.கட்சி விடுதலை பெறத்தான்போகிறது.

*சிங்களமூலம் : ராவய*
தமிழில்: கஜனி

# சாதாரண பிரஜையாக வாழத் துடிக்கும் ஜப்பானின் 'மிஸ் நெவர்மைன்ட்'!



இன்று ஜப்பானில் ஜனநாயக ஆட்சி நடைமுறை வழக்கில் இருந்து வரும் நிலையிலும், நாட்டின் பாரம்பரியத்தின் சின்னம் எனக் கருதத்தக்க அரச பரம்பரைக்கு உரிய கௌரவமளித்து, முன்னிலையில் வைத்து போற்றி வருவதை ஜப்பானியர்கள் பெருமையாகக் கருதுகின்றனர். ஆனால், ஜப்பானிய ராஜ பரம்பரையோ, தமக்குரிய பாரம்பரிய சம்பிரதாய வழமைகளை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதினின்றும் தளர்த்தி தாமும் நாட்டின் சாதாரண பிரஜைகளே என நிலைநிறுத்தும் வகையில் செயற்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

மன்னர் பரம்பரை வழிவந்த தற்போதைய ஜப்பானியச். சக்கரவர்த்தி அகிஹிடோ, தமது பட்டத்துராணி மைசிகோவுடனும் பிள்ளைகளுடனும் தமக்கென ஒதுக்கப்பட்ட வாசஸ்தலத்தில் வாழ்ந்து வருகிறார். ஜப்பானிய அரசும் பொது மக்களும் இந்த ராஜபரம்பரையினருக்கு உரிய மதிப்பும் கௌரவமும் வழங்கத் தவறுவதில்லை.

அண்மைக் காலமாக நாட்டின் பாரம்பரிய சம்பிரதாய நடைமுறைகள், வழமைகளிலிருந்து விடுபட்டு தாமும் நாட்டின் சாதாரண பிரஜைகளே என்ற விதத்தில் வாழ்வதற்கு இந்த ராஜ பரம்பரையினர் அக்கறை காட்டி வருவதாகத் தோன்றுகிறது.

அண்மையில் இந்த ஜப்பானிய ராஜ பரம்பரையினர் மேற்கொண்டதொரு தீர்மானம் ஜப்பானியப் பொதுமக்கள் மத்தியில் அதிகம் பேசப்படும் விடயமாக ஆகியுள்ளது.

ஜப்பானியச் சக்கரவர்த்தி தம்பதியரின் மூன்று பிள்ளைகளில் இளவரசி சயாகோ இளையவர் என்பது மட்டுமன்றி ஒரேயொரு மகளுமாவார். தற்போது 36 வயதடையும் இளவரசி 'சயாகோ' எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதியன்று 'யொஷிகி குறோடா என்ற பெயர் கொண்ட சாதாரண' அரச ஊழியரொருவரைத் திருமணம் செய்யவிருப்பதே இன்று ஜப்பானியப் பொது மக்களின் நாளாந்தப் பேச்சுகளில் இடம்பெறும் முக்கிய விடயமாக அமைந்துள்ளது.

இதன் மூலம் இளவரசி சயாகோ தமக்குரிய அரச குடும்பக் கௌரவ வழமையைக் கைவிட்டு தாமும் ஜப்பான் நாட்டின் ஒரு சாதாரண பிரஜையே என்ற அந்தஸ்து நிலையை நிலை நிறுத்தவுள்ளார்.

சயாகோ தமது இளம் வயது முதலே மிகத் திறமையும், துடிப்பும் துணிச்சலும் வாய்ந்த சிறுமியாகக் காணப்பட்டார் என்று அவரது பெற்றோர் தெரிவிக்கின்றனர். தனது மகள் குறித்துப் பெருமையுடன் நினைவு கூரும் சக்கரவர்த்தினி மைசிகோ இவ்வாறு குறிப்பிடுகின்றார். எனது மகள் சயாகோ வெற்றியோ தோல்வியோ எதைப்பற்றியும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. செய்த தவறொன்றுக்காக நான் தடுமாற்றம் அடையும் வேளையிலும் சரி, எதிர்பாராத சம்பவங்களை எதிர்கொள்ள நேரும் வேளையில் நான் பதற்றமடையும் போதிலும் சரி, எதைப்பற்றியும் பெரிதாக அலட்டிக் கொள்ளக் கூடாது என எனது மகள் எனக்கு ஆறுதல் கூறி அமைதிப்படுத்திய சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன.

இத்தகைய பிரியமான ஆறுதல் வார்த்தைகளை மட்டுமன்றி, தயவான அந்த வார்த்தைகளால் மன ஆறுதலடையும் சந்தர்ப்பமும் இனிமேல் கிட்டப் போவதில்லை.

எதைப் பற்றியும் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டாம் என முக்கிய தருணங்களில் எனது மகள் கூறும் கனிவான ஆறுதல் வார்த்தைகளை இரை மீட்டும் வாய்ப்பே மி[illegible]சப் போகிறது. எனது மகள் அடிக்கடி அவ்விதம் ஆறுதல் [illegible]யதால் நாம் பல காலமாக அவ[illegible] 'மிஸ் நெவர் மைன்ட்' (Miss never mind) என்று செல்லப் பெயரிட்டே அழைத்து வந்தோம்.

சக்கரவர்த்தினி மிசிகோ தனது கணவரை 'ரென்னிஸ்' விளையாட்டுத் திடலொன்றிலேயே முதன்முதலில் சந்திக்க நேர்ந்தது. பட்டத்துக்குரிய ஜப்பானிய சக்கரவர்த்தியொருவரை சாமானிய ஜப்பானியப் பெண்மணியொருத்தி மணம் செய்ய நேர்ந்த முதலாவது சந்தர்ப்பமும் அதுவாக அமைந்தது. அதன் பலனாக சக்கரவர்த்தினி மிசிகோ மன அழுத்தத்தால் வருந்த வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன.

அரண்மனை ஊழியர்களின் அதிகப் பிரசங்கித் தனத்தாலும் தனது மாமியாரின் அலட்சியப் போக்கினாலும் மிசிகோ தனது வாழ்க்கையில் மனத் தளர்ச்சியின் விளிம்புக்கே செல்லநேர்ந்த சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

ஆயினும், இந்த அரச தம்பதிகள் நடைமுறைச் சம்பிரதாயங்களைத் தகர்த்தெறிந்து தமது மூன்று பிள்ளைகளையும் வாழ்க்கையில் உயர்கல்வி பெற்று உயர வைத்துள்ளனர்.

அரச குடும்பத்தினரின் சுற்றுலாப் பயணம் போன்ற சாதாரண குடும்ப நடவடிக்கைகளைப் படமாக்கித் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கு அனுமதித்ததன் மூலம் அரச குடும்பத்துக்குரிய நடைமுறை வழமைகளை இந்த அரச தம்பதியர் மாற்றியமைத்தனர்.

ரோக்கியோ ஹோட்டலில் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி இடம் பெறவுள்ள தமது மகளின் திருமண நிகழ்வில் கலந்துகொள்ள இருப்பதன் மூலம் அடுத்த மாதம் மீண்டும் ஒரு தடவை தாம் கடைப்பிடித்து வந்த வழமைகளில் மாற்றமொன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளனர் இந்த அரச தம்பதியினர்.

க[illegible] பல ஆண்டுகளாக, தமது குடும்பத்தின் பெண் உறுப்பினர்களின் திருமண நிகழ்வுகளில் கலந்து கொள்வதை இந்த அரச தம்பதியர் தவிர்த்தே வந்துள்ளனர். தாம் இனிமேல் மேற்கொண்டும் தமது அரச குடும்பத்துக்குரிய தகுதியைக் கட்டிக் காக்கப் போவதில்லை என்பதை வெளிப்படுத்தும் வகையிலான முடிவே இதுவாகும்.

தனது மகள் சாகியோவின் திருமண நிகழ்வின்போது தான் உணர்ச்சி வசப்படக் கூடுமெனத் தெரிவித்துள்ள சக்கரவர்த்தினி மைசிகோ திருமண நாளன்று காலை எனது மனதிலெழும் எண்ணங்களை சாகியோ வுக்குக் கூறிவிட விரும்புகிறேன். எனது திருமணத்தின் போது எனது தாயாருக்கு ஏற்பட்டமை போன்று உணர்வு மேலீட்டால் எதுவுமே பேச இயலாத நிலை கூட எனக்கு ஏற்படக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கால மாற்றத்துக்கமைய உலகின் அரச குடும்பங்கள் வழிவழியாகக் கட்டிக்காத்துக் கடைப்பிடித்து வந்த நடைமுறை வழமைகளைப் படிப்படியாகத் தளர்த்தி தாமும் உலகில் சாதாரண மனிதப் பிறவிகளே என்பதை வெளிப்படுத்தும் வகையில் செயற்பட முயல்வதை இன்று எம்மால் கண்கூடாகக் கண்டுணர முடிகிறது.

வசந்தாமணாளன்

# தமிழர்களை உலகெங்கும் இரண்டாம் தரம் பிரஜைகளாக்க கூட்டு முயற்சியா...!

ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் விடுதலைப் புலிகள் மீது ஒரு பக்கச்சார்பாக பயணத் தடையை ஏற்படுத்திஉள்ளது. இலங்கை அரசினால் இராணுவ அடக்குமுறைக்குள் தமிழர் அகப்பட்ட நிலையில், இப்பயணத்தடை உலகத் தமிழர் மீது பாரிய அச்சத்தினை கொண்டு வந்துள்ளது. இந்திய இராணுவம் அமைதிப்படை என்று வந்து, மக்களையும் புலிகளையும் வேறுபடுத்த முடியாது. யாழ்.வைத்தியசாலையிலேயே வைத்தியர்கள், தாதியர்கள், நோயாளிகள் என நூற்றுக் கணக்கானோரை தமிழ் மண்ணில் அழித்தபோது ஐரோப்பிய ஒன்றிய வெள்ளையர்களுக்கு தமிழர் வேறு, புலிகள் வேறு எனப் பாகுபடுத்த வாய்ப்பு இல்லை. எனவே, புலிகள் மீதான தடை என்பது தமிழர் மீதான ஒட்டுமொத்தத் தடையாகவே அமையும். எனவே, உலகத் தமிழர் ஒன்று திரண்டு இதனை எதிர்க்கவேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் மேற்கத்தேச மேலாதிக்கத்தினை உலகில் நிறுத்த[illegible]காக வெள்ளை இன ரீதியாக அமைக்கப்பட்ட அமைப்பு. ஹிட்லர் ஆயுதமுனையில் செய்ய முடியாமற் போனதை இன்று ஐரோப்பிய ஒன்றியம் செய்ய நினைக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடு வெள்ளை இனத்தவருக்கு ஜனநாயகமாகத் தெரியலாம். ஆனால், வளர்முக நாடுகளுக்கு இரட்சதப் பொருளாதார அடக்கு முறையின் சின்னமாகவே அமையும். அத்தகைய ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா போன்று வளர்முக நாடுகளின் ஆட்சியாளர்களுடன் கைகோர்த்து தமது ஆதிக்கத்தினை செலுத்த முனைகின்றது.

அண்மையில் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பயணத் தடையினை எதிர்வு கூறல் அடிப்படையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹிட்லரும் நாஜிகளும் எவ்வாறு யூத இனத்தை அழித்தனரோ அவ்வாறே தற்போதைய ஐரோப்பிய ஒன்றியமும் செய்ய முனைகிறதா என ஐயுற வைக்கிறது. ஆனால், அதன் வடிவம் நூற்றாண்டு வளர்ச்சியுடன் வேறுபட்டதாக இருக்கலாம். ஏனெனில், இந்த நாடுகளின் இராஜ தந்திரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் ஆக்கச் செயல்பாடுகளுக்கான வேலை இல்லை. அதனால், பொய்யையும் மெய்யாக்கும் வெற்றிட புனைதல் அவர்களிடம் காணப்படுகிறது. ஈராக் யுத்தத்தில் அவர்களிடம் பயங்கர ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி அழிவு செய்தனர். அவர்களது செயற்பாட்டில் அழித்தல் முதலிலும் ஆட்சி செய்தல் பிறகும் உள்ளது.

அந்த வகையில் இன அடக்குமுறை என்ற தொற்றுநோய் இலங்கை இராஜதந்திரிகளிடம் இருந்து ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகளுக்கு பரவிவிட்டது போல் உள்ளது.

இதனால், பயணத்தடை என்ற பெயரில் தமிழர்கள் கைது செய்யப்படலாம். சித்திரவதைக்கு உட்படலாம். மேலும் நாஜிகள் யூதரை எவ்வாறு நடத்தினரோ அவ்வாறே தமிழரை ஐரோப்பியர் நடத்த முனையலாம். எனவே, இதனைத் தடுக்க எமது புத்திஜீவிகள் முன்வரல் வேண்டும். எமது வாழ்வுப்பிரச்சினைகள், எமது அடிப்படை உரிமைகள் மீறப்படல், இலங்கை அரசின் ஏமாற்றுத் தந்திரம் என்பவற்றை வெளிக்கொணரல் வேண்டும்.

அன்றேல் இலங்கை அரசும் மேற்குலக நாடுகளும் இணைந்து தமிழின அழிப்பை அழகிய ஜனநாயக சொற் பதங்களுடன் மேற்கொள்ளும். இதற்கு அடித்தளமிட்டாற்போல் எமது பிரதேசத்தில் பல கொலைகளைப் புரிந்த இராணுவ உயரதிகாரிகளே வெளிநாடுகளில் தூதர்களாகவும் கடமை புரிகின்றனர்.

எனவே, இன்று தமிழர்கள் இலங்கையில் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழ்வது போல் உலகெங்கும் அவ்வாறு வாழ வேண்டிய நிலைக்குப் போகாது விழிப்புணர்வுடன் இருத்தல் அவசியம்.

வரலாறு மீள்கின்றதா என எதிர்வு கொண்டு நகர்வுகளைத் தமிழினம் செய்தல் கடமையாகும். வருமுன் காத்தலே பாரிய அழிவில் இருந்து எமது இனத்தினைக் காப்பாற்றும்.

டாக்டர் சி.யமுனா நந்தா

# உங்கள் குழந்தை சாப்பிட மறுக்கிறதா?
## மனநலப் பாதிப்பே காரணம்



குழந்தை வளரும் பருவத்தில் உடல்நலமும் மனநலமும் பெற்றிருந்தால்தான் பிற்கால வாழ்க்கை மகிழ்ச்சியும் பயனும் நிறைந்ததாக இருக்கும். மாறாக, குழந்தைப் பருவத்தில் ஏதாவது சிக்கல் ஏற்படின் அது மனநலத்தை அப்பருவத்திலும் பிற்கால வாழ்க்கையிலும் வெகுவாகப் பாதிக்கிறது. இதைப் பெற்றோரும் மற்றோரும் அவர்களது அனுபவங்கள் வாயிலாக அறியலாம்.

இத்தகைய பாதிப்புகள் அன்றாடச் செயல் குறைபாடுகள், நடத்தைக் குறைபாடுகள், இசைவின்மைப் பழக்கங்கள் என்று கொண்டு செல்லும்.

உணவு உண்பதில் சில குழந்தையிடம் பிரச்சினை கள் ஏற்படுகின்றன. இவை இருவகைப்படும். அவை உண்ண மறுப்பது, அளவுக்கதிகமாக உண்பது.

உடல்நோய் ஏதுமில்லாமல் இருக்கும்போது குழந்தை உணவு உண்ண மறுத்தால் நிச்சயமாக மனம் சம்பந்தப்பட்ட காரணமாகத்தான் அது இருக்க முடியும்.

பெரும்பாலும் இதற்கு அடிப்படையானது பெற்றோர் உணவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் கொண்டுள்ள கோட்பாடுகளும் குழந்தைகளைக் கையாளும் முறைகளுமேயாகும். பசியின்மை என்று சொல்லுவதற்கும் உண்ண மறுப்பதற்கும் முக்கிய காரணங்கள் உள்ளன. அவை கவன ஈர்ப்பு, எதிர்ப்பு மனப்பான்மை, பகற்கனவு, பயம், பதற்றம், பெற்றோரின் மனோ பாவம் என்பவையாகும்.

கவன ஈர்ப்பு எஃ்டது பெற்றோரின் கவனத்தை உண்ண மறுப்பதன் மூலம் ஈர்க்க எண்ணுவது அல்லது இதன் மூலமாகப் பெற்றோரையும் மற்றோரையும் தன் வசப்படுத்த நினைப்பதேயாகும். உண்ண மறுப்பது மறைமுகமாகத் தனது எதிர்ப்பு மனப்பான்மையை காட்டுவதேயாகும். இரண்டு வயதில் இருந்து மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் இது மிகவும் சாதாரணம். இதனால்தான் இப்பருவம் எதிர்ப்புப் பருவம் எனக் கூறப்படுகிறது.

பகற்கனவு என்பது குழந்தை தனியாக அமர்ந்து கொண்டு ஏதாவது ஒன்றைப்பற்றி மிகப் பிரமாதமாகக் கற்பனையில் மூழ்குவதாகும். பயம், பதற்றம், கவலை அல்லது பெற்றோரின் மனோ பாவத்தைப் பொறுத்தும் குழந்தை உணவு உண்ண மறுக்கலாம். குழந்தையைக் கேலி செய்தல், அதிக அளவில் செல்லம் கொடுத்தல், எதற் கெடுத்தாலும் பயமுறுத்துதல், எதிர்ப்புத் தெரிவித்தல் போன்ற காரணங்களால் குழந்தைக்கும் பெற்றோருக்கும் அடிக்கடி சிறுசிறு சண்டை கள் உருவாகின் றன.

எவ்வளவுக்கெவ்வளவு மன இறுக்கமும் உணர்ச்சியும் மிகுந்தவர்களாகப் பெற்றோர்கள் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு குழந்தைகளின் எதிர்ப்பும் அதிகரிக்கின் றது. இத்தகைய குழந்தைகளைப் பெற் றோர்கள் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். உணவளிக்கும் போது குழந்தையை அடித்தோ, பயமுறுத்தியோ, அழவைத்தோ சாப்பிட வைக்கக் கூடாது. அதன் போக்கில் விட்டு சாப்பிட வைக்க வேண்டும்.

குழந்தைக்கு ஏதாவது மனக்கஷ்டமோ, பிரச்சி னைகளோ இருப்பின் அவைகளை அறிந்து மனநல மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை கேட்கவேண்டும்.

குழந்தைகள் விடயத்தில் நாம் அலட்சியமாகச் செயற்படக்கூடாது. ஏனெனில், குழந்தைப் பருவமே ஒரு மனித வாழ்வின் அடித்தளம் இதை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும்.

சம்யுக்தா



### இதயத்திலே...

நிலையற்ற வாழ்க்கை
ஓடத்திலே
நிலைதடுமாறும்
பயணங்கள்..
எத்தனை தடுப்புகள்?
எத்தனை ஏளனங்கள்?
அத்தனைக்கும் நடுவில்
ஒரு சிறு உதயம்!
கலைந்து போன
கனவெல்லாம்
கவிதை முத்துகளாய்
காகிதத்தில்
பிரசவிக்கின்றன.
ஏதேதோ நினைவுகள்..
எதிர்பாரா ஏமாற்றங்கள்
நெஞ்சை முட்டி
மோதிடும் ஏக்கங்கள்
யாருக்குப் புரியும்
இதன் தாக்கங்கள்?
சொல்ல எண்ணியும்
வாயில் வெளிவர
மறுத்திடும் வார்த்தைகள்
ஊமைமொழிகளாய்
உள்ளுக்குள்ளே
உறங்கிப்போன
உண்மைகள்
அழித்திடமுடியா
நினைவுத் தடங்களாய்
இன்னமும் இதயத்தில்
இருக்கும் காயங்கள்..
நொடிக்கு நொடி
துடிதுடிக்கும்
இதயத்தில் தான்
எத்தனை சொல்லமுடியாத
சோகங்கள்! அடுத்தடுத்துத்
தோல்விகள்.. அந்த
தோல்விக்குள்ளும்
ஒரு சில வெற்றிகள்
உதவிடும் உறவுகளுக்காய்
உதட்டினில் சிரிப்பு
ஊனமுற்ற மனதுக்காக
உள்ளுக்குள் அழுகை.
என்றுதான் தீருமோ?
என் இதயத்து வேதனை!

-யஸ்மினா-

### அர்த்தமுள்ள வாழ்விற்கு...

குடும்ப வாழ்க்கை பலருக்குத் தோல்வியாகி விடுவதற்கு அவர்களுடைய வாழ்க்கையில் அவர்களுக்கு ஏற்படும் சலிப்புத்தான் காரணம். ஆகையால், தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுவது அவசியம்.

# பொருளாதாரத்திலும் விடிவு வேண்டும்

உலகமெல்லாம் பெண்களின் உயர்ச்சி, பெண்களின் சமத்துவ வாழ்வு எனப் பேசிக் கொண்டிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான பெண் அமைப்புகள் தோன்றி பெண்களின் மகிழ்வான, சுதந்திரமான வாழ்வுக்காகப் போராடி வருகின்றன.

நமது இலங்கையில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் எமது தமிழ்ப் பெண்கள் படும் அவலநிலை சொல்லில் அடங்காதவை. நகரப் பகுதிப் பெண்கள் ஓரளவு தம்மை சமூகத்தில் நிலை நிறுத்தி விட்டார்கள். அதாவது கல்வி, தொழில் நிலையில் தம்மை வளர்த்துக் கொண்டு சமூகத்துடன் ஒத்தோட ஆரம்பித்திருக்கின்றார்கள்

ஆனால், கிராமங்களில் இன்றும் கூட முன்னேற முடியாது, முன்னேறத் துடித்துக் கொண்டிருக்கும் பெண்கள் பல ஆயிரம் பேர் உள்ளார்கள்.

குறிப்பாக, சமூகத்தாலும், குடும்பத்தாலும் அடக்கப்பட்டு இன்னும் தலை நிமிராது [வாழ்வில்] குட்டக்குட்டக் குனிபவர்களாகவே பெண்கள் உள்ளார்கள்.



அண்மையில் ஒரு பெண்கள் சந்திப்பில் சில பெண்களுடன் கதைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் ஓர் இளம் பெண் கூறினார். நாங்கள் சில பெண்களாச் சேர்ந்து எங்காவது செல்வதானால் பெரியவர்களுக்கு பொறுக்கமுடியாது. எம் காது படவே எம்மைத் திட்டுவார்கள். 'அடங்காப்பிடாரிகள், ஊர் மேயுதுகள், கால ஒடிச்சு வைக்கணும்' என்று பேசுவார்கள்.

''ஒரு நாள் இளம் பெண்களாக பத்துப்பேர் சேர்ந்து சிரமதானம் செய்தோம். அதைக் கூட'ப் பலர் கேலி செய்தனர். 'இதுகளுக்கேன் இந்த வேலை. பெடியன்கள் போல றோட்டில் திரியுதுகள்' என்றார்கள். நாங்களும் முன்னேறத்தான் விரும்புகிறோம். வெளிநாட்டுப் பெண்கள் போல உடை போடுவதிலல்ல. அவர்களைப் போல சுயமாக வாழ விரும்புகின்றோம்'' - என்றார்.

உண்மைதான். இவரைப்போல நிறையப்பெண்கள் தமது மனக்குமுறல்களை வெளிப்படுத்தினர்.

முன்னேற விரும்பும் பெண்களை முன்னேற்றுவதற்கு நம் சமூகத்தின் அமைப்புகள் முன்வருவதில்லை. சில பெண் அமைப்புகள் பெண்களை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆனாலும் இவை போதியளவாக இல்லை. இன்னும் இன்னும் பெண்களிடையே உட்புகவேண்டும்.

ஒரு சில அமைப்புகள் பெண்களுக்குத் தொழிற்பயிற்சியை வழங்குகின்றது. மிகமிக வரவேற்கத்தக்க விடயமே இது. தொழிற்பயிற்சியை வழங்கி சான்றிதழைக் கொடுத்து வீட்டிற்கு அனுப்புகின்றன. ஆனால், அதன் பின் அந்தப் பெண்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை அந்த அமைப்புகள் பார்க்கவேண்டும். நாம் வழங்கிய பயிற்சி அப் பெண்களிற்கு எந்த வகையில் பயன்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

ஒரு பெண்தையல் பழகுகின்றாள். பழகிய அந்த தையலை ஒரு தொழிலாக மேற்கொள்வதற்கு அவளிடம் பொருளாதாரம் இல்லை. ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்குச் சிறிதளவேனும் மூலதனம் வேண்டும். அந்த மூலதனம் இல்லாமல் பல பெண்கள் தாம் கற்ற பயிற்சியை மழுங்கடிக்கும் நிலையே இன்றுள்ளது.


பெண்களுக்குப் பயிற்சி வழங்குவதில் ஆர்வம் காட்டும் சில அமைப்புகள் அவர்கள் தொழிலைத் தொடங்குவதற்கு மூலதனம் வழங்குவதில் பெருமளவில் ஆர்வம் காட்டுவதில்லை.

ஒரு சில அமைப்புகள் மேற் குறிப்பிடப் பட்ட விடயத்திற்கு விதிவிலக் காகச் செயற்படுவது உண்மை என் பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே, ,இவ்வாறான அமைப்புகளிடம் நாம் கேட்பது பெண்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு நின்று விடக்கூடாது அவர்களின் பொருளாதா வாழ்வியலைக் காட்டியெழுப்புவதிலும் பங்கெடுக்கவேண்டும் என்பதே.

- தீபா

# சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

அண்மையில் ஒரு சஞ்சிகையில் வாசித்த சிறுகதை என் உள்ளத்தைத் தொட்டது. என்னை அதிகம் யோசிக்கவும் வைத்தது. உனது சிந்தனைக்காகவும் அக்கதையைச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன்.

ஒரு தாயும் அவளது மகனுமாகச் (சிறுவன்) சேர்ந்து சிறுதோட்டம் ஒன்றை வளர்த்து வருகின்றனர். மிகவும் கஸ்ரப்பட்டு உருவாக்கிய அத்தோட்டத்தில் காய்கனிகள் நிறைந்து காணப்பட்டன.

ஒரு நாள் காலை மகன் தோட்டத்திற்குத் தண்ணீர் ஊற்றச் சென்றான். தோட்டத்தில் காய்த்திருந்த பல காய்களை யாரோ களவாடியிருப்பதை அறிந்த அவனால் வேதனையைத் தாங்க முடியவில்லை. தாயிடம் சென்று அழுதான். தயார் அவனைச் சமாதானப்படுத்தினாள். தொடர்ந்து ஒருவாரமாக இவ்வாறு காய்கள் திருட்டுப் போயின.

ஒரு நாள் இரவு நல்ல மழை. காலையில் எழுந்து தோட்டத்திற்குச் சென்றான் மகன். அன்றும் காய்கள் திருட்டுப்போயிருந்தன. ஆனால், திருடரின் கால் தடம் மண்ணில் காணப்பட்டன. தாயாரையும் அழைத்துக் கொண்டு கால் தடத்தைப் பின்பற்றிச் சென்றான்.

அருகிலிருந்த வீட்டின் பின் வாசலில் அந்தக் காலடித் தடம் முடிந்தது. அங்கிருந்த குப்பைத் தொட்டியில் கரட் போன்ற காய்களின் இலைகளும் ஏனைய சில கழிவுப் பொருள்களும் காரியத்தைத் தெளிவுபடுத்தின.

மகனால் இதை பொறுக்கமுடியவில்லை. ஆனால், தாயார் அவனைச் சமாதானப் படுத்தி அழைத்து வந்தாள்.

அடுத்த நாள் தாயார் சில காய்களை எடுத்து அவற்றுடன் அக் காய்களை மிகுந்த சுவை யுடன் எவ்வாறு சமைப்பது என்ற குறிப்பும் எழுதி மகனிடம் அந்த வீட்டாரிடம் கொடுத்துவிட்டு வரும்படி அனுப்பி வைத்தார்.

அதனைப் பெற்றுக்கொண்ட அந்த வீட்டார் பெரும் அதிர்ச்சியுடன் வேதனையும் அடைந்தனர். அன்றிலிருந்து இவர்களின் வீட்டில் திருட்டுப்போவது நின்று விட்டது.

திருடர்களைத் தண்டிக்காது தானம் கொடுப்பதன் மூலம் திருத்தி விட்டாள் அந்தத்தாய்.

நாம் களைகளை ஒழிப்பதற்கு நல்ல பலன்தரக் கூடிய பயிர்களை நடவேண்டும். நமக்கெதிராக ஒருவர் தீங்கு செய்கின்றார் எனில், உடனேயே அவருடன் சண்டை போட்டுப் பிரிவதால் எந்தப் பலனும் இல்லை.

அவர் தானாகவே மனம் வருந்தித் திருந்தக்கூடிய சந்தர்ப்பதை நாம் அவருக்கு வழங்கவேண்டும். அந்த மனமாற்றமே உண்மையாது.

பிரியமுடன் சந்தியா

# டென்மார்க்கின் நகரங்கள் தோறும் அருங்காட்சியகங்கள் ஏராளம்

டென்மார்க்கின் அழகிய ஒரு நகரம் தான் எஸ்பெயா (Esbjerg ). கடற்கரை சார்ந்ததாக அழகுற அமைந்த இந்த நகரில் கடலை நோக்கியவாறு பிரமாண்டமான நான்கு ஆண்களின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை காண்போரின் மனதைக் கவரக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு சிலைகளும் அமர்ந்த நிலையில் உள்ளன. கடலில் மிகத் தொலைவில் நின்றாலும் இந்த நான்கு சிலைகளும் தெளிவாகத் தெரியக்கூடிய விதத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றைத் தாண்டி சற்றுத்தூரம் நகர்ந்து சென்றோம். நாம் எதிர்பார்த்து வந்த மீன்களின் காட்சிச்சாலை தென்பட்டது. ஆவலுடன் உள்ளே சென்றோம். நுளைவாயிலில் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி அனுமதிச் சீட்டைப்



15 அடி நீளமான திமிங்கிலத்தின் வன்கூடு

பெற்றுக்கொண்டு உள்ளே சென்றோம். உள்ளே சென்றதுதான் தாமதம் பிரமாண்டமான கண்ணாடித் தொட்டிகளில் பாரியளவான வண்ண மீன்கள் அணி அணியாய் வலம் வந்தன. ஒவ்வொரு தொட்டிகளுக்கும் வண்ண வண்ண ஒளிகள் பாய்ச்சப்பட்டிருந்தன. மீன்களின் அழகை அது மேலும் மெருகூட்டியது.

வழியில் ஒரு பிரமாண்டமான திமிங்கிலத்தின் வன்கூட்டை அவதானித்தோம். அதன் அருகே சென்றபோது அதன்மீது தடித்த கவரிங் செய்யப்பட்ட அட்டை ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது. அதில் ஆங்கில மொழியிலும் டெனிஸ்மொழியிலும் சில விவரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

1996ஆம் ஆண்டு டென்மார்க்கில் கரை ஒதுங்கிய திமிங்கிலத்தின் வன்கூடு அது. 30 தொன் எடையுள்ள அதன் நீளம் 15 அடி 60 அங்குலம் ஆகும். அதனைப் பார்த்த நாம் பிரமித்துப் போனோம்.

அங்கிருந்து நகர்ந்து கடற்சிங்கம் இருந்த இடத்திற்குச் சென்றோம். இரண்டு கடற் சிங்கங்கள் நீரிலே காணப்பட்டன. அவை சாகசம் புரிவதற்குத் தயாராக நின்றன. சற்றுநேரம் கழித்து கடற் சிங்கத்தின் சாகச நிகழ்வு ஆரம்பமானது. அவை நீரின் மேற்பரப்பில் வந்து எமக்கு வணக்கம் தெரிவிப்பது போல அசைந்து வலம் வந்தன.

ஒன்று வளையத்தை வாயில் வைத்திருக்க மற்றையது அதன் ஊடாகப் பாய்ந்தது. அத்துடன், பல தடவைகள் கரணம் அடித்தும் காண்பித்தன. மனிதர்களிடம் கூட இந்தளவிற்குத் திறமை இருக்குமோ என ஆச்சரியப்பட வைக்கும் அளவிற்கு அவை எம்மைக் கவர்ந்தன. இவற்றின் சாகச நிகழ்வுகளைப் பார்ப்பதற்குப் பெருமளவிலான வெளிநாட்டவர்கள் வந்திருந்தனர்.

பின்னர் அங்கிருந்து ஓர் ஒடுக்கமான பாதை வழியே சென்றோம். தொடர்ந்து உள்ளே சென்றதும் அங்கு கண்ணாடிகளால் ஆக்கப்பட்ட அறை ஒன்று காணப்பட்டது. அவற்றின் மேலால் சுறாமீன்கள் வலம் வந்தன. சில மீன்கள் வாயைப் பிளந்தபடி வந்தபோது அவை எம்மை விழுங்குவதற்கு வருவது போல இருந்தது. அவற்றைப் பார்த்தவாறே நகர்ந்தோம். கடற்சிங்கம் ஒன்றின் பிரமாண்டமான சிலை வைக்கப்பட்டிருந்தது. வேறோர் இடத்தில் ஆரம்பகாலத்தில் பயன்படுத்தப்பட்ட படகுகள் முதல் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கப்பல்கள் வரை படங்களுடன் அவை தொடர்பான விளக்கங்களும் அவை கட்டப்பட்ட ஆண்டுகளும் கணனியில் பதியப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

கப்பல் ஒன்றின் படத்தைத் தெரிவுசெய்தால் அதன்கீழ் அதுதொடர்பான விவரங்கள் பட்டியல் படுத்தப்பட்டிருக்கும். அவ்வாறே ஒவ்வொன்றையும் தெரிவு செய்வதன் மூலம் அவை பற்றிய விவரங்களைத் தெளிவாக அறிய முடிந்தது.

சிறுவர்கள் கூட இலகுவான முறையில் அறியக்கூடியவாறு இது அமைக்கப்பட்டிருந்தது. அனைத்து விடயங்களும் கணனி மயப்படுத்தப்பட்டிருந்தது. அவற்றின் மத்தியில் மாடு ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது. அது உண்மையான மாடு என அனைவரையும் எண்ண வைத்தது. அப்படி தத்ரூபமாக உருவாக்கியிருந்தனர். அத்துடன், அந்த இடத்தில் பண்ணையில் வேலைசெய்பவர்கள் போல் சில மனிதர்களையும் நிறுத்தியிருந்தனர். அவர்களும் நிஜமான வேலையாள்கள் போலவே காணப்பட்டனர். சிலர் அவர்களிடம் கதைகேட்டு ஏமாந்து



நூதனசாலையில் காட்சிப்படுத்தப் பட்டவற்றில் ஒரு பகுதி

போயினர். அவ்வாறு சில பொம்மைகள் ஆங்காங்கே காணப்படுவதால் மனிதர்கள் யார், பொம்மைகள் எது என்று வேறுபடுத்தி அறிய முடியவில்லை. தலையில் தட்டுடன் மூதாட்டி ஒருவர் அங்கு காணப்பட்டார். அவரின் அருகில் சென்றபோதுதான் தெரிந்தது அது ஒரு சிலை என்று. அந்த சிலைகளின் அருகில் நின்று படம் எடுத்துக் கொண்டோம்.

பின்பு அருகில் இருந்த படகு கட்டும் தொழிற்சாலைக்குச் சென்றோம். அங்குபெரும் எண்ணிக்கையான படகுகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தொழிலாளர்கள் பலர் கப்பல்கட்டும் முறைகளைப் படிப்படியாக விளக்கினர்.


பல படகுகள் சவாரிக்குத் தயாரான நிலையில் காணப்பட்டன. அதேவேளை, பழைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட படகுகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. சிறிய கப்பல்கள், சிறுவர்கள் விளையாடக்கூடிய அளவுகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. நூதனசாலை மூடப்படுவதற்கு 15 நிமிடங்களே இருந்தநிலையில் வேகமாக எல்லாவற்றையும் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் படகு செய்யும் இடத்திற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரியிடம் விடை பெற்றுக்கொண்டு, நூதனசாலையின் முகப்பிற்கு விரைந்தோம். அங்கு ஒரு விற்பனை நிலையம்



கடற்சிங்கத்தின் சாகசங்களை ரசிக்கும் மக்கள்...

காணப்பட்டது. அதனுள் அழகிய நூதனப் பொருள்கள் கண்ணைக் கவர்வனவாய் விற்பனைக்கு அடுக்கப்பட்டிருந்தன. அழகிய சிலைகள், மெழுகுப்பொம்மைகள், மீன்பொம்மைகள், சுறா, திமிங்கிலம் என பெரும் எண்ணிக்கையான பொருள்கள் அங்கு விற்பனைக்கு இருந்தன. நாம் அவற்றில் பொறிக்கப்பட்ட விலைகளைப் பார்த்துப் பிரமித்துப்போனோம். மிகச் சிறிய பொருள்கள் கூட இலங்கைப் பணத்திற்கு மிக அதிகமாகவே இருந்தன. நூதனசாலையைப் பார்த்த ஞாபகத்திற்காகச் சில

எஸ்பெயா கடற்கரையில் உள்ள பிரமாண்டமான சிலைகள்...!



பொருள்களை வாங்கினோம். நூதனசாலையில் கடமையாற்றுபவர்கள் எம்மை அணுகி டெனிஸ் மொழியில் நூதனசாலை தொடர்பான அபிப்பிராயங்களைக் கேட்டனர். நாம் அவற்றின்

டென்மார்க்கிலிருந்து
**பகீர்**

குறை,நிறைகளைச் சுட்டிக்காட்டினோம். அவர்கள் மகிழ்ந்தனர்.

பின்னர் அந்த நூதனசாலை தொடர்பான கையேடுகளை எமக்கு இலவசமாகத் தந்தனர். அவற்றையும் பெற்றுக்கொண்டு அவர்களிடம் இருந்து விடைபெற்றவர்களாய் நூதனசாலையில் இருந்து கார் நிறுத்தப்பட்ட இடத்திற்கு விரைந்தோம்.

சரி, அடுத்த தொடரில் டென்மார்க்கின் ஒதென்ஸ் (Odense) நகரில் உள்ள பிரபல எழுத்தாளர் எச்.சி. அன்டெர்சன்(H.C.Andersen) என்பவரின் வாழ்விடங்களையும் வரலாறையும் உள்ளடக்கிய அருங்காட்சியகம் பற்றிப் பார்ப்போம்.

(வளரும்)

---

# யாழ். பாணம்



இது நவீன தொழில்நுட்ப யுகம்.

இந்த நவீன தொழில்நுட்பத்தின் வேகம் மிகு முன்னேற்றத்தால் உலகம் குறுகிவிட்டதென்பது புத்திஜீவிகளின் முடிவு.

இது யதார்த்த உண்மையே.

மனித வாழ்க்கையின் சகல துறைகளிலும் நவீன தொழில்நுட்ப முன்னேற்றம் வியத்தகு மாற்றங்களை உருவாக்கி விட்டதை அனுபவபூர்வமாய் கண்டும் கேட்டும் உணர முடிகிறதே!

அணுவை ஆய்ந்தறிந்து அதன் பயன்பாட்டுச் சிறப்பை வெளிக்கொணர்ந்த விஞ்ஞானி, அது ஆக்கபூர்வ முயற்சிகளுக்குப் பயன்படுமென மகிழ்ந்தாராம். அது அழிவுச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதைக் கண்டு தமது வெற்றி குறித்து மனம் வருந்தியதாக வரலாறு தெரிவிக்கிறது.

இன்று கணனித்துறை முன்னேற்றம் அகில உலகிலும் கணிசமான அளவு தாக்கத்தை உருவாக்கியுள்ளமை வெளிப்படையானதொன்றே. இலங்கை நாடும் இதற்கு விதிவிலக்கானதொன்றல்ல.

சுருங்கச் சொன்னால், இன்று நாட்டில் அரச மற்றும் தனியார் துறைகளின் நிர்வாகத்தில் மட்டுமன்றி, வர்த்தகத்துறையிலும் கூட கணனிப் பயன்பாடு இன்றியமையாததொரு இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான இன்றைய இளம் சமுதாயம் கணனித் துறைசார் அறிவை ஈட்டிக் கொள்ள வேண்டியிருப்பது காலத்தின் கட்டாய தேவையாய் ஆகிவிட்டுள்ளது.

இரு தசாப்தகால யுத்தச் சூழலின் பின்னர், பிரச்சினைக்கான தீர்வை பேச்சின் மூலமே எட்டிட முடியும் என்ற உண்மையைப்

## நல்லதும் கெட்டதும்


பேரினவாதிகள் உணரத் தலைப்பட்டதன் விளைவே தற்காலிக யுத்தநிறுத்தம். கலங்கிக் கருமையாகிப் போயிருந்த நன்னீர், இதன் காரணமாய் படிப்படியாகத் தெளிவடைந்து வருவதாகத் தோன்றியது. நீண்டதொரு காலமாக எறிகணை வீச்சையும், விமானக் குண்டுத் தாக்குதலையும் கண்டும் கேட்டும் அனுபவப்பட்டும் மனதிறுகிப் போன யாழ்ப்பாணத்துச் சமூகம் யுத்த நிறுத்தத்தின் நிழலில் ஓரளவுக்கு அமைதியும் மன நிம்தியும் பெற்றதும் கூட வரலாற்றுப் பதிவுகளே.

பொதுவாகவே சிங்கள சமூகம் உணர்ச்சி வசப்படும் அல்லது உணர்ச்சி வசப்படுத்தப்படும் - வேளைகளில் என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்பதை உணரத்தவறி, தமது செயற்பாட்டின் விளைவு குறித்துச் சிந்திக்கத் தவறி வெறுமனே எடுத்தேன் - கவிழ்த்தேன் என்ற விதத்தில் செயற்படுவதாலேயே இனத்தின் பாரம்பரியம், கலாசார

(Vபக்கம் பார்க்க)

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. [ஆ-ர்]

# சுயமாகக் கற்கும் ஆற்றல் வளர்வதற்கு கற்றலிலும் ஓர் ஒழுக்கம் அவசியம்!



கௌரவ விஞ்ஞானக் கலாநிதி
பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்னம்

**❖ உங்களுடைய ஆரம்பக்கல்வி பற்றி...?**

☆ நான் மலேசியாவில் 23.12.1936 இல் பிறந்தேன். ஆரம்பக் கல்வியை ஆங்கில மொழியில் மலேசியாவில் ஆரம்பித்து 5ஆம் வகுப்பு வரை கற்றேன். அந்தக் காலத்தில் மலேசியா, கல்வியில் பின்தங்கியே இருந்தது. தொழிலுக்காகவே இலங்கையில் இருந்து மலேசியாவிற்குப் பலரும் சென்றனர். அவ்வாறே எனது தந்தையாரும் மலேசியா சென்றார். 2ஆம் உலக யுத்தகாலத்தில் மலேசியாவை ஜப்பான் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தவேளை பெரிய யுத்தம் மூண்டது. அந்த நேரத்தில் நான் சிறு பிள்ளையாக இருந்தேன். அந்தவேளையில் காடுகளில் தான் நாம் ஒளிந்திருப்போம் அந்தக் காலத்திலேயே யுத்தத்தை எதிர்கொண்டு விட்டேன். பின்னர் 1948 ஆம் ஆண்டு கல்வியைக் காரணம் காட்டி, எனது அம்மாவுடன் காரைநகருக்கு வந்து விட்டேன். காரைநகர் இந்துவில் 2வருடங்கள் கல்விகற்றேன். தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி, கொழும்புப் பல்கலைக்கழகம் என எனது கல்விச் செயற்பாடு வளர்ந்தது. பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் கல்வியைத் தொடர்ந்தேன். 1958ஆம் ஆண்டு பல்கலைக்கழகப் படிப்பை முடித்து வெளியேறினேன்.

**❖ கல்வித்துறையில் எங்கு நீங்கள் முதன்முதலாக கடமையாற்றினீர்கள்?**

☆ கொழும்பு பல்கலைக்கழகத்தில் தற்காலிக போதனாசிரியாராக ஒரு வருடம் கடமையாற்றினேன். 1959 இல் நிரந்தர நியமனம் கிடைத்தது, கணித விரிவுரையாளராக கொழும்பில் 20 வருடங்கள் சேவையாற்றினேன். 1975இல் பேராசிரியரானேன். 1978 ஆம் ஆண்டு மார்ச் 15 இல் பீடாதிபதியாகக் கடமையேற்று 1986 மார்கழி வரை சேவையாற்றினேன்.

**❖ உபவேந்தராக பணிபுரிய வாய்ப்புக் கிடைத்ததா?**

☆ 1981 இல் உபவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தேன். அந்தநேரம் இடம் பெற்ற தேர்வு முறை எனக்குச் சாதகமாக அமையவில்லை. பின்னர் அந்தத்தேர்வு முறை மாற்றி அமைக்கப்பட்டது.

**❖ நீண்ட காலம் பல்கலைக்கழங்களில் சேவைபுரிந்த உங்களுக்கு மறக்கமுடியாத சம்பவம் ஏதும் உள்ளதா?**

☆ அவ்வாறான விடயங்கள் நிறைய உள்ளன. எல்லாவற்றையும் இங்கு குறிப்பிடமுடியாது. ஒருமுறை பல்கலைக்கழகமொன்றில் மாணவர்கள் திரண்டு கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்களை எதிர்கொண்டு அவர்களின்பிரச்சினைகளை அறிந்து அவர்களைச் சமாதானப்படுத்தியனுப்பி வைத்தமை எனது மறக்கமுடியாத நிகழ்வுகளில் ஒன்று.

**❖ கணிதம் சார்ந்த உங்களின் ஆராய்ச்சிகள் பற்றி...?**

☆ 1961 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகத்தின் கிங்ஸ் கல்லூரியில் பட்டப்பின் ஆராய்ச்சிகளை மேற்கொண்டேன். 1964ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டன் பல்கலைக்கழகம் எனக்கு கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இவ்வாறு பல நாடுகளுக்கும் சென்றுஎனது கணித ஆராய்ச்சிகளைச் செய்துள்ளேன்.

> யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் அறுவருக்கு கௌரவ கலாநிதிப் பட் டங்கள் வழங்கப்பட்டன.
> அவர்களின் திறமைகள், சேவைகள், அனுபவங்களை வெளிக்கொணரும் பொருட்டு கலாநிதிகளுடன் காணப்பட்ட செவ்விகள் உதயனில் தொடர்ந்து பிரசுரமாகிவந்தன. அந்தத் தொடரில் கடைசிச் செவ்வி இது. கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்ட ஆறாமவரான பேராசான் க.சிவராமலிங்கம்பிள்ளை அதனைப் பெறுவதற்கு முன்னரே, ஓகஸ்ட் மாதத்தில் தேகவியோகம் அடைந்தார் என்பது தெரிந்ததே. 03

**❖ நீங்கள் இதுவரை சென்று திரும்பிய நாடுகள் பற்றி...?**

☆ மலேசியா, ஜப்பான், சிங்கப்பூர், இந்தியா, ஜேர்மன், ஒஸ்ரியா, டென்மார்க், இங்கிலாந்து போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்கவை. டென்மார்க்கிற்கு 2தடவைகள் சென்றுள்ளேன். 1999 இல் இங்கிலாந்து சென்று திரும்பினேன். ஓர் ஆராய்ச்சிக்காகவே சென்றிருந்தேன்.

**❖ அந்தக்காலத்து மாணவர்களுக்கும் இன்றைய மாணவர்களுக்கும் இடையில் உங்கள் அனுபவரீதியில் காணும் வேறுபாடுகள் பற்றிக் கூறமுடியுமா?**

☆ இன்றைய மாணவர்களிடம் சுதந்திரமாகப் படிக்கின்ற குணம் குறைவடைந்து செல்கின்றது. ஆராய்ந்து கற்கும் தன்மையும் நன்றாகக் குறைந்துள்ளது. அந்தக்காலத்தில் ரியூசன் என்று எதுவும இல்லை. சுதந்திரமாக வாசிக்கும் பழக்கம் உருவாகவேண்டும். என்னுடைய பாடத்தில் குறைவாகப் புள்ளிகளை எடுத்தாலும் மாணவர்கள் என் மீது நல்ல அபிப்பிராயம் வைத்துள்ளனர்.

**❖ கற்பித்தல்துறையில் உங்கள் அனுவத்தில் கண்ட உண்மை என்ன?**

செவ்வி: சுந்தரதன்

☆ நாங்கள் ஒழுங்காக நடந்தால் மாணவர்கள் கட்டாயம் எமது வட்டத்துக்குள் வருவார்கள். எனது அனுபவத்தில் கண்ட உண்மை இது. நாம் தவறாக நடந்து கொண்டு மாணவர்களைத் திருத்த முடியாது. எந்தப் பதவியில் இருந்தாலும் இந்தக் குறைபாடு உள்ளது.

**❖ தற்போது கணிதத்துறையில் மாணவர்களின் ஆர்வம் குறைவடைந்து செல்கின்றது அதுபற்றி...?**

☆ எந்த ஒரு மாணவருக்கும் அடிப்படைக் கல்வி அவசியம். அடிப்படைக் கல்வி இல்லாமல் எந்தத் துறையிலும் முன்னேற முடியாது. மாணர்வகளின் பயனுள்ள நேரம் வீணடிக்கப்படுகின்றது. தகவல் தொழில் நுட்பம் வளர்ந்து கொண்டு செல்வதால் இன்றைய மாணவர் சமுதாயம் மூளையை சுயமாகப் பயன்படுத்துவது குறைந்துபோவதே இதற்குக் காரணம். மாணவர்கள் மூளையை சுயமாகப் பயன்படுத்த வேண்டும்.

**❖ ஏனைய துறைகளில் உங்களுக்கு உள்ள பங்களிப்புப்பற்றி...?**

☆ அவ்வாறு குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை. (சிரிக்கிறார்) ஆயினும் எனது வேலையை முறையாகச் செய்து வருகிறேன். அவ்வளவுதான்.

**❖ உங்களுக்குக் கிடைத்த கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் பற்றி...?**

☆ எனது செயற்பாட்டிற்கு தரப்பட்ட 'திருப்தி' என்றே சொல்லலாம்.

**❖ இன்றைய மாணவர் சமூகத்துக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

☆ நடைமுறையில் மட்டுமல்லாமல் கற்றலிலும் ஓர் ஒழுக்கம் அவசியம். அந்த ஒழுக்கம் இருந்தால்தான் சுயமாகக் கற்கும் ஆற்றல் வளரும்; முன்னேற்றம் காணமுடியும். இதனைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும்.
தற்போது மாணவர்கள எந்தப்பிரச்சினையையும் சுருக்கமாக அணுகும் முறை குறைவடைந்து செல்கின்றது. இதனால்தான் பிரச்சினைகள் விரிவடைந்து செல்கின்றன. இந்த நிலை மாற்றமடைய வேண்டும்.

## யாழ்.பாணம்

*(IVபக்கத் தொடர்ச்சி)*

விழுமியங்கள் இனத்தின் தனித்துவம் அத்தனையையும் தொலைத்துவிட்டு நிற்பதாக விமர்சிக்கப்படுவதுண்டு.

இதற்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சமூகம் காலங் காலமாய்க் கட்டிக் காத்துவந்த - தமிழ் இனத்துக் கேயுரிய பாரம்பரிய பண்பாடுகளை மீறிவிடாத - மீறச் சக்தியில்லாத - மீறினால் சமூகத்தால் ஒதுக்கப்படும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளத் திராணியற்ற நிலையில் - ஊரோடு ஒத்துஓடு என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு ஒழுகுவதாலேயே இனத்தின் இருப்பு உறுதியும் வலிமையும் பெற்றுத் திகழ்கிறது.

சரி, விடயத்துக்கு வருவோம்.

கணனித் தொழில்நுட்பத்தால் துல்லியமான, விரைவான மற்றும் நேர்த்தியான நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள இயலுமென்ற நம்பிக்கை வலுப்பெற்றமை காரணமாக அரச நிர்வாகம் முதல் செய்தி ஊடகங்கள் வரை அந்த நடைமுறைக்கு மாற்றமுற்று வருகின்றன. தற்போது முற்றுமுழுதாக எனக் கூறமுடியாவிட்டாலும் வெகுவிரைவில் ஒட்டுமொத்தமாக நாட்டின் நிர்வாக நடைமுறைகளில் கணனித்துறை ஆதிக்கம் செலுத்தப்போகிறது.

இந்த உண்மையை நாட்டின் பொதுமக்கள் ஐயமற உணர்ந்துகொண்டுள்ளனர்.

அதற்கேற்ப நாமும் மாறித்தான் ஆக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

அந்த வகையில் யாழ்ப்பாணத்துப் பெற்றோர் தம்பிள்ளைகள் கணனித்துறைக் கல்வி பெற்றுயர வேண்டுமென்பதில் அதீத கவனம் செலுத்த ஆரம்பித்துள்ள வேளை இது.

எத்தனைதான் வாழ்க்கைச் சிரமம் இருந்த போதிலும் யாழ்ப்பாணத்துப் பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வி உயர்ச்சிக்கு எத்தகைய தியாகமும் செய்ய விழையும் இயல்பு படைத்தவர்கள்.

அந்த வகையில் தம்பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி உயர்வுக்காக - கணனித்துறைக் கல்வி வசதியை ஏற்படுத்திக்கொடுக்க முயலும் பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு ஊறு ஏற்படுத்தும் வகையில் ஒரு சில மாணவர்கள் நடந்துகொள்வதாகவும் பேசப்படுவது அவர்தம் பெற்றோருக்கு கவலையளிக்கக் காரணமாகிறது.

இணையத்தளம் என்பது கணனித்துறையில் அதிமுக்கிய வலையமைப்பு.

உலகத்தின் பல தரப்பட்ட நாடுகளின் அன்றாட நிகழ்வுகள், சம்பவங்கள் யாவற்றையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளும் வசதிகொண்டது.

அந்தந்த நாடுகளின் சமூக கலாசாரங்களுக் கமைந்த நிகழ்ச்சிகள் இணையத்தள வலையமைப்பில் உள்ளடங்குகின்றன.

உலகத்தின் சகல பாகங்களிலும் அன்றாடம் இடம்பெறும் பல்துறைசார் சம்பவங்களின் கதம்பத் தொகுப்பு இணையத்தள வலையமைப்பில் உள்ளடக்கம்.

பாலொடு நீர் கலந்திருப்பினும், அதனைப் பகுத்தருந்தும் திறமை படைத்ததாம் அன்னப்பட்சி.

மாணவ சமூகத்தின் குறிக்கோள் தமது கல்விசார் அறிவை வளர்த்துக்கொள்வதென்பதே. இணையத்தள வலையமைப்பில் தமக்குரிய - தமக்குப் பயனளிக்கவல்ல தகவல்களைத் திரட்டுவதன் மூலம் தமது கல்வித் திறமையை வளர்த்திட இயலும். ஆனால், ஒருசில மாணவர்கள் தமது கல்விசார் தேவைகளுக்கு அப்பாற்பட்ட - ஜனரஞ் சகமல்லாத - தமிழ்க் கலாசாரத்துக்குச் சற்றும் பொருந்தாத தகவல்களை இணையத்தள வலையமைப்பில் தேடிப் பெற்று - பார்த்து, அறிய முயல்வதன் மூலம் தமது நேரத்தை யும் காலத்தையும் வீண்விரயம் செய்வதாக நண்பரொருவர் குறைப்பட்டுக்கொண்டார்.

மாணவப் பருவம் மகத்தானது;காலம் பொன்னானது. இன்றைய எமது சிறார்களே நாளை இந்தச் சமூகத்தின் பொறுப்புக்களைத் தமது தோளில் சுமக்கக் கடமைப்பட்டவர்கள்.

காலத்தின் பெறுமதியுணர்ந்து, தமது மாணவப் பருவத்தின் பொறுப்புணர்ந்து இன்றைய எமது மாணவசமூகம் நேர்வழி சென்று, நாளைய நாட்டின் புத்திஜீவிகளாகப் பரிணமிக்க வேண்டுமென்பது யாழ்ப்பாணத்துப் பெற்றோரின் எதிர்பார்ப்பு.

நிச்சயம் எமது எதிர்பார்ப்பு நிறைவேறும் என நம்புவோம்!

பொன்வேளன்

# செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்...

பனங்கூடலைக் கடந்து செல்லையாத் தாத்தா வந்து கொண்டிருந்தார். அவரது கைகளில் சில பொலித்தீன் பைகள் இருந்தன. தாத்தாவைக் கண்ட பிரியன் ''தாத்தா வாறார்'' என்று கூவியபடி புளியடியை நோக்கி ஓடினான். மற்றவர்களும் அவனைப் பின் தொடர்ந்தனர். செல்லையாத் தாத்தா எல்லோரையும் நிற்குமாறு சைகை காட்டினார். ஓடிய சிறுவர்கள் நின்று தாத்தாவின் வரவை எதிர் நோக்கினர். ''என்ன தாத்தா ... கையிலை பொலித்தீன்?'' என்று கேட்டாள் சாந்தி.

''இண்டைக்கு உலகத்திலை இருக்கிற முக்கியமான சுற்றுச் சூழல் பிரச்சினையிலை பொலித்தீனும் ஒன்று. எங்கடை நாட்டிலை நாங்கள் கண்மண் தெரியாமல் இதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறம். இதுகளைப் பற்றி மற்றவை அக்கறைப்படாட்டாலும் பரவாயில்லை. ஆனால், நீங்கள் என்னுடைய அன்புக்குரியவர்கள். நல்ல விசயங்களிலை ஆர்வப்படுகிறவர்கள். பொலித்தீன் என்கிற தீய பொருளைப் பற்றியும் நீங்கள் அறிஞ்சு கொள்ள வேணும். அதுதான் வழியிலை அகப்பட்ட பொலித்தினுகளையெல்லாம் எடுத்து வந்திருக்கிறன்'' என்றார் தாத்தா.

''பொலித்தீன் எங்களுக்கு எவ்வளவு நன்மைகளைச் செய்யுது தாத்தா. காற்றுப் புகாமல் இருக்கவும், எண்ணெய் ஊறாமல் இருக்கவும், பொலித்தீன் பைகள் தானே உதவுது. தண்ணீரைக் கூடப் பொலித்தீனில் கொண்டுபோகலாம். ஒளி புகக் கூடியதாகவும் பொலித்தீன்தானே இருக்குது. அதாலைதானே எல்லாரும் பொலித்தீனைப் பாவிக்கினை'' என்றான் இனியன்.

''நான் மறுக்கேல்லை. ஆனால், அதின்ரை பாவனை அதிகரிச்சு, அது சூழல் பிரச்சினையளைக் கொண்டு வந்திட்டுது'' என்றார் தாத்தா. ''பொலித்தீனாலை என்ன சூழல் பிரச்சினை?'' என்று வினாவி னாள் பிரியங்கா.

''பொலித்தீன் என்பது இலகுவாக உக்கி அழியாத ஒரு பொருள். இண்டைக்குப் பொலித்தீன் இல்லாத இடமேயில்லை. சாதாரண ரொபி தொடக்கம் பெரிய பொதிகள் வரை எல்லாமே பொலித்தீனால்தான் பொதி செய்யப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி விட்டு வெளியே வீசி விடுகிறோம். இவை நிலத்தில் கிடந்து உக்காமல் இருக்கின்றன. மழை பெய்யும் போது இவற்றில் நீர் தேங்கி நிற்கிறது. இந்த அழுக்கு நீரில் நுளம்புகள் உற்பத்தியாகின்றன.

அதேபோல இந்தப் பொலீத்தீன்களைக் கால்நடைகள் உட்கொண்டு, சமிபாடடையாமல் இறக்கின்றன. நீர் நிலைகளுக்குள் விழும் பொலித் தீன்கள் நீரூற்றுக்களை அடைக்கின்றன. எல்லா இடங்களிலும் குப்பை போலப் பரவியிருக்கும் பொலித்தீன்களைச்



சேர்த்து எரிக்கும் போதும் பிரச்சினைதான். இவற்றை எரிப்பதால் வளிமண்டலத்திலை ஓசோன் மண்டலத்தை பாதிக்குது. இந்த ஓசோன் மண்டலந்தான் பூமியிலை உயிரினங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிற சூரியனின் புறஊதாக் கதிர்கள் பூமியை நேரடியாகத் தாக்காமல் பார்த்துக் கொள்ளும் கவசமாக இருக்குது. ஓசோன் படையிலை துவாரம் ஏற்பட்டால் பூமியிலுள்ள எங்களுக்குத்தான் பாதிப்பு. இப்பிடி பொலித்தீனுடைய தீமையான பக்கங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்'' என்று கூறி முடித்தார் தாத்தா.

'பொலித்தீன் தீமையானது சரி. பொலித்தீன் பாவனையை எப்பிடி நீக்கலாம். எங்கடை எல்லாத் தேவையிலையும் அதுதானே பயன்படுகுது'' என்றான் அகிலங்கன்.

''அந்தக் காலத்திலை நாங்கள் பொலித்தீனையே பாவிச்சனாங்கள். வாழையிலையிலை சாப்பிடுவம். மீன் வாங்கினாலும் தென்னோலையிலை செய்த உமலில்லதான் வாங்குவம். சிரட்டையிலையும், பிளாவிலையும் தண்ணி குடிப்பம். காசு வைக்கிற கொட்டப்பெட்டியிலையிலிருந்து குஞ்சுப் பெட்டி, மூடற்பெட்டி, கடகம் என்று பனையோலையால் செய்தவற்றால்தான் பொதி செய்வோம். காய்ந்த வாழைத் தடல் கூட சாப்பாட்டுக் கோப்பையாகவும், பொதி செய்யும் பொருளாகவும் பயன்பட்டிச்சுது. இதை விட கமுக மடல் சாப்பாடு பரிமாறவும், பொருள்களைக் காயவிடவும் பயன்பட்டிச்சுது.

இயற்கையிலை கிடைச்ச பொருள்களை , அதுவும் கழிவாகிப் போகிற பொருள்ளைப் பயன்படுத்தினோம். அந்தப் பொருள்கள் பிறகு உக்கிப் பசளையாச்சு. இந்தப் பொலித்தீன் வந்து கொஞ்சக் காலந்தான். பழையபடி இயலுமான வரைக்கும் நாங்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்வமெண்டால் பொலித்தீனை இல்லாமல் செய்யலாம்'' என்று தாத்தா சொல்லி முடிக்கவும்,

''எங்கடை வீடுகளிலை கிடக்கிற பொலித்தீனுகளை முதலிலை பொறுக்கி அப்புறப்படுத்துவமே'' என்று கேட்டான் பிரியன்.

''அப்புறப்படுத்திறது சரி. அதை எங்கை போடுகிறது?'' என்று வினாவினாள் பிரியங்கா. ''எல்லாருமாய்ச் சேர்ந்து ஒவ்வொரு வீட்டிலையும் பொலித்தீனைப் பொறுக்குவம். பிறகு அதையெல்லாம் ஒரு உரப்பையில போட்டு கட்டுவம் பிறகுமைதானத்திலை கொண்டு வந்து எரிப்பம்'' என்றான் இனியன்.

''எரிச்சால் ஓசோன் பாதிக்கப்படுமென்று தாத்தா சொன்ன வரல்லே'' நாங்கள் அதை ஒரு இடத்திலை புதைப்பம்'' என்றான் அகிலங்கன். ''பொலித்தீன் பைகளிலை நாங்கள் மரக் கன்றுகளை உற்பத்தி செய்வம். அதுக்குத் தேவையான பொலித்தீன் பைகளை எடுத்துக்கொண்டு, மிகுதியை ஒதுக்குப் புறமான ஒரு இடத்திலை தாழ்ப்போம். ஏனென்டால் பொலித்தீன் இலேசிலை உக்காது'' என்றார் தாத்தா.

''ஓம் தாத்தா. இந்த முறை பிரதான வீதியோரமாக மரக்கன்றுகளை நடுவம். வெயில் காலத்திலை பாடசாலை விட்டு நடந்து வரும்போது ஒதுங்க ஒரு நிழலும் இல்லை'' என்றாள் சாந்தி.

''அப்படியே செய்வோம்'' எனத் தாத்தா சொல்லவும், சிறுவர்களும் தலையசைத்தனர்.

'சரி, பொலித்தீன் சேகரிக்கத் தொடங்குவமா?'' எனத் தாத்தா கேட்கவும், தலையசைத்த படி எல்லோரும் தாத்தாவின் பின்னே சென்றனர்.

*(தாத்தா மீண்டும் வருவார்)* - **பாபு அண்ணா**

# திருக்குறள்



திருவள்ளுவர் பாரளவு பரந்த பொருளையெல்லாம் சுருங்கிய சொல்லால் அதன் பொருள் விளங்க ஆயிரத்து முன்னூற்று முப்பது பாடலுக்குள் அடக்கி எழுதப்பட்ட நூலே திருக்குறளாகும்.

இவை பத்துக் குறள் கொண்ட நூற்று முப்பத்தி மூன்று அதிகாரங்களாகப் பிரித்து எழுதப்பட்டது.


ஞானத்தின் அருள் கொண்டு ஞாலத்தின் நாளைய வாழ்வுதனை முன் கூட்டியே காட்டுகிறது இந்நூல். சாகாவரம் பெற்றுச் சரித்திரத்தில் இன்றும் என்றும் வாழ்கிறது.

கடலளவு விரிந்த பொருளையெல்லாம் கடுகளவில் சுருக்கிக் காட்டுவது இதன் பெருஞ் சிறப்பாகும்.

திருக்குறளை 40 பேர் ஆங்கிலமொழியில் மொழி பெயர்த்துள்ளனர். தமிழில் எழுதப்பட்ட இந்த நூலில் தமிழ் என்ற சொல் எங்கும் இல்லை. இதற்கு முதன்முதலில் மணக்குடவர் உரை எழுதினர். மூலத்தை முதலில் அச்சிட்டவர் தஞ்சையைச் சேர்ந்த ஞானப்பிரகாசர்.

**வி.துவாரகா**, திருக்குடும்ப கன்னியர் மடம்.

## உங்களின் கைவண்ணங்கள்



சாகித்தியன்,
தரம் - 10,
சென்.ஜோன்ஸ் கல்லூரி



திலக்சன் - பாலச்சந்திரன்,
தரம் - 06,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## சிந்தனைத்துளிகள்

- அறிவும், ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள்
- அறியாமையால் நாம் வாழ் நாளைக் குறைத்துக் கொள்கின்றோம்.
- உலகில் எதுவுமே இல்லாதவனுக்குத்தான் எதையும் தாங்கும் இதயம் உண்டு.
- தீக்குச்சி ஒருமுறை சிரிப்பதால் மெழுகுவர்த்தி வாழ்நாள் முழுவதும் அழுகின்றது.
- கட்டுப்பாடு மனிதனுக்கு அவசியம். கட்டவிழ்ந்தால் கெட்டுவிடும் இலட்சியம்.
- உண்மை மௌனிப்பதுண்டு; மரணிப்பதில்லை. பொய் குதூகலிப்பதுண்டு; நிலைத்திருப்பதில்லை.
- நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள்.

**சி.துஷானி,**
தரம் - 11, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## தீபாவளி

**தீபங்கள் ஏற்றிடும் தீபாவளியே**
**வருக வருக வருகவே!**
**தீமைகள் அகல வருகவே!**
**நன்மைகள் எங்கும் பெருகவே!**

**புது ஆடை கட்டி நாமுமே**
**வரவேற்போம் உன்னை மகிழ்வுடனே!**
**சிற்றுண்டி பலகாரம் செய்துமே**
**சிறுவர்கள் நாமும் உண்போமே!**

**நல்லவை எங்கும் நடக்கவே**
**நாட்டினில் சமாதானம் பொங்கவே**
**தீபங்களை வரிசையில் ஏற்றியே**
**தீபாவளியே உனைநாம் வரவேற்போமே!**

– **கி.கஸ்தனி** , யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.




# வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்திற்கு வர்ணம் தீட்டி கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி சிறந்த படங்களை அனுப்புவோரில் முதல் மூவருக்கு முறையே ரு100/=, ரு 75/=, ரு50/= பெறுமதி யான வர்ணம் தீட்டுவதற்கான உபகரணங்கள் பரிசில்களாக வழங்கப் படும். எங்கே முயன்று பாருங்கள்! கை வண்ணத்தைக் காட்டுங்கள்!!

*இந்தப் பரிசில்களை வழங்கும் நிறுவனம்: -*

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே : 222 5542

*அனுப்பவேண்டிய முகவரி:-*
**'வர்ணம் தீட்டுவோம்'** - 05, சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

வர்ணம் தீட்டி மகிழுங்கள் போட்டியில் ஏராளமான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு படங்களை அனுப்பியிருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயர் விவரம், பாடசாலை விவரம் என்பவற்றைக் குறித்து அனுப்பத் தவறியதால் அவர்களது வண்ணங்கள் தெரிவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. நீங்கள் வர்ணம் தீட்டி அனுப்பும் படத்துடன் உங்கள் பெயர், பாடசாலையின் பெயர், வகுப்பு போன்ற விவரங்களை தவறாமல் சேர்த்து அனுப்புங்கள்.

வர்ணம் தீட்டுவோம் போட்டி இலக்கம் - 04இல் தெரிவு செய்யப்பட்ட மூவரின் விபரங்கள் வருமாறு:-

- *முதலாம் இடம் :-*
  *இ.சங்கவி, தரம் - 3ஏ*
  *புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.*
- *இரண்டாம் இடம் :-*
  *கு.சிந்துஜன், தரம் - ?,*
  *சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.*
- *மூன்றாம் இடம் :-*
  *பொனிவெஸ் மாலின் வெல்ஷியா*
  *தரம் - 4பி,*
  *திருக்குடும்ப கன்னியர் மடம்.*

# மறந்தறியேன்!

*''உள்ளினென் அல்லெனோ யானே? உள்ளி*
*நினைத்தனென் அல்லெனோ பெரிதே?*
*நினைந்து*
*மருண்டனென் அல்லனோ உலகத்துப் பண்பே*
*நீடிய மரா அத்த கோடுதோய் , மலிர்நிறை*
*இறைத்து உணச் சென்று அற்று ஆங்கு*
*அனைப் பெரும் காமம் ஈண்டு*
*கடைக்கொளவே''*


இப்பாட்டைப் பாடியவர் ஔவையார் ஆவார். இது தோழி தலைவனைப் பார்த்து வினாத்தொடுப்பதாகவும் அதற்குத் தலைவன் விடையளிப்பதாகவும் அமைந்துள்ளது. குறுந்தொகையில் வரும் முல்லைத் திணைப் பாடல்களில் இதுவும் ஒன்று.

பொருள் தேடச் சென்று திரும்பிய தலைவனைப் பார்த்து, நீர் போன விடத்திலே எங்களைப் பற்றி நினைத்தீரோ! என்று தோழிகேட்டாள். அதற்குத் தலைவன் தந்த விடையே இப்பாடல். உள்ளுதல்- ஆழ்ந்து சிந்தித்தல், மருளுதல்-மயங்குதல், பண்பு - இயல்பு.

பிரிந்திருப்பார் காதல் பெருக்கால் வருந்துவர். சேர்ந்தபோது அவர்கள் துன்பம் தணியும்.

காதல் பெருக்குக்கு வெள்ளம் உவமையாகக் கூறப்பட்டது.

பொருள் இல்லாவிட்டால் இல்லறம் சிறப்பாக நடைபெறாது. இல்லறம் நல்லறமாக வேண்டுமாயின் செல்வம் வேண்டும். பண்டைத் தமிழர் இவ்வுண்மையை உணர்ந்திருந்தனர். ஆதலால் அவர்கள் மணம் புரிந்து கொள்வதற்கு முன்பே பொருள்தேடச் செல்வார்கள். பொருளீட்டிக்கொண்டு வந்த பிறகுதான் தாம் காதலித்த கன்னிகையரைக் கடிமணம் புரிந்து கொள்வர் அல்லது மணம் புரிந்து கொண்டபின் மனைவியரைத் தனியே வைத்து, வீட்டுப் பொருள் தேடப்போவார்கள். செல்வத்தைச் சேர்த்துக்கொண்டுவந்த பிறகே இனிது இல்லறத்தை நடத்துவார்கள். இது பண்டைத்தமிழர் வழக்கம்.



## தலைவனை மடக்கிட நினைத்த தோழி பதிலால் அவன் நிலை உணர்ந்தாள்

இவ்வழக்கப்படி மணம் புரிந்து கொண்ட ஒரு தலைவன் செல்வந் தேடச் சென்றிருந்தான். அவன் சென்ற செயலிலே வெற்றி பெற்றான். ஈட்டிய பொருளுடன் தன் மனத்துக்கினிய காதலியின் இல்லத்திற்குத் திரும்பினான். அப்பொழுது தோழி அவனைப் பார்த்து ஒரு கேள்வியைப் போட்டாள்.

நீர் எம்மை விட்டுப் பொருள்தேடப் பிரிந்து போனீர். பல திங்கள் பொருளீட்டுவதிலேயே காலங்கடத்தினீர். கருதிச் சென்ற காரியத்திலே வெற்றியும் பெற்றுத் திரும்பினீர். நீர் எம்மை விட்டுப்பிரிந்தபின் - பொருளீட்டுவதிலேயே கருத்தைச் செலுத்தியிருந்தபோது எங்களைப் பற்றி நினைத்தது உண்டா? அல்லது அடியோடு மறந்துவிட்டீரா? என்பதுதான் அவளுடைய கேள்வி. இக் கேள்விக்குத் தலைவன் தக்க விடையளித்தான்.

பெருவெள்ளம் வந்தது. அவ்வெள்ளம் பெருகியபோது அது உயர்ந்துள்ள மரக்கிளைகளையும் தொட்டுக் கொண்டு சென்றது. பிறகு அவ்வெள்ளம் வற்றியபோது தண்ணீர் அருந்தவேண்டியவர்கள் தங்கள் கையினால் தண்ணீரை இறைத்து உண்ணும் அளவுக்குச் சுருங்கிவிட்டது. இந்தக் காட்சியை நீயும் பார்த்திருக்கின்றாய்; நானும் பார்த்திருக்கின்றேன். என்னுடைய காதலும் அவ்வெள்ளத்தைப்போல அவ்வளவு பெரிதாக இருந்தது. எனது

### இலக்கியப் பூங்கா

அப்பெருகிய காதல் சுருங்கவேண்டுமானால் இங்கே வந்தால் தான் முடியும் என்பதை அறிந்தேன். அதனால், உங்களைப் பற்றியே நினைத்தேன்; ஒரு பொழுதும் மறந்தறியேன். உங்களைப் பற்றியே மீண்டும் மீண்டும் நினைத்தேன். அப்படி நினைக்கும் போது உலக இயல்பையும் நினைத்தேன். 'இல்லறம் நடத்துகின்றவன், அதற்கு வேண்டிய, பொருளைத் தேடப் பிரிந்தால் வெறுங்கையோடு திரும்பக்கூடாது; கருதிச் சென்ற பொருள் கைகூடிய பின்புதான் திரும்பவேண்டும் என்ற உலக வழக்கத்தையும் எண்ணினேன். இந்த நினைப்பும் உங்களை மறவாத காதலும் என்னைத் திகைக்கச் செய்துவிட்டன என்று கூறினான் தலைவன். இவ்வாறு தலைவன் கூறிய நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது இப் பாடல்.

— காப்பியன்

---

# அடையாளம்

**வி**நாசித்தம்பியருக்கு தன்ரை கடைசிக் காலத்தில் விட்டிலை இருக்கத்தான் கிடைக்காவிட்டாலும் ஒருமுறைபோய்ப் பார்த்தாலே பரம திருப்தியாக இருக்கும். சிறுகச்சிறுகச் சேமித்துக் கட்டிய வீடல்லவா அது. அதன் பெறுமதி அவருக்கும் ராசம்மாக்காவுக்கும்தான் தெரியும்.

''பாதையைத் திறந்ததாலை அப்பிளையும் அன்னாசியையும் கண்டதுதான் மிச்சம்! எவனெவனோ வெளிநாட்டுக்காரன் அவன் இவன் எல்லாம் வந்து போறான்; ஏ9 பாதைக்கு இரண்டு புறமும் உள்ள கடை ஒட்டுவெளிக்குத்தான் போக முடியுதில்லை. ''முகமாலைக்கு போகேக்கை இரண்டு பக்கமும் எட்டிப் பார்த்திட்டு வரத்தான் முடியுது''

தனது ஆதங்கத்தைக் குமுறிக் கொள்வார். காலை நாலு மணிக்கு எழுந்து கோயிலடிக்குப் போவார். குளத்தில் நீராடி தாமரைப் பூக்களைப் பறித்து கூடையில் வைத்துவிட்டு கூட்டத்தொடங்குவார். கூட்டிமுடிய நிலமும் வெளிக்கும். காலைப் பூசையும் கறுவல் ஐயரின் ஆசியும் பிரசாதமும் பெற்றுக்கொண்டே அன்றாடக் கருமங்களைத் தொடர்வார்.

இடம் பெயர்ந்த பிறகு ''முருகன்ரை வாசலிலை அன்னதானம் கொடுக்காமல் நான் ஒரு பிடி சோறும் சாப்பிடமாட்டன்'' என்ற பிடிவாதத்தோடு இன்றைக்கும் திரியிறார். பழங்கள் மட்டுமே அவரது ஆகாரம்.

விநாசித்தம்பியண்ணை கரம்பகத்துக்காலை போய் வீடு பார்க்கலாமாம். எது வந்தாலும் வரட்டும் நான் ஒருக்கா போய் வீடு வளவைப் பாத்திட்டு வாறதுதான்''

துரையனின் உற்சாகத்தோடு விநாசித்தம்பியரும் சேர்ந்து கொண்டார்.

**கடுகுக்கதை**

அன்று ஒருத்தருக்கும் தெரியாமல் இருவரும் உட்பாதையால் நடந்தார்கள். வீட்டிலை சொன்னால் பிள்ளைகள் மறித்து விடுவார்கள். ஒருவரோடு ஒருவர் பேசமுடியாதவாறு ஊரின் நினைவுகள் உருண்டு வந்தன. ஒருவாறு வீட்டை அடைத்து விட்டார்கள். முற்றத்து மாமரத்தை வைத்துக்கொண்டு அடையாளம் காட்டியதே துரையன் தான்.

''அடோ.... அடோ.... எங்கை போறது.....ஏய் .... ஏய்.... நில்....''

'' நாங்கள் எங்கடை வீட்டைப் பாக்கத்தான் வந்தனாங்கள்''

துரையன் இறுங்காமல் பதில் சொன்னான்.

முப்பது பரப்புத் தென்னையில் ஒன்றைக் கூட விட்டு வைக்கவில்லை. வீட்டின் நிலையும் கடைசியாகக் கொத்தப்பட்டிருந்தது.

'' போங்க..... போங்க.... இது உயர்பாதுகாப்பு வலயம்''

'' என்ரை வீடுதான் உனக்கு உயர்பாதுகாப்பு வலயமோ....???''

நாலைந்து கூலிப்படைகள் கையில் அகப்பட்டதைக் கொண்டு ஓடிவந்தன.

''என்ன அத்தாட்சி இருக்கு.... (சிங்களத்தில்)''

ஆணியில் மாட்டப்பட்டு அநாதரவாகக் கிடந்த விநாசித்தம்பியரின் கலியாணப் படத்தைக் காட்ட துரையன் கையை நீட்டியபோது....

வேண்டாமென்பது போல அவரின் உடல்மட்டும் அவனில் சாய்ந்து தடுத்தது.

- த.வினோதரன்

---

## மௌனக்கோப்பை

*மௌனங்களால்*
*நிரம்பித் ததும்பிய*
*கோப்பையோடு நான் திரிந்தேன்*
*நிரம்பித் ததும்பி*
*பின்... கொஞ்சம் கொஞ்மாய்*
*வழிந்து.. பொறுக்க முடியாது*
*விழுந்து உடைந்து போனது*
*மௌனக் கோப்பை*

*எங்கும் சிதறிய*
*கோப்பையின் துகள்கள்*
*உறைந்து கிடந்த மௌனங்களை*
*கிளறிக் கிளர்த்தி*
*மொழிபெயர்த்து*
*திசைகள் எங்கும்*
*'பிரதிகள்' அனுப்பின.*

*உனக்கும் கிடைத்தது*
*நலிந்துபோன*
*ஒரு மொழிபெயர்ப்பு பிரதி''*

*நீ 'என்னை' அறிந்த*
*நாளொன்றில்*
*சனசமுத்திரத்தில்*
*'உன்னையும் கண்டேன்*
*உன் முகத்தில் எழுதப்பட்டிருந்த*
*'இறுக்கமான' வரிகளை*
*வாசிக்க முடியாது திணறினேன்*

*மறுவாசிப்பை நிகழ்த்த முன்*
*உந்தன் முகம் மறைந்துபோனது*

*கரையின் மீது அலைகளை*
*விசிறி எறிகிறது கடல்*
*உந்தன்மீது இப்போதும்*
*மௌனங்களை எறிகிறது காதல்.*

- த.அஜந்தகுமார்

---

## இரு சிதையில் ஒரு வாழ்வு

*உவர் நீரேரியில்*
*தாளை மரங்ளை ஒதுக்கியபடி*
*தலை நீட்டுகிறான்*

*கையில் தூண்டில் தடியும்!*
*சிரட்டை நிறைய*
*மண் புழுக்களும்...!*

*எட்ட எட்டவாய்*
*மனித உருவங்கள்*
*நீரில் குறி வைக்கின்றன.*

*மணித்தியாலங்கள் நகர*
*மீன் சுமை*
*கரையேறிக் கொண்டிருக்கிறது*

*எல்லாமீன்களும் செத்துவிட்டன*
*அவன் குடிசை உயிர்ப்பதற்காக...*

*ஒருநிலையில்...*
*ஈச்சம் ஒலையில்*
*கோர்க்கத் தொடங்கினான்*

*தோளில் அழுத்திய சுமையை*
*பெட்டிக்காரன்*
*ஏற்றுக்கொண்டான்*
*பொக்கற்றைப் பொத்திக்கொண்டு*
*வீட்டை நோக்கி*
*மலர்வுடன் விரைகிறான்.*

*மீன்களின் விலையை*
*உலையாக உருமாற்றுகிறான்*
*அவன் மனைவி*


*மழலைகளின் சிரிப்பில்*
*மறக்க முடிந்தவனை*
*மீன்களின் துடிப்பு*
*பிடித்து உலுக்கிற்று!*

- த.வினோ

# கடந்த காலமும் கழிவிரக்கமும்

மூத்தையா கனகசபை, நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த ஓவியர்களுள் ஒருவர். ஓவிய ஆசிரியராகவும், அதேசமயம் ஓவியராகவும் செயற்பட்டு விடைபெறும் ஒரு தலைமுறையின் கடைசிப் பிரதிநிதிகளுள் ஒருவர். வரைவது என்பது தனக்கு ஆத்மதிருப்தியைத் தருவது எனக்கூறும் கனகசபை கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியின் தயாரிப்பாகும்.

1988 இல் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட எஸ்.ஆர்.கனகசபையின் வின்சர் கலைக்கழகம் ஏற்கனவே சுதேசிய மரபில் புழக்கத்திலிருந்த காண்பிய வெளிப்பாட்டு முறைகளிற்குப் பதிலாக காலனிய ஆட்சியுடன் முன்னிலைப்படுத்தப்படும் காண்பிய வெளிபாட்டுப்போக்கை உள்ளூரில் நிறுவனமயப்படுத்திய அரசு சாராத மிக முக்கியமான ஒரு அமைப்பாகும். ஓவியம் கற்பிக்கும் ஆசிரியர்களை உருவாக்குதல் என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டியங்கிய மேற்படி அமைப்பின் ஊடாகவே யாழ்ப்பாணத்தின் முன்னோடி ஆசிரியராகவும் - ஓவியராகவும் ஏக சமயத்தில் இயங்கிய தலைமுறை பிரதானமாக உருவாகியிருந்தது. மு.கனகசபை நேரடியாக



வின்சர் கலைக்கழகத்தின் தயாரிப்பாக இல்லாத போதிலும், பலவகையிலும் அதன் தொடர்ச்சியாகவும் - நீட்சியாகவுமே அவர் இருந்தார். அவருக்கு மட்டுமன்றி, அவரைப் போலவே கொழும்பு தொழில்நுட்ப்க் கல்லூரி, நுண்கலைக் கல்லூரியில் பயின்ற அவரோடொத்த காலகட்டத்தைச் சேர்ந்த அனைவருக்கும் இது பெரும்பாலும் பொருந்தும். அவரது ஓவியங்கள் ஊடாகப் பயணஞ் செய்யும் எவருக்கும் தெரியவரும்.

கனகசபை கடந்த - சென்று மறைந்த - ஒரு காலகட்டத்தைச் சேர்ந்தவர் - இறந்த காலகட்டத்தை ஓயாமல் பாடுபவர். அதனால் கழிவிரக்கம் நிரம்பிய ஓவிய வெளிகளை அதிகம் அவர் உருவாக்குகிறார். பெருமளவுக்குக் காலனிய காண்பிய வெளிப்பாட்டுப் பயிற்சிகளின் ஊடாக உருவாகியிருந்த ஆசிரியராகவும் - ஓவியராகவும் தொழிற்பட்ட தலைமுறையினரிடம் காணப்படும் கடற்கரைக் காட்சிகள் முதலான கையிருப்புக் (Stock) காட்சிகள் அவரிடம் உண்டேயாயினும், மேலோங்கி அவரிடம் வெளிப்பட்டு நிற்பவை 'பொய்யாய், பழங்கதையாய், போய்முடிந்த' ஒரு காலகட்ட யாழ்ப்பாணத்தின் இடங்களும், காட்சிகளுந்தான். அது அவரது இளமைக்கால ஞாபகங்களிலிருந்து மீண்டெடுக்கப்படும்




'அவரது' யாழ்ப்பாணம். அவற்றில்தான் அவரது ஆவி எல்லையில்லாமல் படரத்துடிப்பதை வேறெந்த ஓவியங்களை விடவும் உணரமுடிகிறது. அன்றைய திருமணக் காட்சிகள், செத்தவீடுகள், பிளாவில் கள்ளருந்திப் போதையுறுவோர், யாழ்ப்பாணத்துச் சித்தர்கள், நல்லூர் திருவிழாக்கள் என்பன இதற்கான சிறந்த உதாரணங்கள். நல்லூரில் தேர்த்திருவிழாவும், ஒரு முகத்திருவிழாவும் (குதிரைவாகனத் திருவிழா) இப்போதும் நடைபெறத்தான் செய்கிறது. மு.கனகசபை வரைவது அதையல்ல. பழைய நல்லூருக்கு அவர்போகிறார், முக்கோண கூரை முகப்புடைய பழைய நல்லூரைத்தான் அவரால் காணமுடிகிறது. அதனால்தான் நல்லூர் வீதியில் 'கோடாலிச் சாமி'யையும் அவரால் காணமுடிகிறது. அவர் வரைபவராகவும், சாட்சியாகவும் ஒருங்கே ஓவியத்தினுள் செல்கிறார் - 'இன்றிலிருந்து நேற்றுக்கு' இடைவிடாமல் யாத்திரை செய்கிறார், - சித்தர்கள் யாத்திரை போவதைப் போல. சிலவேளை அவர் உடன் நிகழ்கால இடப்பெயர்வுகளையும், குண்டுவெடிப்புகளையும், இடிந்த வீடுகளையும் வரைய முயன்றாலும் பெருமளவுக்கு அவை சித்திரிப்பு வரைபுகளாகவே அதிகம் நின்று விடுவதனைக் காணமுடிகிறது. அவரது பழைய காலம், நிகழ்காலத்தில் இருந்து அவரைத் தப்பிப் போகச் செய்கிறது. ஒரு கடந்த காலத்தினுள் அவர் சரணாகதி அடைகிறார். துக்கமும் - துயரம் கூடிய மகிழ்ச்சியும் அங்கே நிரம்புகிறது. அவர் அதனுள் வாழ்கிறார்.

கடந்து சென்ற காலம் மீதான கழிவிரக்கம் என்பது மனிதனது ஞாபகங்களின் பகுதியேயாயினும், எல்லோரிடமுமே விகிதாசார ரீதியான வேறுபாட்டுடன் அது உள்ளுறைந்தும் வெளிப்பட்டும் காணப்படுகிறதே. ஆயினும், மு.கனகசபையிடம் அது வெளிப்படும் அளவிற்கு, அவரது தலைமுறையில் அது வேறு யாரிடமும் வெளிப்பட்டிருப்பதாகச் சொல்வது கடினம். அ.இராசையாவின் நிலவுருக்களில், இராசரத்தி னத்தின் நிலவில் பயணஞ் செய்யும் வைக்கல் வண்டிகளில் அவையுண் டேயாயினும் கனகசபை யிடம்தான் அது பரந்த அளவிற் தொழிற்படுகிறது.



ஓவியர் கனகசபை

அவர் வெறும் பண்டைய நிகழ்ச்சிகளின் சித்திரிப்பாளரோ - பதிவாளரோ அல்ல. அவர் அவற்றின் சூழலை உருவாக்க முனைகிறார். சூழலின் விவரங்கள் அனுபவத்தைத் தொற்றவைப்பதன் பிரதான பகுதியாகிவிடுகின்றன. சென்று மறைந்த - மறையும் காலத்தின் வழக்குகள், ஆடைகள், மரபுகள் யாவற்றையும் அவை பிடித்து வைக்க முயல்கின்றன. அதுதான் மிக முக்கியமாக, அவரை ஏனையவர்களிடமிருந்து பிரித்து, தனித்து முன்னிறுத்தும் பண்பாகும். கடந்த ஒரு கால கட்ட காட்சிக் கலாசாரத்தை அவரைப்போல யாரும் பதிவு செய்யவில்லை.



அவரது நிறப் பிரயோகம் குறிப்பாக அவரது சிவப்பு, மண்நிறம், வெள்ளை, வெள்ளையுண்ட நீலம் முதலானவை அவரது கழிவிரக்கத்தின் தொனி நிலைகளைப் பரிமாற்றும் மிகமுக்கியமான பகுதியாகிவிடுகின்றன. வர்ணங்களைத் திட்டாகவும், அப்பியும் பிரயோகிப்பதான மனப்பதிவு ஓவிய வழி நுட்பம் அவரது முடிவடையாத கழிவிரக்கம் நிரம்பிய மனநிலையைப் பரிமாற்றுவதில் உதவி செய்துள்ளது என்றே கூறவேண்டும்.

சாம்பரான மழையில் கடந்த காலமெனும் தன்னுடைய குட்டி ஆட்டை இழுத்துச் செல்லும் மனிதன் வேறு யாருமல்ல.

பாக்கியநாதன் அகிலன்

---



## வானெழுந்து ஒளியேற்று!

வருடம் ஒன்றாய் உனதொளி
வாசல் வந்து போகிறது.

நெருடல் ஏதும் இல்லாமல் - தேகம்
நெருப்பாய் நின்று எரிகிறது.

ஒரு நாளில் உன் நினைவும்
இனிமின்றி கழிகிறது - ஏதும்

தருவாய் என்று நினைத்திருந்தோம்
இன்னலை யல்லவா தந்து போகிறாய்.

ஒரு வார்த்தையேனும் பேசுவாய் என்றால்
மௌனத்துடனேயே திரும்புகிறாய்.

இம்முறை ஏது கொணர்ந்தாய் எமக்கு?

காரிருள் விலக்கி - எங்கள்
காரியம் நிறைவேற.

இங்கு நீ தங்கிவிடு.

தமிழர் தேசமெங்கும் - இன்பம்
பொங்கிப் பிரவாகிக்க

தீப ஒளியே!
வானெழுந்து ஒளியேற்று! - சுயர்சன்

## வலியோடு வா

தூரம் அதிகமில்லை.
கூப்பிடு தூரம் வரையில் தான்
இலக்கு.

நெஞ்சிலே வலி....
எட்டி நடக்கும் பாதங்களிலும் வலி...
கண்களிலே தூக்கம்...
கைகளிலே சோர்வு...

இன்னும் சொற்ப தூரம் தான்
வலியோடு விரைந்து வா...!

தாயின் கருப்பையின் வலி
மழலையின் பிறப்புக்குத்தான்

வித்தின் வெடிப்பு
நாற்றின் வளர்ச்சிக்குத்தான்

ஏழையின் உழைப்பிலே வலி
ஒரு வேளை கஞ்சிக்குத்தான்

குயிலின் குரலில் வலி
விடியலின் செய்திக்காகத்தான்

செடியின் மொட்டிலே வலி
பூவொன்றின் மலர்வுக்குத்தான்

இடி, மின்னலால்
மோதும் முகிலுக்கு வலி
மண்ணில் மழைக்குத்தான்

தோழனே!
வலி என்பது உனக்கு மட்டுமல்ல

இயற்கைக்கும் வலிகள் உண்டு.
பூமியும் இதைத்தாங்குகிறது
அதனால் தான்
அடிக்கடி சீற்றம் கொள்கிறது
வலிகளைத் தாங்குபவனுக்கே
இந்த வையகம் சொந்தம்

இன்னும் இன்னும்
சிந்தனைகளோடு அடைகாக்காதே
சிந்தனை உணர்வுகளுக்கு
உருக்கொடு!

வலிகளைத் தாங்கி வா
வாசல் திறந்து வானத்தில் ஏறலாம்.
- சுதேசிகன்

## தீபாவளியே வருக!



## அமைதி நின்று நிலைத்திடவே!

ஆண்டுகள் அசைகின்றன ஆனந்த மில்லாது
ஆணவத் தீயாலே அமைதி நீறாகிறது
காண்கின்ற காட்சியெல்லாம் கண்ணீராய் மாறி
கண்கள் காய்ந்தன கவலைக் கனலாலே
வேண்டிய தேவர்கள் வேதனையைத் தீர்த்தவனே- எங்கள்
வாழ்க்கைச் சுமையதனை இறக்கிவிட உதவாயோ?
ஆண்டவரே இத் தீபாவளித் திருநாளில் வேண்டுகின்றோம்
அளித்திடுவாய் அமைதி நின்று நிலைத்திடவே.

குளப்பிட்டி - க.அருணைநாயகம்

# அழகான தோற்றம் வேண்டுமா?

மேனியழகிற்கும் மங்கையருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதைச் சொல்லி தெரிய வேண்டியதில்லை. ஆதிகாலத்திலிருந்தே பெண்கள் தமது மேனியழகைப் பேணுவதில் விசேட அக்கறை காட்டி வந்துள்ளனர். பெண்களின் கூந்தலழகு பற்றியும் சரும அழகு பற்றியும் வர்ணிக்காத புலவர்களே இல்லை எனலாம்.

எங்கள் மூதாதையரின் காலத்திலே மக்கள் தமது கூந்தலையும், சருமத்தையும், நகங்ளையும் நலமாக வைத்திருப்பதற்குப் பல்வேறு இயற்கை வழிகளைக் கையாண்டார்கள். ஆனால்,இக்காலத்தில் நிலைமைகள் மாறியுள்ளன. வீட்டு வேலைகளில் அல்லது அலுவலகக் கடமைகளில் மூழ்கியுள்ள பெண்களுக்குப் போதிய ஓய்வு நேரம் கிடைப்பது அரிது. எனவேதான், காலத்திற்கேற்ற புதிய வழிகளை அவர்கள் நாட வேண்டியுள்ளது.

இத்தகைய பெண்களுக்கு அருந்துணையாக அமைவதே 'பயோட்டினெக்ஸ் E கெப்சூல்.' பயோட்டினெக்ஸ் E கெப்சூலில் இயற்கையான விட்டமின் Eஉம் விட்டமின் Hஉம் சரியான அளவில் அடங்கியுள்ளன. அவை உங்கள் கூந்தலுக்கும், சருமத்திற்கும், நகங்களுக்கும் நிறைவான போஷாக்கை வழங்கும். நீங்கள் நாளொன்றுக்கு இரண்டு கெப்சூல் வீதம் தொடர்ச்சியாக பயோட்டினெக்ஸ் E கெப்சூல்களை எடுத்து வந்தால் எழிலான, ஆரோக்கியமான கூந்தலையும், மென்மையான பளபளப்பான சருமத்தையும், நலமான மினுமினுப்பான நகங்களையும் பெறுவீர்கள்.

தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற கெப்சூல் நமது நாட்டிலும் கிடைக்கப்பெறுவது ஒரு மகிழ்ச்சிக்குறிய விடயமாகும்.

பயோட்டினெக்ஸ் E பற்றி மேலும் அறிய விரும்பினால் 2470290 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.





## தலைமுடியைப் பாதுகாக்கும் உதிர்வதைத் தடுக்கும்

## பயோட்டினெக்ஸ்-E

**பயோட்டினெக்ஸ்-E** தலைமுடி உதிர்தல், உடைதல், நுனி வெடித்தல் ஆகியவற்றை முற்றாகத் தடுப்பதோடு சருமத்தில் சுருக்கம் விழுவதைக் குறைத்து அதனை மென்மையாகப் பாதுகாக்கும். விட்டமின் E, விட்டமின் H ஆகிய இரண்டுமே மிகச்சரியான அளவில் அடங்கியுள்ளதால் உங்கள் கேசத்திற்கும் சருமத்திற்கும் நிறைவான போஷாக்குத் தரும்.

**பயோட்டினெக்ஸ்-E** ஆரோக்கியமான கேசத்தையும் மென்மையான சருமத்தையும் பெறும் உங்கள் ஆசைக்கனவை நனவாக்க, தினமும் இரண்டு கெப்சூல் **பயோட்டினெக்ஸ்-E** எடுங்கள்.




**எச்சரிக்கை!**
போலி உற்பத்திகள் உள்ளதால் விட்டமின் E + H அடங்கிய **பயோட்டினெக்ஸ்-E** என்று கேட்டு வாங்குங்கள்

அருமையான கூந்தல்... அழகான மேனி...

இறக்குமதிசெய்து விநியோகிப்போர்:
ஆர்கெம்-கொழும்பு. தொலைபேசி :2470290


## மேலதிகக் கட்டணம் உடனடியாக மீளளிப்பு

இலங்கை கொமர்ஷல் வங்கி தனது கடன் அட்டைகளை வைத்திருப்போர் இலங்கையில் எரிபொருள் கொள்வனவுக்கு அவற்றைப் பயன்படுத்தும்போது விதிக்கப்பட்ட இரண்டு வீத மேலதிக கட்டணத்தை அண்மையிலிருந்து மீள வழங்கத் தொடங்கியுள்ளது. இதனால் கடன் அட்டைகளை வைத்திருப்போர், எரிபொருள் கொள்வனவு செலவை மட்டுமே செலுத்துவதை இது உறுதிப்படுத்துகின்றது. அநேகமான வங்கிகள் செய்வதைப்போல வார அல்லது மாத முடிவில் அன்றி, அன்றைய தினமே மேலதிக கட்டணம், கடன் அட்டை வைத்திருப்போருக்கு மீளச் செலுத்தப்படுகிறது.

அத்துடன், கொமர்ஷல் வங்கியின் கடன் அட்டை வைத்திருப்போர் அநேகமான வங்கிகள் விதிப்பதை விட மிகக் குறைந்த அதாவது மாதத்துக்கு 1.75 வீதம் முதல் 2.7 வீதம் வரை குறைந்த வட்டி வீதங்களை அனுபவிக்கும் வாய்ப்பை பெறுகிறார்கள். மேலும், கொமர்ஷல் வங்கி தனது கடன் அட்டையை வைத்திருப்போருக்குச் செலுத்துவதற்கான வட்டியைக் கணிக்கும்போது வட்டி மீது வட்டி விதிக்காததால் இச்சலுகை மேலும் கவர்ச்சிகரமாக அமைகின்றது. அத்துடன் கடன் அட்டை வைத்திருப்பவர்கள் கொமர்ஷல் வங்கியின் 128 கிளைகளில் அல்லது 207 ATM களில் தங்களின் கடன் அட்டைக் கட்டணங்களைச் செலுத்தமுடியும்.

1969ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கை கொமர்ஷல் வங்கி இந்நாட்டின் மிகப் பெரிய கணினி இணைப்பு வலையமைப்பை கொண்டிருக்கின்றது. அத்துடன் கொமர்ஷல் வங்கி பங்களாதேஷில் மூன்று பூரணத்துவமான கிளைகளையும், இரண்டு சேவை நிலையங்களையும் கொண்டுள்ளது.

இரண்டு புகழ்பெற்ற சர்வதேச வெளியீடுகளான, அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'குளோபல் பினான்ஸ்', பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'த பாங்கர்' சஞ்சிகை ஆகியவை 'இலங்கையின் மிகச் சிறந்த வங்கி'யாகவும், 'வருடத்தின் மிகச் சிறந்த வங்கி'யாகவும், இலங்கை கொமர்ஷல் வங்கியை முறையே தொடர்ந்து ஏழு ஆண்டுகளாகவும் தொடர்ச்சியாகக் கடந்த ஐந்து ஆண்டுகளாகவும் தெரிவுசெய்துள்மை குறிப்பிடத்தக்கது.


**ஐம்பதாவது நிறைவு விழாவை கொண்டாடுகின்றது யமஹா**

**YAMAHA**

**வாருங்கள் ! எங்களுடன் இணையுங்கள் . சர்வதேச தரத்திலான வீட்டு படக்காட்சி முறை ஒன்றுக்கு சொந்தக்காரராகுங்கள்.**

மூன்று அதிர்ஷ்ட சாலிகளுக்கு





**யமஹா மோட்டார் சைக்கிள் ஒன்றுக்குச் சொந்தக்காரராகிப் பெருமையடையுங்கள்**

லிபேரோ ஜீ 5 (Libero G 5) க்கு இந்தச் சலுகை செல்லுபடியாகாது.

Libero LX

LICENCE NO: CI/ 84/2005

விரையுங்கள்... யமஹா மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

நாடளாவிய விநியோகஸ்தர்கள்

★ கிரிபத்கொட- டில்சானி மோட்டோஸ்-தொ.பே: 011 5670214, 071 4036639 ★ கல்கிசை- மோட்டர் ஜீ.பி.-தொ.பே: 0777 725518, 078 5124597 ★ அம்பலாங்கொட- எம்.கே. றேடிங் லங்கா பிறைவேற் லிமிரட்-தொ.பே:091 4382374, 077 6236338 ★ காலி- எம்.கே. றேடிங் லங்கா பிறைவேற் லிமிரட்-தொ.பே:091 5458448, 077 6236338 ★ மாத்தறை- மகேஷ் என்டபிறைசஸ்-தொ.பே: 041 2224216, 077 3054150 பக்ஸ் 041 2230412 ★ அக்குறணை- மகேஷ் என்டபிறைசஸ்-தொ.பே: 0714 227232 ★ ஜாஎல- சனிலா புறமோசனல் சேர்விசஸ்-தொ.பே:077 3155139 ★ கண்டி- இஷாடி என்டபிறைசஸ்-தொ.பே:081 2202386, 0777 361920 ★ கேகாலை- கீறோ மோட்டர்ஸ்-தொ.பே: 077 6159421, 078 8915615 ★ குருணாகல்- இஷாடி என்டபிறைசஸ்-தொ.பே:037 2223878, 0777 361920 ★ தம்புள்ளை- டம்புலு மோட்டோஸ்-தொ.பே: 077 6886408, 0777 256555 ★ அனுராதபுரம்- சிங்குர்-தொ.பே: 025 2221823 ★ வாழைச்சேனை- லிப்பா அப்பா ரேடிங்ஸ்-தொ.பே: 065 2257651 ★ மட்டக்களப்பு- பற்றசன்ஸ்-தொ.பே:065 2223794, 0777 941571-பக்ஸ்:065 2226001 ★ கல்முனை- சிலோன் எம்.எம்.எஸ். கொம்பனி பிறைவேற் லிமிரட்-தொ.பே: 0672222306, 077 3107333 ★ அம்பாறை- அசிறி ரேடிங்-தொ.பே:0632222977, 0777 679757 ★ கொறனை- அனியூட்னி றேட் சென்ரர்-தொ.பே:034 5580349, 077 3031210 நிலுவா- பிறியங்கரா என்றபிறைசஸ் ★ இரத்தினபுரி- ஸ்ரீ நம்யா-தொ.பே:045 2222060, 071 7158156 ★ வலிவிப்பிட்டிய-கீதா என்டபிறைசஸ்-தொ.பே:047 2269424, 047 4379448 ★ பதுளை- ஜோர்ஜ் மோட்டோஸ்- 055 2223103, 0777 642136 ★ நீர்கொழும்பு- அமிலா மோட்டோஸ்- 0312224013, 0777 281576 நாத்தாண்டியா- எம்.பி.சி.எஸ்.- 0322254236 ★ மகாவேவ- டில்லான் றேட் சென்ரர்- தொ.பே:032 2254366, 0777 287102 ★ புத்தளம்- அல் அமானா சேர்விஸ் காஸ்ட்-தொ.பே: 032 2267266 ★ பொலன்னறுவை- ஈனோய் என்டபிறைசஸ்-தொ.பே: 027 2223203, 077 3079914 ★ மீகலவா- முனசிங்க அன்ட் பிறதர்ஸ்-தொ.பே: 025 2269613 ★ கக்கேகண்டியிலியா- இன்கறு றேடர்ஸ்-தொ.பே: 0252297536 ★ கந்தளாய்- தறங்கா மோட்டோஸ்-தொ.பே: 077 6159421, 026 2234205 ★ திருகோணமலை- றிங்கோ மோட்டவேஸ்-தொ.பே: 077 6510942, 077 60334592 ★ மதவாச்சி- ககதா மேச்சன்ற்-தொ.பே: 077 3049178 ★ வவுனியா- கயிலாஸ் மோட்டோஸ்-தொ.பே: 024 4589019, 0777 473459 ★ யாழ்ப்பாணம்- யமகா பஸாசா-தொ.பே: 0777 563803, 021 4590200, 0777 198000 ★ மன்னார்- செலெக்சன் மோட்டோஸ்-தொ.பே: 023 2232115 ★ கிங்குறாகொட- யெசத் என்டபிறைசஸ்-தொ.பே: 027 2247648, 0777 975531 ★ தபுதிகாம- முனசிங்க பிறதர்ஸ்-தொ.பே: 077 6502814 ★ மீறிகம- அடிகரி பைனான்ஸ்-தொ.பே:033 2276900, 0777 885514 ★ மாக-இலுப்பலாமா- கன்காளி என்ரபிறைசஸ்- தொ.பே: 025 2249620

"யமஹா கோர்னர்" 14 /9 சிறி ஜினானந்த மாவத்த கொழும்பு-2. தொ.பே: 2304231, 2304232, 4718603 தொ.ந: 94112304266.

அவசர அழைப்புகளுக்கு- உங்கள் வசதிக்காக 24 மணி நேர சேவை 077 3047251- 5



**உதயன்**

உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்கு கொழும்பு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

85, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை கிராண்டபாஸ்

தொ.பே. 0714150300



ஜே.ஆர்.ஜயவர்தன பதவிப் பொறுப்பேற்ற ஆண்டு

# 1977

## மக்களின் விருப்பும் ஸ்திரத்தன்மையும்

1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்தன நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார். மக்களின் நேரடியான விருப்பின்மூலம் நாட்டை முன்னெடுத்துச் செல்ல நேரடியான முடிவுகளை எடுக்கக்கூடிய தலைவர்களை உருவாக்கும் வாய்ப்பு இதன்மூலம் ஏற்பட்டது.

இதனால் நாட்டில் ஸ்திரத்தன்மை தோன்றியது.

ஜே.ஆர்.ஜயவர்தன 11 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தார்.

அத்தகைய ஸ்திர அரசியல் தலைமைத்துவமொன்றே இன்று நாட்டுக்குத் தேவை.

அத்தகைய தலைவர்களை உருவாக்கிய கட்சி ஐக்கிய தேசிய கட்சியே.



ஐக்கிய தேசிய கட்சி



**யுக புருஷர்களை உருவாக்கிய கட்சி ஐக்கிய தேசிய கட்சி!**